www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

4-10 ,7 -1993

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 6



## தமிழ்க் கைதிகளின் கதி என்ன?

ஒரு நெத்தியடியான எக்ஸ்ரே ரிப்போர்ட்

ராசிபலன்
சோதிட மாமணி தில்லை

லேடீஸ் ஸ்பெசல்

இளவரசி டயானாவுக்கு
இளவரசர் சார்ல்ஸ் உடன்
உறவு கசந்தது ஏன்?
இதுவரை வெளிவராத தகவல்

பாப்பா முரசு

சினி விசிட்

தாய்ப்பாலின் மகத்துவம்
(மருத்துவப் பக்கம்)

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்.

அன்பெனும் நீர் ஊற்றி
வேரூன்ற வைத்துள்ளீர்கள்.
இனி- விழுதுகள் விடவும்
விருட்சமாகவும்
உங்கள் உற்சாகம்
உரந்தந்தபடி இருக்கட்டும்.

பாராட்டுக்களால்தான்
எழுத்தாளர்கள் வாழ்கிறார்கள்.
எழுத்தாளன் வாழப் பணம் தேவைதான்.
ஆனால்
எழுத்தாளனின் எழுதுகோல் வாழ
உற்சாக மனங்களின்
உந்துதல் தேவை.
அது- உங்களிடமிருந்து
நிறையவே கிடைப்பதில்
சுமைகள் கூட
சுகங்களாகத் தெரிகின்றன.

■

பெண் வாசகர்கள்
நிறையவே எழுதுகிறார்கள்.
'எனக்கு வேண்டாம் இந்தப் பாவம்'
போன்ற கதைகள் வேண்டாம் என்று
ஏராளம் வாசகிகள் கோபப்பட்டிருந்தார்கள்.
உணர்வுகளை மதிக்கிறோம்.
தவறுகளைத் தவிர்க்கிறோம்.

■

இளம் எழுத்தாளர்களை
களம் காண அழைக்கிறோம்.
ஏற்கனவே,
'தேன் கிண்ணம்' நிரம்பிட
பலநூறு கவிதைகள் வந்து
காத்திருக்கின்றன.
சிலர் மிக நீளமாய் எழுதுகிறார்கள்.
தினமுரசுக்கு
சுருக்கமும் சுவையும் தான்
முக்கியம்.
அதனை மனதில் குறித்துக்கொண்டு
மடல்களில் உணர்வுகளைப் பதிவு செய்யுங்கள்.

■

மீண்டும் மறு முரசில்
சந்திக்கலாம்.

அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு
போன்: 820265

## அறிவித்தல்

தினமுரசு வாரமலரில் இடம் பெறும் போட்டிகளில் நீங்கள் பங்குகொள்ளும் போது- அஞ்சல் அட்டை முகப்பில் போட்டியின் பெயரைக் குறிப்பிடத் தவற வேண்டாம்.

முகவரி: தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

## பாராட்டுப் பெறும் கவிதைகள்

### குண்டுகள் பொழிந்த போதும்

குண்டுகள் பொழிந்த போது குழியினுள் தாயும் சேயும்
பண்டுதாம் செய்த வினைப் பயனது அனுபவித்து
கண்டுகொள்ளாதே குஞ்சே கடவுளே காக்க வேண்டும்.
மீண்டும் நாம் காலை உண்டு மகிழ்வுடன் இருக்கலாமே.

செல்லையா வல்லிபுரம்
கொழும்பு-13.

### உற்றதுணை

ஈரைந்து மாதம்
இரக்கமுடன்..
ஈன்றெடுத்த
இளஞ்சிட்டு. தன்குஞ்சு
ஊனமுற்ற நிலைகண்டு
பெற்றமனம்
ஊக்கமுடன் அரவணைத்து
உற்றதுணை கொள்ளுதலோ!

திருமதி திலகா சங்கர்
பவ்வகம, நாவலப்பிட்டிய.

### விலை வாசி

ஆ...
அரிசியின்
விலை மேலும்
அதிகரித்து விட்டதா?

எம். சுரேஸ்
கொழும்பு-15.

### ?

ஏராளம் துன்பங்கள்
பசியின் வேதனையோ
இறைவன் சோதனையோ?

செல்வி நசூஹா ஃபரீன் கலீல்
ஹேனமுல்லை
பாணந்துறை.

## கவிதைப் போட்டி இல-6



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். மனதில் கருத்தரிக்கும் எண்ணங்களை மடலில் பிரசவித்து அனுப்புங்கள்.
சுருக்கமாக சுவையாக. என்ன சரிதானே?

## கவிதைப் போட்டி இல—3

வருவது
சண்டை விமானமா?
சாப்பாட்டு விமானமா?

பே. தேவ மனோகரன்
வத்தளை.



### பரிசுபெறும் கவிதை

தேசத்தில் சிதறிவிட்ட
பரிணாமக் குண்டுகளின்
உருவமற்ற கதிர்கள்
மனித விந்தோடு
உறவாடிக் கொண்டதனால்
வீரித்துப் பாய்க்கிறான்-இந்த
விகாரித்த மகன்.

கு. வான்பிரபு
மடவளை-கண்டி.

### தவறில்லை- தருக

உலகம் மாறிவருகிறது. அதனைப் புரிந்து கொள்ள சன்னல்கள் சில தடையாக இருந்தால் உடைத்து விடுவதில் பிழை இல்லை. நமது புராதன சிற்பங்களில் 'செக்ஸ்' இருப்பது ஆபாசத்திற்காகவா? இல்லையே. புராணங்களில் இல்லாத செக்ஸா? வாழ்க்கைக்கு தேவையான ஒன்றை வரம்பு மீறாமல் வழங்குவது பிழை அல்ல.

**ஏ.மனோகரன்**
**சிலாபம்.**

முரசே! நீயே பத்திரிகை உலகின் சிரசு. வாசகரை தூண்டில் போடும் அரசு.

**செல்வி சமீனா உசனார்**
**பொலன்னறுவை.**

தலைநகர நிலவரம் மிகவும் நன்றாக இருந்தது. திரு. அநுரா தனது போக்கை திருத்திக் கொள்வதே அவரது கட்சிக்கு நல்லது.

**உலப்பனை ஹஸன்**
**உலப்பனை.**

எக்ஸ்ரே ரிப்போட்/அரசியல் அலசல் துணிச்சலான புதிய போக்கு தலைதூக்கி வருவது வரவேற் கத்தக்கது.

**கே. மரியநாயகம்.**
**குருநாகல்.**

நெத்தியடிப் பகுதி வெற்றிகரமாய் தொடரட்டும்.

**செல்வி எல். சபீனா.**
**கொழும்பு 7.**

மைடியர் முரசே! உள்ளம் கவர்ந்து விட்டாய்.

**ஏ.எல்.நௌபல்**
**காத்தான்குடி 6.**

சூடு-சுவை-சுவாரசியமுள்ள பத்திரிகை இல்லாத குறையை தினமுரசு போக்கும் என்று நம்புகிறேன்.

**எம். எஸ். கே. சக்கீலா**
**பலப்பிட்டிய.**

### உள்ளூர் முதல் உலகம் வரை

உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தந்து எம் நெஞ்சமதில் பதிந்துவிட்டாய்.

**கே. திலகரட்ணம்**
**அவிசாவளை.**

### எதிர்பார்த்திருப்பேன்

காதலனை எதிர்பார்த்து காத்திருக்கும் காதலி போல நான் உன் வரவை எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

**வி. மகேந்திர செல்வம்**
**மாபோல, வத்தளை.**

முரசே உனைக் காணாவிட்டால் என் முகமே வாடிவிடும்.

**கே. வசந்தன்**
**வட்டவளை.**

பேனா நண்பர் பகுதியை விரைவில் ஆரம்பிக்கவும்.

ராஜதந்திரியின் அலசல்கள் பிரமாதம்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முகமூடிகளை கிழித்துவிட்டார்.

**கே. குணானந்தன்**
**கண்டி.**

ஒவ்வொரு அம்சமும் ரியலி சூப்பர்.

**ஏ.ஜே.எம். பைஸர்.**
**கொழும்பு-12.**

தித்திக்கும் அம்சங்களால் என்னை திக்குமுக்காட வைக்கும் தினமுரசே! உன் விரைவான வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள்.

**ஹுஸைமா தாஹிர்**
**புத்தளம்.**

மூன்றாவது இதழில் முப்ப தாண்டு வளர்ச்சி.

**ஸ்ரீராம்-சிவா**
**கொழும்பு-11.**

இலைமறை காயான இளம் எழுத்தாளர்களை அரங்கேற்ற உதவும் மேடை தினமுரசு.

**ச. செவ்வேள்**
**மட்டக்களப்பு.**

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை மிகவும் திறம்பட விபரமாக வெளிப்படுத்துவது தினமுரசே.

**வே. கிருஷ்ணமூர்த்தி**
**ரொவில.**

எங்கள் உதடுகள் உரசிக் கொள்ளும் போது எங்கள் கைகளில் கிடைக்கும் பரிசு. அதுதான் தினமுரசு.

**மு. உவைஸ்**
**அக்கரைப்பற்று.**

# வாசக(ர்)சாலை

**மு.எ. தஸ்ரீப்**
**அக்கரைப்பற்று.**

முகில் வண்ணன் எழுதிய 'எனக்கு வேண்டாம் இந்தப் பாவம்' போன்ற கதைகள் எமக்கு இனி வேண்டாம்.

**என். ஈஸ்வரி**
**மட்டக்களப்பு.**

ஏன் சேர்? முகில் வண்ணனின் பிற்போக்குத்தனமான சிந்தனைக்கு முரசா கிடைத்தது.

**ஆர். கலையரசன்**
**பண்டாரவளை.**

'எனக்கு வேண்டாம் இந்தப் பாவம்' நல்ல கரு. நல்ல நடை.

**மு. பாலகிருஷ்ணக்**
**திருமலை.**

எக்ஸ்ரே ரிப்போர்ட். துணிச்சலுக்கு முரசு என்று பறை சாற்றுகிறது. நாரதர் தொடரட்டும்.

**எஸ்.என். வாகீட்**
**நீர்கொழும்பு.**

அதிரடி அய்யாத்துரையின் அடியே அடிதான். எங்கே அவர் இந்த வித்தையைக் கற்றாரோ?

**மா. சர்புதீன்**
**குருநாகல்.**

ஜெனரல் ஹமில்டனின் பேட்டி அருமை. வெளிவராத உண்மைகள் வெளிவந்தன.

**வ. உதயகுமார்**
**உன்னாஸ்கிரிய.**

உண்மையை உண்மையாகச் சொல்லும் உனக்கே உண்மை சொந்தம்.

**எம்.ரி.எம். ஹரீஸ்**
**புத்தளம்.**

தித்திக்கும் தீஞ்சுவையால் என் அடிமனதில் இடம்பிடித்தாய்.

**தி. சின்னத்தம்பி**
**அவிசாவளை.**

சிந்தியாவின் பதில்கள் சூப்பர். முகில் வண்ணனுக்கு ஏன் பெண்கள் மீது கோபம்?

**வாணி**
**வத்தளை.**

ப.வல்லிபுரம்-கொழும்பு-13, கே.ஆர். ஞானேந்திரன்- பண்டாரவளை, சுப்பையா அந்தனி-பூண்டுலோயா, ரா. நவந்தராஜா-டயகம, சுந்தரப் பிரியா, லிஸா-திருமலை, ப.புவனேஸ்வரன், ரொஷான், ராஜசேகர், ராசலிங்கம்-தலவாக்கல, ஏ.ஹமீட்-அக்குறணை, ஏ.எஸ்.எம்.ரிஸ்வி-மதவாச்சி, சாந்தி ரஞ்சன்-கொழும்பு-4, எஸ்.கே.தங்கதுரை-அவிசாவளை, எம்.ஏ.ஸீன் பாயிஸ்-புத்தளம், நாகமணி மகேந்திரலிங்கம்- தெஹிவளை, தி.இரத்தினம- அவிசாவளை, சஹாரானா சுபைர்-கொத்தாந்தீவு, என்.எம்.எம்.சியாமா-வறக்காப்பொல, சதாம்-புத்தளம், ஈ.ராஜா-நுவரெலியா, பி.ராசியப்பன்-லிந்துலை, சர்ஜியா பானு-ஏத்தாளை, எஸ்.எம். அமீன்-சாய்ந்தமருது, எஸ்.தேவி-கம்பளை, வே.ராஜன்-கலஹா, ஏ.ஆர். அபூல் அலம்கான்-கண்டி, ரி.சண்முகம்-கொழும்பு-13, ஏ.பி.மன்சூர்-கெகுணகொல்ல, எஸ்.எம்.மாஹிர்-புத்தளம், எம்.ரபீக் ரம்ளான்-ஹட்டன், அஸீமர்-எருக்கலம்பிட்டி, எம்.எம். இப்றாஹீம்-மதுரங்குளி, ரஹ்மா-பாணந்துறை, எஸ்.கண்ணா-வெள்ளவத்தை, என்.ஐ.ஹில்பாஸ்-கல்பிட்டி, எம்.வஸீர்-கொழும்பு12, ஏத்தாளை செல்வி, வி.சங்கர்-திருகோணமலை

## இறக்குமதிச் சிரிப்பு



**சுவை அனுபவத்தை பகிர்ந்து கொள்ள ஆசையா?**
உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சுவையான அனுபவங்களை சுருக்கமாய்- ஒரு புள்ஸ்காப் தாளின் அரைப் பக்கத்திற்கு வரக்கூடியதாய் எழுதுங்கள். சுவையிருப்பின் பிரசுரமாவது நிச்சயம்.

**பேனா நண்பர்கள் அரங்கம்**

உங்களின் கோரிக்கை ஒன்று நிறைவேறுகிறது.
புகைப்படம் அனுப்பும் விருப்பம் இருந்தால் பாஸ்போட் சைஸ் புகைப்படம் அனுப்பலாம்.
புகைப்படம் அனுப்ப முடியாதவர்கள் விபரங்களோடு எழுதுங்கள்.

# பொருட்கள் மீதான தடைநீக்க அறிவிப்பு வடபகுதி மக்கள் சந்தோசப் பூரிப்பு

(யாழ் நிருபர் வர்மா)

புலிகளின் காவலில் இருந்த பொலிசாரை விடுவிக்கும் விடயத்தில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து தடை செய்யப்பட்ட பொருட்களின் மீதான தடை நீக்கப்பட்ட அறிவித்தல் வெளியானது. தடை நீக்கப்பட்ட பொருட்களின் பட்டியலும் வெளியிடப்பட்டது.

அந்தச் செய்தியினை அறிந்த வடபகுதி மக்கள் ஆடிப்பாடி ஆனந்தக் கூத்தாடாத குறையாக பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

வவுனியாவில் பெரும் பண்டிகை நாட்கள் போல வியாபார நிலையங்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

வியாபாரம் சுறுசுறுப்பானதில் வர்த்தகர்களுக்கும் மகிழ்ச்சிதான்.

அடிக்கடி பாதுகாப்புப் படையினரால் போடப்படுகின்ற ஊரடங்குச் சட்டங்களால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மக்கள் வருவது பாதிக்கப்படும் போது வர்த்தகர்களும் பாதிப்படைந்தே வருகின்றார்கள். இப்போது வியாபாரம் களை கட்டி இருப்பதில் அவர்களும் மகிழ்ச்சி அடைந்தி ருக்கிறார்கள்.

இதேவேளையில் மக்கள் பொருட்களை வாங்குவதில் முண்டியடிப்பதைப் பார்த்த சில வர்த்தகர்கள் வழக்கமான விலையைவிடச் சற்றுக் கூடுதலான விலையில் பொருட்களை விற்றதாக சிலர் பேசிக் கொள்வதையு கேட்கக் கூடியதாக இருந்தது.

வவுனியாவிலிருந்து யாழ் குடாநாட்டிற்குக் கொண்டு செல்லப்படும் சைக்கிள்களுக்கு புலிகள் தமது தடைமுகாமில் வைத்து வரி அறவிடுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குக் கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை அறவிடப்படுவதுண்டு. விடுதலைப் புலிகள் அமைப்பினரைப் பொறுத்த வரையில் தனிநாட்டுக் கோரிக்கையில் அவர்கள் உறுதியாக இருப்பதனையே சைக்கிள்களுக்கு வரி அறவிடும் விடயமும் கோடிட்டுக் காட்டுகிறது.

தடை செய்யப்பட்ட பொருட்களுக்குத் தடை நீக்கப்பட்டமையானது தமது நிபந்தனைகளுக்குக் கிடைத்த வெற்றிய[illegible]வெ தமிழீழ விடுதலைப் புலிகள் [illegible]தினர் கருதுகின்றனர்.

சில[illegible]கள் கூறுவது போல விடுத[illegible]ள் தமது கொள்கைகளை [illegible]றிக் கொள்ளுகின்ற எவ்[illegible] அறி[illegible]ியும் தென்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பிரச்சாரச் சாதனங்கள் பொலிசாரின் விடுவிப்பு விடயத்தில் தமது அணுகுமுறைகள் வெற்றியளித்துள்ளதாகக் கூறிவரும் அதேவேளையில் இலங்கை அரசு மீதும் குறைகூறியே வருகின்றன.

தமது உறவினர்களை விடுவிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்று சிங்களப் பொலிசாரது உறவினர்கள் கூறிய கருத்துக்களைப் புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்புச் செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் வீரசேகராவிற்குத் தாம் வழங்கிய மரியாதையானது ஒரு நாட்டின் முக்கிய அதிகாரி இன்னொரு நாட்டிற்குச் செல்லும் போது அந்த நாடு வழங்கும் சம்பிரதாயமான மரியாதையைப் போன்றதே என்று புலிகள் கூறுகின்றனர்.

## வாகரையில் இராணுவம் பாடசாலையிலும் முகாம்?

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரைப் பகுதியில் தமது நிலைகளை வலுப்படுத்துவதில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு தற்போது ஏழு இராணுவ முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. அங்குள்ள பாடசாலையிலும் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

இரவு ஏழு மணி முதல் அதிகாலை 5.30 மணிவரை மக்கள் நடமாட்டத்திற்கும் அப்பகுதிகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடலில் மீன்பிடிக்கவும் இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

## விசாரிக்கப்படவில்லையாம் மோதிலால் சொல்கிறார்!

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகரான திரு. மோதிலால் நேரு தினமுரசுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கனடா தாயகம் பத்திரிகையினை மேற்கோள் காட்டி, அவர் விசாரிக்கப்பட்ட செய்தியினை வெளியிட்டிருந்தோம்.

அவ்வாறு எந்தப் பொலிஸ் அதிகாரியாலும் தான் விசாரிக்கப்படவில்லையென்று திரு. மோதிலால் தெரிவித்துள்ளார்.

## அறப்போராட்டத்திற்கு மரியாதை அதனால் தான் விடுதலை

## புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிக்கை



அஹிம்சைப் போருக்கு கௌரவம் கொடுத்தே பொலிசாரை விடுவிக்கத் தாம் இணங்கியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணத்தில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அஹிம்சைத் தத்துவத்தின் ஆத்மீக அர்த்தத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரான நாங்கள் எப்போதும் மதிப்பளிப்போம். அன்னை பூபதி, தியாகி திலீபன் ஆகியோரின் அறப் போராட்டத்தை நான் இந்த நேரம் நினைத்துப் பார்க்கிறேன். அவர்களின் அறப் போராட்டத்திற்கு இந்தியா மதிப்பளிக்கவில்லை. ஆனால் புலிகள் இயக்கத்தினரான நாங்கள் சிங்களக் கைதிகளின் உண்ணாவிரத அறப் போராட்டத்திற்கு மதிப்பளித்துள்ளோம் என்று தெரிவித்திருந்தார்.

விடுவிக்கப்பட்ட பொலிசாரின் தாயார் ஒருவர் பிரபாகரனுக்குத் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும், புலிகளைப் பற்றிய அச்சமூட்டும் கருத்துக்கள் தவறானவை என்பதைத் தான் அறிந்து கொண்டுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் கூறினார்.

இதே வேளையில் யாழ்ப்பாண வர்த்தகர் சங்க உறுப்பினர்கள் தமது இயக்கத்திடம் உத்தரவு பெற்ற வியாபாரிகள் ஆகியோரை அழைத்து புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் கூட்டம் ஒன்றை நடத்தினர். அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவு விநியோகம் தொடர்பாக அக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கடந்த 26ம் திகதி புனர்வாழ்வு ஆணையாளர்நாயகம் பிரிகேடியர் விரசேகரா மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற போது வடபகுதி மக்களுக்குத் தேவையான பொருட்களின் பட்டியல் என்று ஒரு நீண்ட பட்டியலைப் புலிகள் அவரிடம் கையளித்தனர்.

தடை நீக்கப்பட்ட பொருட்களை வடபகுதிக்கு விரைவாகத் தருவிப்பதில் விடுதலைப் புலிகள் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

## சொந்தக் கட்டடம் இருக்கும் போது இரவல் கட்டடம் தேவைதானா?

(நிந்தவூர் நிருபர்)



கிழக்கிலங்கையைச் சேர்ந்த நிந்தவூரில், உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கென பல லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடம் பலவருட காலமாக இப்படி மூடப்பட்ட நிலையிலேயே தூங்கிக் கொண்டிருக்கின்றது. அரச அலுவலகங்கள் பல நிந்தவூரில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் போது அரசின் பணத்தில் கட்டப்பட்ட இக்கட்டிடம் பூட்டிய கதவு திறக்கப்படாத நிலையில் புறக்கணிக்கப்பட்டிருப்பதன் 'மர்மம்' என்ன? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## சந்தை வியாபாரிகள் தெருவில் பாதசாரிகள் நெருக்கடியில்!

(புத்தளம் நிருபர்)

புத்தளம் நகரிலுள்ள முக்கிய வீதிகளுள் ஒன்றான போல்ஸ் வீதியில் பாதசாரிகளும், வாகனங்களும் போக்குவரத்து செய்ய முடியாமல் பெரும் அவதிக்குள்ளாக வேண்டியுள்ளது.

மிகவும் முக்கிய வீதியான இவ்வீதியின் இரு பக்கத்திலும் சந்தை வியாபாரிகள் கடைகளை அமைத்து வியாபாரம் செய்து வருகின்றனர். பொருட்களை கொள்வனவு செய்வோர் பாதையிலே நின்று பொருட்களை வாங்குவதால் வாகனப் போக்குவரத்து செய்வது மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துகின்றது.

முன்பு தினசரி சந்தை இருந்த இடத்தில் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளே இவ்விதம் பாதை ஓரத்தில் வியாபாரம் செய்கின்றனர். தினசரி சந்தைக் கட்டிடம் உடைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு தற்காலிகமாக இந்த போல்ஸ் வீதியில் கடைகள் அமைத்து கொடுக்கப்பட்டது.

மாதங்கள் பல கடந்தும் உடைக்கப்பட்ட தினசரி சந்தைக் கட்டிடம் இன்னும் கட்டப்படாததால் வியாபாரிகள் இந்த பாதை ஓரங்களிலேயே தொடர்ந்தும் வியாபாரம் செய்ய வேண்டியுள்ளது.

தினசரி சந்தைக் கட்டிடம் உடனடியாக கட்டப்பட்டு வியாபாரிகளின் இந்த அவல நிலை போக்கப்படுவதுடன் சீரான வாகனப் போக்குவரத்துக்கும் வழி செய்ய வேண்டுமென பல வியாபாரிகள் "தினமுரசு"க்குத் தெரிவித்தனர்.

## முகப்பில்

நடிகர்' பிரசாந்தின் தந்தையாரும் நடிகருமான திரு. தியாகராஜன் தினமுரசுவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், தினமுரசின் அமைப்பையும், செய்திகள் வெளியிடும் முறையையும் பெரிதும் பாராட்டியுள்ளார்.

அவருக்கு ஒரு கவலை. பிரசாந்த் மீது ஏன் கசப்பு? வளர்ந்து வரும் இளம் நடிகருக்கு ஆதரவு கொடுக்க வேண்டாமா என்பது தான் அது.

அவர் அனுப்பிவைத்துள்ள பிரசாந்தின் புகைப்படம்தான் முகப்பில்.

எமக்கா கசப்பு?

## திறக்கப்படவிருக்கும் செயலகம்

(நிந்தவூர் நிருபர்)

அரசாங்கத்தின் நிருவாகப் பரவலாக்கல் திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறைப் பிரதேச செயலகம் எதிர்வரும் ஜூலை மாதம் 17ம் திகதி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

நெசவுக்கைத்தொழில் அமைச்சர் ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீதின் அழைப்பை ஏற்று வருகை தரும், புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை அமைச்சர் திரு.பீ.தயாரத்ன பிரதேச செயலகத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைப்பார்.

# வண்ணத் திரையுலகின் மோதல்களும் கண்ணைக் கசக்கும் தொழிலாளர்களும்!

புதிய திரைப்படங்கள் தயாரிப்பதையும், பெரிய நடிகர்களின் படங்களை புதிதாக வாங்குவதையும் விநியோகஸ்தர்கள் தயாரிப்பாளர்கள் சங்கம் நிறுத்தி வைத்துள்ளது.

ஆனாலும் சில தயாரிப்பாளர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

நடிகர் ரஜனிகாந்த் நடித்த உழைப்பாளி திரைக்கு வந்துள்ளது. சத்யராஜ் நடித்த உடன்பிறப்பு திரைக்கு வரத் தயாராகிறது. விற்பனையும் ஆகிவிட்டது.

இந்த மோதலால் பெரிய நடிகர்கள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை.

ஆனால் துணை நடிக, நடிகையர்கள், மற்றும் சினிமாத் தொழிலையே நம்பியிருக்கும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் போன்றோர் வயிற்றில் அடிவாங்கியிருக்கின்றனர்.

கவர்ச்சியான சினிமா உலகின் உள்ளே வயிற்றுப் பசியோடு வாடும் ஜீவன்கள் அவர்கள்தான்.

இந்த நிலையில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் தேர்தல் நடைபெறவிருந்தது. அத்தேர்தலை தள்ளிப்போடுமாறு கோரி பிரபல இயக்குநர் பாரதிராஜா சென்னையில் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

ரசிகர்களைப் பொறுத்தவரையில் சினிமா உலகின் மோதல்கள் பற்றி எந்தக் கவலையும் கிடையாது. ஆனால் தமது அபிமான நட்சத்திரங்களின் சம்பளத்தை குறைத்துக்கொள்ளச் சொல்லும் தயாரிப்பாளர்கள் மீது கோபம். அவ்வளவுதான்.

தென்னிந்தியாவின் ஹொலிவூட்டான கோடம்பாக்கத்தில் ஏழைத் தொழிலாளர்களின் பெருமூச்சுக்கள் மட்டும் பெரிதாய்க் கேட்கின்றன.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சினிமா உலகப் பிரமுகர்களைச் சந்தித்து அண்மையில் பேச்சு நடத்தினார். பிரச்சனை தீர்ந்த பாடாக இல்லை.



உண்ணாவிரதம் இருக்கிறார் பாரதிராஜா-நேரில்சென்று நெருக்கமாய் இருந்து குசலம் விசாரிக்கிறார் குஷ்பூ

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


மலையாள
ஜோதிட மாந்திரிகம்

ஆண், பெண் வசியம் 24 மணித்தியாலங்களிலும். ஜோதிடம், மலையாள மாந்திரிகம், கை ரேகை, எண் ஜோதிடம், பிரசன்ன ஆருடம் உங்கள் எதிர்காலம், நிகழ் காலம், நினைத்த காரியம், உங்கள் பிரச்சனை எதுவாக இருந்தாலும், தொழில், வியாபாரம், தீராத நோய், கிரகபீடை, வெளிநாட்டு தடை, வெளிநாட்டு கடித போக்குவரத்து, வெளி நாட்டில் உள்ளவர்களை பற்றி அறியவும், வெளி நாட்டில் உள்ளவர்களை வசமாக்கவும், மை வெளிச்சம் பார்க்கவும், உலக புகழ் மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி மலையாள ஆசான் பரம்பரை ஏட்டு சுவடி மலையாள மாந்திரிக மந்திராசாரி குரு சிஷ்ய மாந்திரிகர் மந்திராசாரி குருஜியை சந்திக்க.

KURUGEE
TULIP INN
225, KOLLUPITY(JUNCTION)
COLOMBO-3
SRI LANKA
Tel.437874,435802.


## தேவஸ்தானமும் தேவையும்

கொழும்பு ஆமர்வீதி பரடைஸ் பிளேஸ் அருள் மிகு ஸ்ரீ மகா காளியம்மன் தேவஸ்தான மூலஸ்தான கட்டிட வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது. நிதி உதவி, அல்லது பொருள் உதவி வழங்க விரும்பும் அனைவரும் தங்களது பெயர், நட்சத்திரம், விலாசம் சரியாகக் கொடுக்கவும். அம்மனுக்குச் சாத்தப்பட்ட விபூதி பிரசாதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

தகவல்
சி.தியாகலிங்கம்
தேவஸ்தான செயலாளர்.

# சுற்று மதில் சுவரோவியம்

(கிண்ணியா நிருபர்)

தி/அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தின் சுற்று மதிலை அழகுபடுத்தும் வேலைகளில் இளைஞர் சமூக வேலை ஒன்றியம் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.




இவ் இளைஞர் சமூக வேலை ஒன்றியத்தினரால் கருத்தாழம் மிக்க பல படங்கள் வரையப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு படத்தையே இங்கு காண்கிறீர்கள்.

# விண்ணப்பம் வாங்கிய வேலை வாய்ப்பு பணியகம் நஷ்டஈடு வழங்க பின் நிற்பது ஏன்?

கடந்த 1991ஆம் ஆண்டு நிகழ்ந்த குவைத்-ஈராக் யுத்தத்தினால் உயிர்-உடைமை-தொழில் ஆகியவற்றை இழந்து நிர்க்கதியான சகல நாட்டுத் தொழிலாளர்களுக்கும் நஷ்ட ஈட்டுப்பணம் வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் நஷ்ட ஈட்டு ஆணைக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டமை சகலரும் அறிந்த விடயமாகும்.

பிரஸ்தாப ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் மேற்படி யுத்தத்தினால் பாதிப்புற்ற இலங்கைப் பிரஜைகளின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை ஸ்ரீலங்கா வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கடந்த ஆண்டில் திரட்டியிருந்தது. அத்துடன் ஒவ்வொருவருக்கும் விண்ணப்பப்படிவங்களும் தொடர்பு சுட்டிலக்கங்களும் கொடுக்கப்பட்டன. இதற்கமைய சகலரும் தத்தமது பாதிப்பு தொடர்பான பூரண விபரங்களை உள்ளடக்கி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பல மாதங்களாகி விட்டன. பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகளோ அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமோ இது வரையில் பிரஸ்தாப நஷ்ட ஈட்டுப் பணம் வழங்குவது பற்றிய எந்தவொரு அறிக்கையையேனும் வெளியிடாமல் இருப்பது சம்பந்தப்பட்ட இலங்கைப் பிரஜைகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய ஆசிய நாடுகள் சிலவற்றில் இந்த நஷ்டஈட்டுப்பணம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுவது நஷ்ட ஈட்டுப் பணத்துக்காக விண்ணப்பித்த நம்மவர்களுக்கு மேலும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

தகவல்
எம்.எச்.எம். ஹாரித்

## வீடில்லாதோராய் வாழும் தமிழ், முஸ்லீம் குடும்பங்கள்!

(குருநாகல் நிருபர்)

குருநாகல் மாவட்டத்தில் 12000ம் வறிய தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் சொந்த வீடின்றி அவஸ்தைப்பட்டு வருகின்றனர்.

1977ம் ஆண்டு முதல் இன்று வரை கடந்த 15 வருட காலமாக தமிழ், முஸ்லிம்களின் வீட்டுப் பிரச்சனைகள் கவனிக்கப்பட வில்லையென இங்கு வாழ் தமிழ் முஸ்லிம்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக இங்கு வாழ் மக்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ் முஸ்லிம்களுக்கு கிடைப்பதில்லை. இதற்காக இதுவரை குரல் கொடுத்தவர் யாரும் இல்லையென கவலை தெரிவிக்கப்படுகின்றது.

## உற்பத்தியாகிறது உப்பு! புத்தளத்தில் சுறுசுறுப்பு!

(எமது புத்தள நிருபர்)

புத்தளம் நகரிலுள்ள தனியார் உப்பு உற்பத்தி செய்யும் உப்பளங்களில் இவ்வருடத்திற்கான பெரும் போக உப்பு உற்பத்தி வேலைகள் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள புத்தளம் உப்பளங்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான மெட்ரிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது.

முன்பு, உற்பத்தி செய்யப்படும் அனைத்து உப்பும் உப்புக் கூட்டுத்தாபனத்திற்கே விற்பனை செய்யப்படல் வேண்டும் என்ற நியதி இருந்து வந்தது.

மேலும் முன்பு உற்பத்தி செய்யப்பட்ட உப்பை கூட்டுத்தாபனம் குறைந்தவிலைகொடுத்தே கொள்வனவு செய்து வந்தது.

காலஞ்சென்ற ஜனாதிபதி திரு. ரணசிங்க பிரேமதாச அவர்களின் பணிப்புரையையடுத்து இந்த விதிமாற்றம் செய்யப்பட்டது. உற்பத்தி செய்யப்படும் அனைத்து உப்பும் உற்பத்தியாளர்களே விற்கும் உரிமையை அவர் பெற்றுக் கொடுத்தார்.

இதன் மூலம் நீண்டகாலம் இருந்து வந்த குறை அகற்றப் பட்டதால் உற்பத்தியாளர்கள் நல்ல பயனை பெற ஆரம்பித்தனர்.

இந்த வருட பெரும் போக உற்பத்திக்கு காலநிலை ஒத்துழைத்தால் எதிர்பார்க்கும் இலக்கை விட அதிகரித்த உப்பு உற்பத்தி செய்ய முடியுமென பல உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உப்புகளில் மிகவும் ருசி வாய்ந்தது புத்தளம் உப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்முனை "சாகிறா" வின் கல்விச் சுற்றுலா

(கல்முனை நிருபர்)

கல்முனை "சாஹிறா" தேசிய பாடசாலையின் ஆண்டு 9 மாணவர்களும், ஆசிரியர்களும் பிரதி அதிபர் ஜனாப் ஏ.எம். முஸ்தபா அவர்களின் தலைமையில் கல்விச் சுற்றுலாவொன்றை அண்மையில் மேற்கொண்டு, அவர்கள் இலங்கையின் புராதன வரலாற்றுச் சம்பவங்கள், தொழிற்சாலைகள், தேசியப் பேரவை கோள்மண்டலம், பொருட்காட்சிசாலை மிருகக் காட்சிசாலை, விமானநிலையம் பேராதனைப் பூங்கா, புனிதஸ்தலமான ஜெய்லானிப் பள்ளிவாசல் போன்றவைகளைப் பார்வையிட்டு அண்மையில் கல்லூரிக்கு மீண்டனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் சுற்றுலா அமைப்பாளரும் பிரதிப் பகுதித் தலைவருமான ஜனாப் ஏ.எம். கான் ஆசிரியர் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையக மண்ணில் இருந்து ஒரு ஆவேசமான கடிதம்!



எமது மலையக தோட்டப்புற தமிழ் பாடசாலைகளின் நிலமை பெரிதும் கவலைக்குரியு இடமாக உள்ளது. காரணம் அதன் வளர்ச்சி வேகம் குறைந்து கொண்டிருப்பது தான். இதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆனாலும் முக்கியமான காரணங்களை பார்ப்போமேயானால் அவற்றில் சில அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களும் முக்கிய காரணமாக உள்ளனர்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி ஒழுங்காக நடைபெறுவதற்கு முக்கியமானவர் அதிபரே. ஒரு பாடசாலை தாழ்ந்து போவதற்கு வித்திடுபவரும் அதிபரே. ஆனால் எமது மலையக பாடசாலைகளில் பெரும்பாலானோர் மலையக அதிபர்களே தற்பொழுது உள்ளனர். ஆனபோதும் அவர்கள் சிலரின் கவனக் குறைவினால் எம் இளம் சமுதாயத்தினர் முன்னேற முடியாமல் புலம்புகின்றனர். ஒரு அதிபர் புதிதொரு பாடசாலைக்கு வந்த உடன் அங்கு சிறப்பாக கல்வி நடைபெறுகின்றது. ஆனால் கால போக்கில் வரவர மாமியார் கழுதை போல என்ற பழமொழிக்கினங்க கல்வி குன்றிய நிலமைக்கு வந்து விடுகின்றது. இதற்கு காரணம் சில அதிபர்களே. அவர்கள் ஏதோ தன் பாட்டில் இருந்து விடுகின்றார்கள். தன் பாடசாலை வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் கல்வியின் வளர்ச்சி பற்றி சிந்திக்கவேண்டும். அவர்களோ தொழில் தானே என்று இருந்து விடுகின்றார்கள். பாடசாலையை கவனிப்பதுமில்லை. ஒவ்வொரு அதிபர்களும் தங்களுக்கென்று ஒரு பாட அட்டவணையை ஒதுக்கி கொள்கின்றார்கள். ஆனால் அவர்கள் படிப்பிப்பதுமில்லை. காரணத்தை கேட்டால் வேலையால் பாடசாலையில் இருப்பதுமில்லை. ஒவ்வீஸ் வேலை என்று சமாளித்துவிடுகின்றார்கள். அப்படியானால் பதிலாக வேறு ஆசிரியர்களை நியமிக்கலாமே? அதுவுமில்லை. வரவர பாடசாலை ஒழுக்கம் குன்றி வருகின்றது. அடுத்த படியாக பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கியஸ்தவர்கள் பெற்றோர்கள் தான். இவர்கள் பாடசாலையில் கவனம் செலுத்துவது குறைவு. நான் போகவில்லை நீ போகவில்லை என்று பாடசாலையில் நடைபெறும் கூட்டங்களுக்கு போவதில்லை. ஆனால் வெளியில் நின்று பாடசாலை ஒழுங்கில்லை என்று கதைப்பார்கள். இவர்களின் ஒத்துழைப்பு மின்மையால் பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஏனோதானோ என்று போய்விடுகின்றார்கள். ஒரு மாணவன் கல்வி கற்பதற்கு முக்கிய நபர் பெற்றோரே. இவர்களின் கவனகுறைவினால் நல்ல சிறந்த சமூக பிரஜைகள் வீணாகப் போகிறார்கள். ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் பற்றிய கவனத்தை அதிகப்படுத்த வேண்டும் அதுமட்டுமின்றி பாடசாலை வளர்ச்சியில் அவர்களும் பங்கு கொள்ள வேண்டும்.

இதனை தொடர்ந்து மலையகத்து கல்வி வளர்ச்சிக்கு முக்கிய பிரமுகர்கள் மாணவர்களும் ஆசிரியர்களுமே. இன்றைய மாணவர்கள் கல்வியில் அக்கறையிருந்தும் அதற்கு சரியான வழிகாட்டி இல்லாமல் வீணாகப் போய்கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் சிறுவயதிலே வேலைக்கு செல்வதை தடுக்க வேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் தான் கல்வி கற்று சிறந்த எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும். இலட்சியங்களை உருவாக்கி கொள்ள வேண்டும். அப்போது எமது மலையகம் வளர்ச்சி பெறும். அதற்கு உறுதுணையாக ஆசிரியர்கள் எமது மாணவர்களின் வகுப்புக்களை சரிவர நடாத்த வேண்டும்.

ஆசிரியர்களும் கடமை என்று என்னாமல் எவ்வளவு நேரம் தான் கற்பிக்க முடியுமோ அவ்வளவு நேரம் படித்துக் கொடுக்க வேண்டும். அப்படி செய்தால் நிச்சயமாக குறைந்த காலத்தில் மலையக கல்வி உயர்வு அடைய வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாறு எமது மலையக கல்விக்கு நாம் ஒவ்வொருவரும் உதவினால் பிரச்சனைகள் தீர்ந்து கல்வியில் உயரலாம். அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து செயல்பட வேண்டும் எப்போதுமே இப்படியே இருக்க வேண்டுமா? ஏன் நாம் நல்ல நிலைக்கு வரக்கூடாதா? ஏன் மலையகம் விடிவு பெற கூடாதா? அதற்கு முக்கியம் கல்வி வளர்ச்சி இதனை உணர்ந்து ஒவ்வொரு மலையக பிரஜையும் முன்வந்து உழைக்க வேண்டுமென பிராத்தனை புரிவோம்.

நவமணி தயாலெனின்
கொண்டகல டிவிசன்
லபுக்கலை.

## 'பா' மீது பாராமுகம்

கடந்த 4 வாரமாக 'பா'னாவை பறிகொடுத்து ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. பிரதான நுழைவாயிலில் உள்ள பெயர்ப் பலகையிலேயே இந்த பரிதாப நிலை.

எத்தனை நாட்களுக்கு தான் இந்த அரைகுறை தமிழை பார்க்க முடியும். 18.06.93 அன்று வரை இது திருத்தப் படவில்லை.

இந்த பரிதாப நிலைக்கு பரிகாரம் தேடுவார்களா? சம்பந்தப்பட்டவர்கள்.

செல்வன் எஸ்.அலெக்சாந்தர்
கொட்டகலை.

## பள்ளம் மேடான பாதையிலே...

கற்பிட்டி தேர்தல் தொகுதியில் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்தாந்தீவு போக்குவரத்துப் பாதை பள்ளமும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த பாதையால் வாகனம் செல்ல முடியாது. இந்த பாதையைத் திருத்தம் செய்து வெகு காலமாகி விட்டது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

தகவல்: எம்.ஏ.ஏ.ஜுனூத்
கொத்தாந்தீவு.

## பாதிக்கப்படாமல்......

மட்டக்களப்பு நகரத்தில் இருந்து 16 மைல் தூரத்தில் உள்ள எமது கிராமங்களாகிய பெரிய போராதீவு, முனைத்தீவு, ஆகிய இரு கிராமங்களும் பொற் தொழிலாளர்கள் அதிகம் உள்ள கிராமங்கள் ஆகும். இங்கு 12 வயதிற்கு மேற்படாத சிறுவர்களும் பொற்தொழிலுக்கு ஊக்குவிக்கப் படுவதால் பாடசாலைப் படிப்புக்கு முற்றுப்புள்ளி ஏற்படுகிறது. எனவே அவர்களது கல்வி வளர்ச்சி பாதிக்கப்படாமல் சம்பந்தப்பட்டவர்கள் நடந்து கொள்வது நன்மை பயக்கும்.

ந. துவாரகன்
முனைதீவு.

# புகார் பெட்டி

புகார் பெட்டியில் இடம்பெறும் விடயங்கள் யாரையும் புண்படுத்தவல்ல, தவறுகளை திருத்திப் பண்படுத்தவே. எனவே தனிநபர்கள் மீதான தாக்குதல்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. புகார்பெட்டியில் உள்ள கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்துகள் இருந்தால் எழுதி அனுப்புங்கள். இடம்பெறும்.

## மைதானம் கிடைக்குமா?

கோட்லொட்ஜ் தோட்டத்தி லுள்ள பல மாணவர்கள் அவர்களது திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கும் பல நூற்றுக் கணக்கான விளையாட்டு வீரர்கள் இருந்தும் திறமைக்கு தடையாக இருப்பது ஒரு மைதானம் இல்லை எனும் குறையாகும். இங்குள்ள மாணவாகள் விளையாடுவதென்றால் ஏறத்தாள 15 கிலோமீற்றர் தூரத்திற்கு சென்று பணம் செலுத்தி மைதானத்தில் விளையாட வேண்டிய இக் கட்டான நிலை ஏற்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் வீரர் களின் எதிர்காலம் பாதிக்கப் படாதா? இம்மாணவர்களின் மனநிலை குறுகிவிட்டதா? எனவே சம்பந்தப் பட்ட அதிகாரிகளும் சமூக நலன் விரும்பிகளும் இவ்விடயத்தில் அக்கறை காண்பித்து இக்குறையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதே என் அவா.

தகவல்: எஸ். கிருஷ்ண குமார்
கோட்லொட்ஜ்
கந்தப்பனை.

## மின்சாரம் வர ஏன் தாமதம்?

அக்கரைப்பற்று, ஆறாம் குறிச்சிக்கு உட்பட்ட இசங் கணிச்சீமை எனும் கிராமத்துக்கு அண்மையில் மின்சாரவசதி வழங்கப்பட்டது பலர் அறிந்த உண்மை. இருந்தும் மின்சாரம் இக்கிராமத்துக்கு முழுமையாக அளிக்கப்படவில்லை, மூன்று மைல் தூர இடைவெளியுடைய இக் கிராமத்துக்கு இரண்டு மைல் தூரம் வரைக்கும் மாத்திரமே மின்சார வசதி வழங்கியுள்ளார்கள். மற்றைய ஒரு மைல் தூரமும் இதுவரை இருளில்தான் மூழ்கிக்கிடக்கிறது. எனவே இருளில் கிடக்கின்ற மீதமானவர்களுக்கும் உரியவர்கள் ஒளி கொடுக்க முன் வாருங்கள் என வேண்டுகிறேன்.

ஆலம்குளத்தூர் ரோஷான் ஏ.ஜிப்ரி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே

நாரதர்

இராணுவரீதியில் மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் தம்மால் திட்டமிட்டுக் காய் நகர்த்த முடியும் என்று புலிகள் நிரூபித்துள்ளார்கள்.

38 பொலிசாரையும், ஒரு இராணுவ வீரரையும் விடுவிக்கும் விடயத்தில், கைகளைக் கட்டிக் கொண்டு நின்று புலிகள் கேட்டதையெல்லாம் கொடுப்பதை தவிர அரசுக்கு வேறெந்த வழியும் இருக்கவில்லை.

தென்னிலங்கையில் சிறையில் உள்ள தமது உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலைத்தான் புலிகள் முதலில் கேட்டார்கள்.

இரண்டு.

யாழ் குடாநாட்டுக்கு கொண்டு போகக் கூடாது என்று தடைவிதித்த பொருட்களை, தடைநீக்கி தாராளமாக அனுப்பவேண்டும், நாம் கைதிகளை அனுப்பி வைக்கிறோம் என்று புலிகள் புதிய கோரிக்கையை முன்வைத்தார்கள்.

அரசுக்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலமை.

சரியான கோணத்தில் புலிகள் முடிச்சைப் போட்டார்கள்.

38 பொலிசாரையும், இராணுவ வீரரையும் பார்வையிட யாழ் சென்ற அவர்களின் உறவினர்

பொருட்களில் பற்றி போன்ற சில பொருட்கள் தவிர ஏனைய வற்றுக்கு இருந்த தடை நீக்கப்பட்டது.

உண்மையில் அரசாங்கம் தற்போது தடைநீக்கியுள்ள பொருட்களின் பட்டியலைப் பார்ப்போமானால் அரசாங்கம் இதனை முன்னரே செய்திருக்கலாம். தமிழர்களின் அபிமானமும் கிடைத்திருக்கும்.

பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள், சைக்கிள்கள் போன்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடை அனாவசியமானதாகவே இருந்தது.

புலிகள் அவற்றைப் பயன் படுத்துகிறார்கள் என்று காரணம் சொல்லப்பட்டது.

புலிகள் சுவாசிக்கிறார்கள் என்பதற்காக காற்றையும் தடை



# தமிழ் பேசும் கைதிகளின் கதி என்ன?

புலிகளின் முக்கிய பிரமுகர்கள் எவரும் கைதிகளை ஒப்படைக்கும் இடத்திற்கு வரவில்லை. என்றாலும் பிரிகேடியர் வீரசேகராவுக்கு மகிழ்ச்சிதான். அரசாங்கமும் கைதிகளைப் பொறுப்பேற்க ஒரு சிப்பாயை அனுப்பிவைத்திருக்கலாம்.

# புலிகள் பூட்டிய சிறைக் கதவங்கள் திறக்குமா?

1986ம் ஆண்டு புலிகள் தாம் பிடித்து வைத்திருந்த இராணுவ வீரர்களை விடுவிப்பதற்குப் பதிலாக தமது இயக்க உறுப்பினர்கள் இருவரை அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்று கோரினார்கள்.

அருனா, காமினி என்கின்ற அந்த இருவரையும் விடுவித்து புலிகள் வசம் இருந்த இராணுவ வீரர்களை அரசாங்கம் மீட்டெடுத்தது.

அப்போது யாழ்ப்பாண கோட்டையில் இராணுவ முகாம் இருந்தது. கோட்டை முகாம் அருகே நடந்த கைதிகள் பரிமாற்றத்தின் போது கிட்டுவும், இராணுவ அதிகாரி கொத்தலாவலையும் கட்டியணைத்துக் கொண்டனர். கொத்தலாவலை ஒரு சிறந்த வீரர் என்று கிட்டுவும் கிட்டு சிறந்த வீரர் என்று கொத்தலாவலையும் பரஸ்பரம் புகழ்ந்து கொண்டதாகவும் அப்போது பேசப்பட்டது.

இப்போதும் முன்னைய நடைமுறையைப் பின்பற்றவே புலிகள் முதலில் நினைத்தார்கள். அதன்படியே கோரிக்கையும் விட்டார்கள்.

அந்தக் கோரிக்கையோடு மாத்திரமே நின்று கொண்டிருந்தால் தற்போது கிடைத்துள்ள அரசியல் லாபத்தை அவர்கள் அடைந்திருக்க முடியாது.

இப்போது கல் ஒன்று-மாங்காய்

களிடம் அரசாங்கமே சகலதுக்கும் காரணம் என்ற தோரணையில் புலிகள் பிரச்சாரம் செய்தார்கள். அரசாங்கம் மீது அந்த உறவினர்களில் சிலர் குறை கூறியதையும் புலிகள் பதிவு செய்து பிரச்சாரமாக்கினார்கள்.

தனது அடித்தளத்தை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்திவரும் அரசுக்கு அது ஒரு புதிய தலையிடியாக இருந்தது. கைதிகளுக்கு எதுவும் நேர்ந்தால் சிங்கள மக்கள் மத்தியில் அதிருப்தியை சம்பாதிக்க வேண்டி இருக்கும். படையினர் மத்தியிலும் நம்பிக்கையீனங்கள் தோன்றும்.

எனவே எப்படியாவது முதலில் கைதிகளை விடுவிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்தது. புலிகள் விதித்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டது.

அதேநேரத்தில் கைதிகள் விடுவிப்பு விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் குறை கூறுவதில் இருந்து தப்பிக்கொள்ள, கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் அந்த விவகாரத்தை கையாளும் பொறுப்பை ஒப்படைத்துள்ளதாக அறிவித்தது.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் புலிகளின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதைத் தவிர வேறு எத்தகைய முடிவினையும் எடுத்திருக்க முடியாது. எனவே தடை செய்யப்பட்ட

செய்ய முடியுமா என்ன?

எப்படியோ இப்போது தடை நீக்கப்பட்டிருக்கிறது. வவுனியாவில் தடை நீக்கப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றனர்.

புலிகளுக்கு அரசியல் ரீதியில் அது ஒரு இலாபம். யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துப் பிரச்சனைகளாலும் பட்டினிக் கொடுமைகளாலும் விலைவாசி ஏற்றங்களாலும் தம்மீது வெறுப்படைந்துள்ள மக்களை புலிகள் ஓரளவு திருப்தி செய்திருக்கிறார்கள்.

மக்களின் அத்தியாவசியமான கோரிக்கைகளின் மீது தாங்கள் பொறுப்பாக நடந்து கொள்வதாக புலிகள் சொல்லிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. மறுபுறம், தமது இயக்கத்தின் தேவைகளுக்கும் எரிபொருட்களையும், ஏனைய பொருட்களையும் அவர்கள் எடுத்துக் கொள்ள முடிந்திருக்கிறது.

புலிகளும், பொதுமக்களும் அரசாங்கம் மீண்டும் அந்தப் பொருட்களுக்குத் தடை விதிக்கக்கூடும் என்றே கருதுகிறார்கள்.

ஆனால், அவ்வாறான தடை விதிக்கப்படுவதற்கு முன்னர் புலிகள் தமக்கு வேண்டிய எரிபொருட்களைச் சேமித்துக் கொள்ளுவார்கள்.

இராணுவத்தினருக்குத்தான் சங்கடம். தமது எதிராளிக்குத் தேவையான பொருட்களை விநியோகித்துக் கொண்டு போரிட வேண்டிய நிலமை.

எப்படி இருந்தபோதும் யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ள

## ரிப்போர்ட்

மையும், பற்றாக்குறைகள் தீர்ந்துள்ளமையும் மக்களின் சுமையை ஓரளவு குறைத்திருக்கின்றன.

இதுபற்றி இராணுவத்தோடு இணைந்து புலிகளுக்கு எதிராகச் செயற்படும் தமிழர் அமைப்புக்களின் கருத்தைக்கேட்ட போது அவர்கள் சொன்ன விசயமும் கவனத்திற்குரியதுதான்.

இப்போது தடை நீக்கப்பட்டுள்ள பொருட்களின் தடையை நீக்குமாறு அந்த அமைப்புக்கள் ஏற்கனவே அரசாங்கத்திடம் கோரியிருந்தன. பாதுகாப்புப்படை உயரதிகாரிகள் சிலர் அதற்கு இணங்கியிருந்த போதும் அங்கு பேசி, இங்கு பேசி முடிவு செய்வதென்று விவகாரம் இழுபட்டுக் கொண்டே இருந்தது. இப்போது புலிகள் உண்ணாவிரத

நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் ஓடி முழித்திருக்கிறது. நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு உடனடியாக முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. ■

38 பொலிசாரின் விடுதலை பற்றிய பரபரப்பான செய்திகளுக்கிடையே எல்லோரும் மறந்து விட்ட விசயம் ஒன்றிருக்கிறது.

அது புலிகளின் சிறையில் இருக்கின்ற தமிழ் பேசும் பொலிசாரின் கதி பற்றியது.

வடக்கே புலிகளின் சிறையில் எத்தனை தமிழ் பேசும் பொலிசார் இருக்கிறார்கள் என்ற விபரம் அரசாங்கத்திடம் இல்லை.

புலிகளும் இதுவரை அந்த விபரத்தை வெளியிடவில்லை.

அந்தப் பொலிசார் தமிழ் பேசுவோராக இருந்ததுதான் கேட்க ஆளில்லாத நிலமை என்றாகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம், ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி தாமோதரம்பிள்ளை புலிகளால் கொல்லப்பட்டார்.

மற்றொரு பொலிஸ் அதிகாரி ஜெயகுமார் தமது முகாமில் இறந்து விட்டதாக அவரது குடும்பத்தாருக்குப் புலிகளால் அறிவிக்கப்பட்டது. அவரது உடலைக் கூட புலிகள் ஒப்படைக்கவில்லை.

சிங்களப் பொலிசாரை விடுதலை செய்திருப்பது மனிதாபிமான நடவடிக்கை என்று புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் செய்தி ஒன்றினை யாழ்ப்பாணத்தில் விடுத்திருந்தார். அறவழிப் போராட்டத்திற்கு தமது இயக்கம் மதிப்பளிப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

வடக்கே புலிகளின் சிறையில் இறந்த, இருக்கின்ற தமிழ்ப் பொலிசாரைப் பார்வையிடுவதற்காக அனுமதி கேட்கச் செல்லும் உறவினர்கள் ஆயுதங்களோடு செல்வதில்லை. அழுது குளறி தமது குடும்பத்தாரைப் பார்க்க அனுமதி கேட்கிறார்கள். ஆனால் புலிகள் அனுமதி கொடுப்பதில்லை. இது எந்த வகையான மனிதாபிமானம்?

அந்த விடயத்திலும் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மனிதாபிமானக் கண்ணோட்டத்தைச் செலுத்தினால் என்ன?

தமிழ் பேசும் பொலிசாரின் கதி என்ன? எத்தனை பேர் புலிகளின் சிறையில்

(மறுபக்கம் பார்க்க)

## அதிரடி அய்யாத்துரை



வடக்கே போன அதிகாரிக்கு இரண்டெழுத்தார் இராணுவ மரியாதை குடுத்தார்களாம். அவருக்கு எக்கச்சக்கமான குளிர்ச்சி. மனுசன் எதிர்பாக்கேல்ல போல கிடக்கு. என்ன இழவடா இது என்னைப் பிடிச்சு அனுப்பீனம் என்று நினைச்சுக் கொண்டுதான் போயிருப்பார் போலக் கிடக்கு. மரியாதையைக் கண்டவுடன் இரண்டெழுத்தார் மீது கிட்டத்தட்ட ஒரு பிரியமே வந்திட்டுது எண்டமாதிரி கதைபோகுது. எங்க போய் முடியுதோ. நல்லதா முடிஞ்சா நல்லது.

யாழ்ப்பாணச் சனத்துக்கு இந்தச் சைக்கிள் உதவுறமாதிரி வேறை ஒண்டும் உதவாது. யாழ்ப்பாணத்திற்கு சைக்கிள் கொண்டு போகலாம் எண்டு சொல்லி முடிக்க முதல் விலை பேசி முடிச்சிட்டுதுகள். டிமாண்டைப் பார்த்த கடைக்காரர் உடன லொறியளை கொழும்புக்கு அனுப்பி அள்ளிக்கொண்டு போய் வித்து முடிச்சிட்டினம்.

ஆசாரி இடம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்கேல்ல எண்ட மாதிரி தடைநீக்கம் என்று மேல் மட்டங்களில ஓ.கே பண்ணின சாமான்களையும் சில மட்டங்களில நோ பொமிசன் எண்டு தடுக்கிறதாய்க் கேள்வி. உதுதானே பிரச்சனை.

கொழும்பில நடக்கிற தேடுதல் தேவையற்றோரை அள்ளுதல் விசயமா அதிகாரிகள் மட்டத்திலையும் முரண்பாடு இருக்குதாம். உப்பிடிச் செய்தா இரண்டெழுத்துக்காரருக்குத்தான் சப்போட் போகும் என்று உயர்ந்த இடத்து நல்ல உள்ளங்கள் சிலது கவலைப்படுகிறதாய்க் கேள்வி.

கோணேஸ்வரர் குடி கொண்ட இடத்தில் நடக்கிற குடியேற்றங்களை எல்லாரும் சுட்டிக்காட்டியாச்சு. இப்ப கொஞ்சம் குறைத்திருக்கிறதா மேல் மட்டத்தில் பதில் சொல்லப் படுகிறதாம். குடியேற்றமும் நடக்க கிழக்கில ஒரு சர்வசன வாக்கெடுப்பும் வைச்சா நல்ல சோக்குத்தான்.

இந்தியாவில அரசியல் ஜோக் விடுற விசயத்தில குஷ்வந்சிங் வித்தை தெரிஞ்ச மனுசன். ஒரு புத்தகமாவே தமிழில வந்திருக்கு. அதில ஒண்டை எங்கட சூழலுக்கு மாத்திப் பாத்தன்.

"சோமாலியாக்காரன், பஞ்சாப்காரன், நம்நாட்டுக்காரன் கடவுளிட்ட போச்சினம். சோமாலியாக்காரன் கேட்டானாம். "கடவுளே எங்கட பிரச்சனை எப்ப தீரும்?" அதுக்கு கடவுள் "ஒரு ஐஞ்சு வருசமாகும் மகனே" பஞ்சாப்காரனும் அதே கேள்வியைக் கேட்க ஒரு இரண்டு மூண்டுவருசமாகும் மகனே" என்றாராம் கடவுள். கடைசியாக நம் நாட்டுக்காரன் "பாராளுமன்ற தெரிவுக்குழு எங்கட இனப்பிரச்சனைக்கு எப்போது தீர்வுகாணும்" என்று கேட்க, கடவுளின் கண்ணில இருந்து பொல, பொலவென்று கண்ணீர் வந்ததாம். "மகனே பாராளுமன்ற தெரிவுக்குழுதான் பிரச்சனையைத் தீர்க்க வேணுமெண்டா அதைப் பார்க்க நான் உயிரோட இருக்க மாட்டேனே" என்றாராம் கடவுள். விளங்கினாச் சரி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இருக்கிறார்கள் என்பதை அறிவதில் சமீபத்தில் நடைபெற்ற கைதிகளின் பரிமாற்றப் பேச்சின் போது அரசாங்கம் கரிசனம் காட்டி இருக்கலாம்.

அவர்கள் தமிழ் பேசுவோர் என்பதால் அவர்கள் பாடு புலிகள் பாடு என்று அரசாங்கம் கைவிட்டு விட்டதென்று யாரும் கருதிவிடக் கூடாதல்லவா?

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின் படி இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வடக்கே உள்ள புலிகளின் சிறையில் இருக்கிறார்கள்.

வடக்கே இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்டபோது நிதி கேட்டுத் தடுத்து வைக்கப்பட்ட முஸ்லிம்களும் அங்கு சிறையில் இருக்கின்றனர்.

சிறையில் இருக்கும் சாதாரண கைதிகளும் உள்ளே இறந்து விடுகிறார்கள். தம்மோடு பாரியளவில் முரண்பட்டவர்கள் என்று கருதும் கைதிகள் கடுமையான சித்திரவதைகளுக்கு மத்தியில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையும் தனது ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது.

புலிகளின் சிறையிலிருந்து வெளியே வந்த சிலரது கூற்றின் படி புலிகளின் சிறைகளில் மேற்கொள்ளப்படும் தண்டனை முறைகள் இரத்தத்தை உறைய வைப்பனவாக அமைந்து வருகின்றன.

சாதாரண கைதிகளுக்குத் தமது உறவினர்களைப் பார்வையிட வாரத்தில் ஒருநாள் புலிகள் அனுமதி வழங்குகின்றனர். ஆனால் பிரச்சனையானவர்கள் என்று தாம் கருதும் கைதிகளை உறவினர்கள் பார்வையிட புலிகள் அனுமதிப்பதில்லை.

அதுமட்டுமல்லாமல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்கள் அவர்களைப் பார்வையிடுவதற்கும் அதன் மூலம் அவர்களது நலன்கள் கவனிக்கப்பட வாய்ப்பு ஏற்படுவதற்கும் புலிகள் இதுவரை அனுமதி வழங்கவில்லை.

புலிகளின் நீண்ட தாக்குதலால் இராணுவத்தினர் விட்டுவிலகிய யாழ் கோட்டை முகாமில் ஒரு சிறை இருக்கிறது. அங்கு சாதாரண கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய சிறைகள் மிகவும் இரகசியமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசின் சிறையில் உள்ள கைதிகளின் கதி பற்றி அறிந்து கொள்ளப் பல வழிகள் இருக்கின்றன.

மொழிப் பிரச்சனைகள், சில சிறைகளில் தமிழ் பேசுவோர் என்றவுடன் காட்டப்படும் அலட்சியங்கள், இழுத்தடிப்புக்கள் என்பவற்றின் மத்தியிலும் கைதிகளை உறவினர்கள் பார்வையிட முடிகிறது.

அது மட்டுமல்லாமல் சில சந்தர்ப்பங்களில் கைதிகள் தமக்குரிய வசதிகள் கோரியும் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்த முடிகிறது.

இந்தியாவில் கூட அங்குள்ள சிறைகளில் மேலதிக வசதி கோரி புலிகள் இயக்க உறுப்பினர்களும் உண்ணாவிரதம் இருந்திருக்கின்றனர்.

ஆனால் வடக்கே புலிகளின் சிறைகளில் கைதிகள் வாய்திறக்க முடியாது.

இவ்வாறான நிலையில் சிங்களப் பொலிசாரைப் புலிகள் உண்ணாவிரதம் இருக்க அனுமதித்தமை எப்படிச் சாத்தியமானது என்ற ஒரு கேள்வி எழக்கூடும்.

உண்மையில் அந்த உண்ணாவிரதமானது • புலிகளே ஆலோசனை கூறி புலிகளே பின்னணியில் நின்று மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

புலிகளின் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளைப் பொறுத்த வரையில் அவர்களது விடுதலையை எதிர் நோக்கி அவர்களது குடும்பத்தினர் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் அறவழிப் போராட்டத்திற்கு மதிப்பளிப்பதாகக் கூறி இருக்கிறார். தமது சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் விடயத்தில் மனிதாபிமானத்திற்கும், அறவழிக்கும் மதிப்புக் கொடுத்து அவர்கள் விடயத்தில் கரிசனமான போக்கை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

இல்லாவிட்டால் தாங்களும் பெரும்பான்மையான இனத்தில் பிறந்திருக்கலாம் என்று அந்தக் கைதிகளும், அவர்கள் தம் உறவினர்களும் ஏக்கப் பெருமூச்சுக்களை விட்டுக்கொண்டிருப்பார்கள். ●

## உலக ரவுண்டப்

# நாற்பதாண்டுகால இனஒதுக்கல் எல்லாவற்றையும் சீர்குலைத்துவிட்டது

## நெல்சன் மண்டேலா மனந்திறந்து பேசுகிறார்

தென் ஆபிரிக்காவில் பெரும்பான்மை இன மக்கள் கறுப்பினத்தவர்கள். வெள்ளையர்கள் சிறுபான்மை இனத்தவர்கள்.

கொடுமை என்னவென்றால் சிறுபான்மை இனத்தவர்களான வெள்ளையர்களே இது வரை காலமும் அங்கு ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

பெரும்பான்மை இனத்தின் பேரினவாதத்திற்கு எதிராகவே சிறுபான்மை இனங்கள் போராடுவது வழக்கம். தென்னாபிரிக்காவிலோ சிறுபான்மை இனத்திற்கு எதிராக, அதன் அடக்குமுறைக்கு எதிராக பெரும்பான்மையினக் கறுப்பர்கள் போராடி வருகின்றனர்.

தற்போது ஒரு தீர்வு கிடைத்துள்ளது. 1994 ஏப்ரல் 24ம் திகதி தேர்தல் ஒன்று நடத்தி கறுப்பினத்தவர்கள் கையில் ஆட்சியை ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு தேர்தல் நடைபெறுமானால் கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்க ஜனாதிபதி யாவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ரைம் சஞ்சிகை நெல்சன் மண்டேலாவுடன் நடத்திய பிரத்தியேக பேட்டியில் அவர் மனம் திறந்து பேசியுள்ளார். அதிலிருந்து சில முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

கேள்வி: தென் ஆபிரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக நீங்கள்தான் வருவீர்கள் என்பது சரியான எதிர்பார்ப்புத்தானா?

மண்டேலா: சில இளைஞர்கள் உங்கள் கருத்தோடு ஒத்துப் போக மாட்டார்கள். ஏனெனில் தங்களில் ஒருவரே ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதில் அவர்கள் நாட்டம் கொண்டிருப்பார்கள். கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கள் சில நடைபெற்றுள்ளன. அவற்றின் படி தென்ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவார்கள் என்று தெரிகிறது. ஆகவே தெ.ஆ.தேசிய காங்கிரஸ் ஜனாதிபதியாக யார் வர வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும். எம் மத்தியில் திறமைசாலிகள் பலர் உள்ளனர். யாராவது தலைமைப் பதவியை ஏற்றால் அவரின் கீழ் பணிபுரிய நான் தயாராக இருக்கிறேன்.



கே: டி. கிளோர்க்கின் (தற்போதைய வெள்ளை ஜனாதிபதி) தலைமையிலான தேசியக் கட்சியினர் தேர்தல் முடிவுகளை ஏற்று அதன்படி நடக்க முன்வருவார்களா?

மண்டேலா: அவர்கள் அத்தகைய நம்பிக்கையுடன்தான் எங்களுடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். இருப்பினும் ஜனநாயகம் பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்துக்களுக்கும் நாம் கொண்டுள்ள கருத்துக்களுக்கும் மாறுபாடு இருக்கிறது. தேர்தலில் தோல்வியடையும் கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் பங்கேற்க வேண்டும் என்கின்ற அவர்களது கருத்தை மாற்றுவதற்கு ஏற்கனவே அவர்களோடு விவாதித்துள்ளோம். அந்தக் கருத்தை மாற்றியுள்ளோம். பெரும்பான்மை ஆட்சியின் மூலமே தேசிய ஐக்கியம் வலியுறுத்தப்படும் என்று அவர்களுக்கு நம்பிக்கையூட்டியுள்ளோம். மக்களின் கணிசமான ஆதரவு பெற்ற கட்சிகளை அரசாங்கத்தில் இணைக்க வேண்டும் என்று கூறியுள்ளோம்.

கே: மக்களின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்ய உங்களால் முடியுமா? அல்லது இதுகாலவரை இருந்த இனஒதுக்கலினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் ஆழமாக வேரூன்றி விட்டமையால் சிக்கல்கள் தோன்றுமா?

ம: நாற்பது ஆண்டுகால இன ஒதுக்கல் என்பது நாற்பது ஆண்டுகால யுத்தம் என்று கொள்ளத்தக்கது. எங்களது சமூக, பொருளாதார அமைப்பு அனைத்தும் நிர்மூலமாகி விட்டன. இதனால் சில அம்சங்கள் திருத்தி அமைக்க முடியாத அளவு சீர்குலைந்து போயின. இரண்டாவது உலகப் போரின் பின்னரும் ஐரோப்பிய நாடுகளும் இதே நிலையில்தான் இருந்தன. மேற்கு உலகினை வழி நடத்தும் அமெரிக்காவின் ஜனாதிபதி கிளின்டனிடம் தென் ஆபிரிக்காவின் முன்னேற்றத்திற்கு வேண்டிய பெரும் உதவிகளை பெற்றுத்தரும்படி கேட்கவிருக்கிறேன்.

கே: வலதுசாரி வெள்ளையரிடத்திலும் கறுப்புஇன மக்களின் பெரும்பான்மை பற்றிய பீதி இருக்கிறது. அவர்களும் கறுப்பர் பெரும்பான்மைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம் அல்லவா?

ம: கடந்த வருடம் இடம் பெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் போது வலது சாரியினர் 800,000க்கும் அதிகமாக வாக்களித்துள்ளனர். அவர்களில் நிர்வாகத் துறையில் கணிசமானோர் உள்ளனர். பொலிசிலும் இராணுவத்திலும் கூட அவர்களுக்கு ஆதரவாக பலர் உள்ளனர். தேர்தலில் ஆ.தே.காங்கிரஸ் வெற்றியீட்டினால் அவர்கள் ஆயுதமேந்தப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதுதான் இன்று நாங்கள் எதிர்நோக்கும் முக்கியமான சிக்கல். உண்மையில் இது ஒரு முக்கியமான எச்சரிக்கையும் தான். ஜனநாயகத்தைப் பேணத்தக்க வகையில் பொலிஸ் படையை நாங்கள் மறுசீரமைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கே: சில நூற்றாண்டுகாலம் அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருந்த சிறுபான்மையினர் இன்று அமைதியாக விட்டுக் கொடுத்தமைக்கான முன் நிலைகள் என்ன என்று கூற முடியுமா?

ம: அந்தச் சிறு பான்மையினருடன் இன்று நாங்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகிறோம். இதுகாலவரை அவர்கள் ஆ.தே காங்கிரசுடன் பேசமாட்டோம் என்று அடம் பிடித்தவர்கள். எம்மை ஒதுக்கிவைத்துவிட்டே சகல தேர்தல்களையும் நடத்தினார்கள். இன்று அவர்களை எங்களுடன் பேசுவதற்கு இணங்க வைத்துள்ளோம். தென் ஆபிரிக்காவின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு அவர்களுடன் இணைந்து திட்டங்களை வகுக்கிறோம், காங்கிரஸ் மீது விதித்ததடையை நீக்கினார்கள். அவசரகால நிலைப்பிரகடனத்தையும் நீக்கி விட்டார்கள். சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளாக மறுக்கப்பட்ட உரிமை இது. அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளனர். பிறநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களை நாடு திரும்ப அனுமதித்தார்கள். அடக்குமுறைச்சட்டங்களை மாற்றித் திருத்தியுள்ளனர். இடைக்கால நிறைவேற்று அதிகார சபையை அமைக்க முன்வந்துள்ளனர். இன்று பொதுத் தேர்தலுக்கான ஒரு திகதியை நிர்ணயிக்க எம்முடன் ஒத்துழைத்துள்ளனர்.

கே: இத்தகைய ஒத்துழைப்புக்களை அவர்கள் ஏன் வழங்குகின்றனர்?

ம: தென் ஆபிரிக்காவின் பெரும்பான்மை இனத்தவர் தங்கள் நாட்டின் ஆதிக்கத்தை தாங்களே ஏற்க வேண்டும் என்ற உரிமையை நிலைநாட்டுவதற்கான போராட்டங்களை நடத்துவதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள் என்பதை உணர்ந்து விட்டார்கள். அதுமட்டுமல்லாமல் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பன்னாட்டு சமுதாயமே- ஒன்று பட்டு நின்றதும் மற்றுமொரு காரணமாகும்.

கே: அப்போ தடுப்பு, நடவடிக்கை (தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பன்னாட்டு சமுதாயம் விதித்த பொருளாதார மற்றும் பொருள் தடைகள்) பலனளித்துள்ளதாக்கும்?

ம: சந்தேகமில்லை.

கே: தடைகள் இனியாவது நீக்கப்படுமா?

ம: அவற்றை நீக்கும் கட்டத்துக்கு வந்து விட்டோம். சுதந்திரமான-நியாயமான தேர்தல் நடைபெறும் வரை தடைகள் இருக்க வேண்டும் என்பது தான் எங்கள் கொள்கை. எமது நாட்டில் 70 இலட்சம் பேர் தொழில் எதுவும் இல்லாதிருக்கின்றனர். வன்முறைகளும் குற்றச் செயல்களும் மலிந்து விட்டன. ஆகவே எங்களுடைய காலக்கெடுவில் ஒரு மாற்றம் செய்ய எண்ணியுள்ளோம். இடைக்கால நிறைவேற்று சபை அமைக்கப்பட்டு, தேர்தலுக்கான திகதியும் உறுதி செய்யப்பட்டதும் தடைகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வோம். ■

## கிளின்டனின் பெரிய மனது

சமூக சேவையில் ஈடுபட முன்வரும் மாணவர்களின் கல்லூரிப் படிப்புச் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும் திட்டம் ஒன்றை அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் வகுத்துள்ளார். ஆரம்பத்தில் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டம் காலப் போக்கில் அனைவருக்கும் விரிவாக்கப்படும்.

தனது திட்டம் ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டமென்றும் நாளைய வரலாற்று ஆசிரியர்கள் அதனைப் போற்றுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.



## வாரம் ஒரு கொலை! ஹோமோக்கள் கவலை!

இலண்டனில் உள்ள 'ஹோமோ செக்ஸ்' எனப்படும் தன்னினச் சேர்க்கையாளர்கள் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஓரினச் சேர்க்கையர்களை குறிவைத்து புறப்பட்டுள்ள மர்ம ஆசாமி இதுவரை 5 பேரை கொலை செய்துள்ளான்.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் 33 முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்கள்.

கொலைகளை விசாரணை செய்த பொலிசார் ஹோமோக்களை அழைத்து கவனமாக இருக்கும்படி எச்சரித்தனர்.

மர்ம ஆசாமி வாரம் ஒரு கொலை வீதம் செய்து கொண்டிருப்பதால் அடுத்தது யார் என்று ஹோமோக்கள் நடுங்கத் தொடங்கிவிட்டனர்.

அமெரிக்காவிலும் அவனைப் போன்ற கொலையாளிகள் இருந்ததாக இலண்டன் பொலிசார் கூறியுள்ளனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது – இராஜதந்திரி

# வடக்கிலும், தெற்கிலும் ஏக காலத்தில் தோன்றிய மனிதாபிமான பிரச்னைகள்!

## சபாஷ் Mr.ஜெயக்கொடி!

## எல்லோரும் ஜெயக்கொடி போலிருந்தால் இந்நாட்டில் 'சமாதானக் கொடி' பறக்கும் காலம் தொலைவில் இல்லை!

மனிதாபிமானத்துக்குச் சவால் விடும் நிகழ்வுகள் வடக்கிலும்–தெற்கிலும் ஏககாலத்தில் கடந்த வாரங்களில் இடம் பெற்றிருந்தன.

தெற்கே கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அப்பாவித் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சுற்றிவளைக்கப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

முன் எச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கை என்ற அடிப்படையில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

கொழும்பில் கடந்த காலங்களில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உண்டுபண்ணும் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை அனைவரும் அறிந்ததே. எனவே எதிர்காலப் பாதுகாப்புக்கள் குறித்து முன் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டியது பாதுகாப்பை மேற்கொள்பவர்களின் இன்றியமையாத கடமையாக இருக்கின்றது.

இருந்த போதிலும் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பேரில் கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சுற்றிவளைக்கப்பட்ட விதமும் விசாரணைக்



குட்படுத்தப்பட்ட முறையுமே அநாகரிகமானதாகவும், மனிதாபிமானத்தைக் கடுகளவில் தானும் கருத்தில் கொள்ளாததாகவும் காணப்பட்டன.

கொழும்பில் அப்பாவித் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சுற்றி வளைக்கப்பட்டு பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட விடயம் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறியவை, பெரும்பான்மை சிங்கள இன மக்கள் மத்தியிலும் மனிதாபிமானிகள் வாழ்ந்து கொண்டு இருப்பதைத் தெளிவுபடுத்துவதாகக் காணப்பட்டது.

திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, அப்பாவித் தமிழர்கள் கிரிமினல் குற்றவாளிகளைப் போல பொலிசாரினால் நடத்தப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டியதுடன், தமிழர்களின் நல்லபிமானத்தைப் பெறுவதற்கு இத்தகைய கண்மூடித்தனமான நடவடிக்கைகள் எந்த வகையிலும் துணை போகமாட்டாதெனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்கில் வாழும் தமிழர்களைப் பொறுத்தவரை இலங்கை அரசியலில் அவர்களைத் தகுந்த வகையில் பிரதிநிதித்துவப்படுத்த எவருமே இல்லாத ஒரு ,சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தை தமது அரசியல்



மதிநுட்பத்தினாலும், பேச்சுத் திறமையினாலும் தமிழ் அரசியலாளர்கள் ஆக்கிரமித்திருந்த காலம் இன்று பல ஆண்டுகளையும் கடந்து விட்ட நிலையில், அரசியல் ரீதியாக அநாதரவான நிலையிலேயே வடக்கின் தமிழர்கள் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி போன்ற அரசியலாளர்களின் மனிதாபிமானக் கண்ணோட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டில் சமாதான சகவாழ்வுக்கான வாய்ப்புக்கள் முற்றிலுமாக மறைந்து விடவில்லை என்பதனையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

எனவே திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி போன்று தென்னிலங்கையின் அனைத்து அரசியலாளர்களும் சிந்திப்பார்களேயானால், இந்நாட்டில், சமாதான– சகவாழ்வு ஏற்படும் காலம்



தொலைவில் இல்லை என்றே குறிப்பிடலாம்.

இதே வேளை வடக்கே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் பிடியிலிருந்த பொலிஸ்காரர்கள் 38 பேரையும் இராணுவ வீரர் ஒருவரையும் விடுவிக்கக் கோரி அவர்களின் உறவினர்கள் யாழ்குடாநாட்டுக்குச் சென்று புலிகளிடம் மன்றாட்டமான வேண்டுகோளை விடுத்திருந்த விவகாரமும் மனிதாபிமானத்துடன் சம்பந்தப்பட்டதாகவே காணப்பட்டது.

1990ம் ஆண்டு இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே இரண்டாவது தடவையாக ஏற்பட்ட மோதலையடுத்தே பாதுகாப்புப் படையினரில் அநேகர் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தனர்.

எனவே இப்போர்க் கைதிகளை விடுவிக்கக் கோரி அவர்களின் உறவினர்கள் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்த வேளை, புலிகளும் அக்கைதிகளின் விடுதலைக்கு நிபந்தனையாக வடக்கே கொண்டு செல்லப்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள பொருட்கள் மீதான தடையை நீக்கும்படி, அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரசாங்கமும், தென்னிலங்கையிலுள்ளவர்களும் புலிகள் போர்க்கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றே எதிர்பார்த்தனர்.

ஆனால் வடக்கே எதுவுமறியாத அப்பாவித் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை நிலை எத்தகையது என்பதனை தென்னிலங்கையர்களால் சரிவர உணர்ந்து கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

கைதி என்ற அந்தஸ்த்து, ஒருவருக்கு அவர் அனுபவித்து வந்த சுதந்திரங்களுக்குக் கால்கட்டுப் போடப்பட்ட நிலையை உணர்த்துவதாகவே இருக்கின்றது.

இரத்த பாசம் மேலிட புலிகளின் பிடியிலுள்ள கைதிகளின் உறவினர்கள் வடக்கே சென்றிருந்தனர். அங்கே தமக்குரியவர்களை விடுதலை செய்யும்படி புலிகளிடம் அவர்கள் வேண்டுகோளையும் விடுத்திருந்தனர்.

ஆனால் தென்னிலங்கையிலிருந்து சென்ற கைதிகளின் உறவினர்கள் வடக்கில் உள்ள வர்களின் நிலையைக் கவனித்திருப்பார்களேயானால், யாழ் குடாநாடு முழுவதுமே ஒரு பெரும் தடுப்புக் காவல் பிரதேசமாக இருப்பதையே அவர்களால் நன்கு அறிந்து கொண்டிருக்க முடியும்.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாகப் போரின் கொடுமையை அனுபவித்து வந்த யாழ்குடா நாட்டினர் இன்று அக்கொடுமையின் உச்சக் கட்டமாக தாம் வாழும் பிரதேசத்திலேயே எதுவித சுதந்திரமும் அற்ற நிலையில் வெறும் நடைப்பிணங்களாக நடமாடி வருகின்றனர்.

இந்நிலையில் புலிகளின் பிடியில் உள்ள கைதிகளின் விடுதலை மட்டுமல்ல, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும் கௌரவத்துடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்று கிடைக்க வேண்டியது, மிகவும் இன்றியமையாததாகவே விளங்குகின்றது.

இந்நிலையில் போர்க் கைதிகளின் விடுதலையில் மட்டும் அக்கறை காட்டும் அரசாங்கம், வடக்கில் உள்ளவர்களும் இந்நாட்டு மக்கள் என்பதனை நன்குணர வேண்டும்.

எனவே அம்மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதில் அரசு கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்.

போராட்டங்களும், கெடுபிடிகளும் தொடரும் பட்சத்தில் பொது மக்கள் தமது சுதந்திரங்களை இழந்து ஒரு நீண்ட வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

எனவே இலங்கை அரசு போர்க் கைதிகளின் விடுதலையில் மட்டும் மனிதாபிமானத்தை எதிர்பார்ப்பதோடு நின்று விடாது, வடக்கில் உள்ளவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டும்.

இதன் மூலமே வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளையும் உறுதியாக முன்னெடுக்க முடியும்.

இலங்கைப் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கவின் கடந்தவார இந்திய விஜயம் இந்திய-இலங்கை உறவில் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான அபிவிருத்தியையே வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தது.

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா, இலங்கைக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தார். மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போது டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் திரு. ஆர். பிரேமதாச தற்போது உயிரோடில்லாத நிலையில் இந்தியத் தலைவரின் இலங்கை விஜயமும் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே நிலவிய உறவுகள் கடந்த பத்து வருட காலத்தில் பல்வேறு மாறுதல்களுக்கும் உள்ளாகியிருந்தன.

இத்தகைய மாறுதல்களுக்கு இலங்கை இனப்பிரச்சனையே மூலகாரணமாக இருந்தது.

இந்தியத் தலைவர்கள் இலங்கை இனப்பிரச்சனையில அக்கறைகாட்டி தீர்வொன்றைக் கொண்டுவர முயன்ற சமயம், அத்தீர்வை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளும் நிலை இலங்கையில் காணப்பட்டிருக்கவில்லை.

இதன் காரணமாக இலங்கை மட்டுமல்லாது, இந்தியாவும் பெருமளவு பாதிப்பை எதிர்நோக்கும் நிலை உருவாகியிருந்தது.

கூடவே இலங்கைத் தமிழர் விடயத்திலும் இந்தியா புதிய அணுகுமுறைகளைக் கையாளும் சூழ்நிலையும் உருவாகியிருந்தது.

ஆனால் இன்று இலங்கை-இந்திய ஆட்சிப் பீடங்களை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் இரு தரப்பிலும் புதிய முகங்களும், புதிய கண்ணோட்டங்களைக் கொண்டவர்களுமே ஆட்சியிலிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அரசியல் ரீதியாக வேறுபாடுகளைக் கொண்டுள்ள போதிலும், பூகோளரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் இருநாடுகளும் நெருக்கமான நிலையிலேயே இருந்து வருகின்றன.

இந்நிலையில் மீண்டும் இலங்கை–இந்திய உறவுகள் அபிவிருத்தியடைய ஆரம்பித்துள்ளமை, பிராந்திய ரீதியில் ஒரு நல்ல புரிந்துணர்வுக்கு வழிவகுக்கும் எனக் கருதலாம்.

இந்தியா, இலங்கையுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள ஆர்வங்காட்டுகின்ற போதிலும், இலங்கை இனப்பிரச்னை குறித்த விடயத்திலும் ஒரு புதிய அணுகுமுறையை இந்தியா கையாள வேண்டுமென்றே இலங்கையில் உள்ள இந்திய அபிமானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையில் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருந்த வேளை அவர்களுக்கு அபயமளித்துப் பாதுகாப்பளிப்பதில் இந்தியா மிகுந்த ஆர்வம் காட்டியிருந்தது.







ஆனால் தூரதிஷ்ர்டவசமான நிகழ்வுகள் காரணமாக இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் இந்தியாவையும் பகைத்துக் கொள்ளும் வகையில் திசைமாறியிருந்தது.

ஆயினும் தற்போது புதிய அரசியல் சூழ்நிலையில் புதிய முகங்களின் தலைமையில் துளிர்விடும் இந்திய-இலங்கை உறவுகள், இலங்கையின் அனைத்துத் தரப்பினருக்கும், குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களும் தமது நியாயமான கோரிக்கைகள் பாதுகாக்கப்பட்ட நிலையில் தேசிய அரசியலில் பங்கு கொள்ளும் சூழ்நிலை உருவாக வழிவகுக்க வேண்டும்.

இல்லையேல் இப்புதிய உறவு அர்த்தமற்றதொன்றாகவே இருக்கும் எனக் கருதலாம்.

## லேடீஸ் ஸ்பெசல்

# உங்கள் குழந்தையின் வளர்ச்சி சீராக இருக்கிறதா?



ஒரு இளம் தாய், குடும்பத்தின் புதிய வரவின் வவர்ச்சி சீராக இருக்கிறதா என்று தொடர்ந்து உற்று கவனித்து வரவேண்டும். குழந்தையின் வளர்ச்சியைக் கண்முன்னே பார்ப்பது தருகிற மன ஆனந்தத்தை நாம் வாழ்க்கையில் வேறெதிலும் காண முடியாது. ஒரு மழலை, குடும்பத்தில் எல்லோருடைய கவனத்தையும் தன்பால் ஈர்த்து விடுகிறது. அதன் வளர்ச்சியில் குடும்பத்தின் மகிழ்ச்சி இருக்கிறது.

குழந்தையின் வளர்ச்சி எந்த இடத்திலாவது மந்தப் பட்டால் உடனே நீங்கள் மருத்துவரின் ஆலோசனைக்கு ஓட வேண்டும்.

குழந்தையின் வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதை மனப்பாடமாக அறிந்து வைத்திருக்க வேண்டும். பத்து மாதம் சுமந்ததில் இல்லை, அதன் பிறகும் அந்த வயிற்றுச் சுமையை நெஞ்சில் ஏற்றி கண்ணும் கருத்துமாய்க் காத்துப் போற்றி வளர்க்க வேண்டும்.

செல்வங்களின் வளர்ச்சி எப்படியென்றால்....

முதல் மாதம்: குப்புறப் படுத்திருக்கும் போது லேசாகத் தலையைத் தூக்கும். 20 அல்லது 30 செ.மீட்டர் தூரத்தில் வைத்திருக்கும் போது நம் கண்களைப் பார்க்கும். எதையாவது வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும். சிறிது நேரமே விழித்திருக்கும். பெரும்பாலான நேரம் உறங்கிக் கொண்டே தானிருக்கும். கை விரல்களையோ அல்லது முஷ்டியையோ வாயில் வைத்துச் சப்பும். அவ்வப்போது லேசாகப் புன்னகைத்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும். ஒன்றிரண்டு குரல்களை அடையாளம் கண்டுகொள்ளும்.

இரண்டாவது மாதம்:



பக்கவாட்டில் புரளும். உட்கார வைத்திருக்கும் போது ஓரளவு தலை நிற்கும். சிறிது நேரத்தில் மீண்டும் தலை கவிழ்ந்து விடும். ஒரே திசையில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும். லேசு லேசாகப் பிடிக்கக் கற்றுக் கொள்ளும்.

எதையாவது கொடுத்தால் சில வினாடிகள் பற்றிக் கொண்டிருக்கும். முகங்களைப் பார்க்கத் தொடங்கும். பக்கத்தில் யாராவது நடந்து போனாலோ, ஏதாவது, அசைந்தாலோ பார்க்கும். முகம் பார்த்துச் சிரிக்கத் தொடங்கும். சத்தங்களை இனம் காண முயற்சிக்கும். அம்மா தூங்குவதைத் தெரிந்து கொள்ளும். அம்மாவின் முகத்தையும் இனம் காண முடியும். பால் குடிக்கும் போது எப்படி இருக்க வேண்டுமென்று பழகியிருக்கும்.

மூன்றாவது மாதம்:



குப்புறப்படுத்து முன்னங்கையை ஊன்றி எழ முயற்சிக்கும். தலையைத் தூக்கிப் பார்க்கும். பிடித்துக் கொண்டால் உட்காரும். ஏதாவது பொருளைக் காட்டினால் இரு கைகளாலும் பற்ற முயலும்.

சத்தம், வெளிச்சம், வர்ணங்கள், வடிவங்கள் இவற்றை இனம் காணத் தொடங்கும். தன்னிச்சையாகச் சிரிக்கும். சுமார் 45 நிமிடங்கள் வரை எதிலாவது தொடர்ந்து கவனம் செலுத்த முயலும். சாப்பாட்டு நேரம் வந்தால் அதைத் தெரிந்து கொள்ளும். தனது விருப்பு வெறுப்புகளைக் காட்டத் தொடங்கும்.நாம் ஏதாவது பேசினாலோ அல்லது பாடினாலோ அதுவும் பதில் வினை புரியும்.

நான்காவது மாதம்: நேராகப் படுக்க வைத்தால் பக்கவாட்டில் உருண்டு விழும். குப்புற விழும். பத்துப் பதினைந்து நிமிடங்கள் வரை தலை நேராக இருக்க உட்கார்ந்து இருக்க முடியும். வயிற்றை அழுத்தி நேராக நிற்க முயற்சிக்கும். தன் கைகளையே பார்த்துக்கொண்டிருக்கும். விரல்களால் விளையாடும். பொருட்களைப் பற்றிக் கொள்ளவும் விடவும் கற்றிருக்கும். எதை எடுத்தாலும் உடனே வாயில் வைக்கும். குளிக்கும் போது கை கால்களால் தண்ணீரை அளையும். எல்லா பக்கமும் தலையையும், பார்வையையும் திருப்பிப் பார்க்கும்.



சத்தம் எந்த திசையிலிருந்து வருகிறது என்று இனம் கண்டு கொள்ளும். சிரிக்கும். சில சத்தங்களைச் செய்து பார்க்கும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட பொம்மை அல்லது பொருளின் மீது விருப்பமாக இருக்கும்.

அம்மாவை நன்றாகத் தெரியும். முகங்களை இனம் கண்டு கொள்ளும். ஒரு மணி நேரமாவது ரொம்ப விழிப்பாக இருக்கும். சாப்பாட்டை எதிர்நோக்கும். இரவுச் சாப்பாட்டைத் தவிர்க்கும்.

ஐந்தாவது மாதம்:



உருளத் தொடங்கும். திரும்பும். உதைக்கும். சரியாக உட்கார முடியும். சுமார் 30 நிமிடங்களுக்காவது முதுகு நேராக நிற்கும். பொருட்களை எளிதாகவும், பத்திரமாகவும் பற்றிக்கொள்ளும்.

தூக்கச் சொல்லி கையைத் தூக்கும். தன் பக்கம் கவனத்தைத் திருப்புவதற்காகக் கூப்பிடும். கோபத்தை வெளிக்காட்டிச் சத்தமிடும். பயந்து சத்தமிடும். அதிகாலையில் எழுந்து விளையாட விரும்பும்.

ஆறாவது மாதம்:



சிறிது நேரம் எவ்வித ஆதாரமும் இன்றி உட்கார்ந்திருக்க இயலும். நேராகப் படுக்கப் போட்டால் குப்புற விழுந்து விடும். பிடித்துக் கொண்டால் நிற்கும். குதிக்கும். உயரே இருந்து பொருட்களை வீசி விட்டு அவை விழுவதைப் பார்த்து ரசிக்கும். யாராவது அதை எடுத்துத் தர வேண்டுமென்று அழும்.

சாப்பிடும் பாத்திரங்களான ஸ்பூன், தட்டு, கிண்ணம் இவற்றை வைத்து விளையாட விரும்பும். 'தாதா' என்றோ 'அத்த அத்த' என்றோ சொல்லும். இசையைக் கேட்டு தானும் அது போல் முணுமுணுத்து மகிழ்ச்சியுறும். ஆடும், குதிக்கும். மழலைச் சொற்களை உதிர்க்கும்.

ஏழாவது மாதம்: வயிற்றினால் நகர்ந்து செல்லும். ஊர்ந்து செல்ல முயற்சிக்கும். எப்போதும் ஏதாவது ஒரு விளையாட்டுச் சாமானை வைத்துக் கொண்டிருக்கும். சத்தமெழுப்பும் பொருட்கள், விளையாட்டுச் சாமான்களுக்கு ஆசைப்படும். தனியே இருக்கப் பயப்படும். யாராவது அந்நியர் வந்தால் அஞ்சும். தனக்கு விருப்பமற்றதைத் தடுக்க முயற்சிக்கும். தனக்கு உணவு தரப்படும் போது நமக்கு உதவும்.

எட்டாவது மாதம்: தவழும் நிலையை அடைந்திருக்கும். நிற்க முயற்சிக்கும். நாற்காலி, பெட்டி இவற்றைப் பிடித்துக் கொண்டு நிற்கும். தனக்குத் தேவையில்லாத பொருட்களை வீசி எறியும். தன் புட்டிப் பாலை தானே பிடித்துக் கொண்டு சாப்பிடும். பிறரது கவனத்தைக் கவரச் சத்தமிடும். சில சொற்களைப் புரிந்து கொள்ளும். படுக்கப் போகாமல் அடம் பிடிக்கும். மத்தியான நேரங்களில் உறங்கும்.







ஒன்பதாவது மாதம்: கையைப் பிடித்துக் கொண்டால் சிறிது நேரம் நிற்கும். சாயாமல் யார் துணையுமின்றித் தனியாக உட்கார்ந்திருக்கும். துவாரங்களில் கையை நுழைத்துப் பார்க்கும். ஆள்காட்டி விரலாலும் பெருவிரலாலும் சிறு சிறு பொருட்களைத் தூக்கும். ஒன்றிரண்டு சொற்களைப் புரிந்து கொண்டு எதிர்வினையாற்றும். கையை ஆட்டு, கை தட்டு என்று சொன்னால் செய்து காண்பிக்கும். புத்தகங்களிலுள்ள படங்களை ஆர்வத்தோடுபார்க்கும். விளையாட்டை ரசிக்கும். குளிப்பதற்குப் பயப்படும். உயரத்தைக் கண்டும் அஞ்சும்.

பத்தாவது மாதம்: பிடித்து கொண்டால் சிறிது நேரம் நிற்க முடியும். நாற்காலியின் மீது ஏற முடியும். உதவி செய்தால் நடக்கும். சட்டை மாட்டி விடும் போது கால்களைத் தூக்கத் தெரிந்து கொள்ளும். விரல் சப்பும். தாத்தா, மாமா என்று சொல்லக் கற்றுக் கொள்ளும். சிறு சிறு உத்தரவுகளைப் புரிந்து கொண்டு நடக்கும். சத்தங்களைக் கேட்டு தானும் அது போல் சத்தமிடும். நாம் செய்வது போலவே அதுவும் செய்யும். விருப்பு வெறுப்புகளில் உறுதியாக இருக்கும். பொம்மைகளைப் பிரியமாக வைத்துக் கொள்ளும்.

பதினொன்றாவது மாதம் ஒரு கையைப் பிடித்துக் கொண்டால் நடக்கும். பெரும்பாலான நேரம் யாருடைய உதவியுமின்றி நின்று கொண்டிருக்கும். படிக்கட்டுகளில் ஏறும். உடை அணிவிக்கும் போது நமக்கு உதவும். தம்ளரை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொள்ளும். அதிகம் பேசத் தெரியாவிட்டாலும் நாம் சொல்பவற்றில் பல விஷயங்களைப் புரிந்து கொள்ளும். எப்போதும் அம்மா பின்னாலேயே சுற்றும். அம்மாவை மாதிரியே நடந்து கொள்ள முயற்சிக்கும். அந்நியர்களைக் கண்டால் கூச்சப்படும். மற்ற குழந்தையுடன் விளையாடும்.

பன்னிரெண்டாவது மாதம்: தத்தித் தத்தி நடக்கத் தொடங்கும். என்றாலும் தவழ்வதையே பெரிதும் விரும்பும். உட்கார்ந்த நிலையிலிருந்து அப்படியே எழ முடியும். ஏதாவது ஒரு கையை அதிக அளவு உபயோகப்படுத்தும். ஸ்பூனைப் பயன்படுத்த முடியும். பொருட்களை வாரி இறைக்கும். சோக்பீஸ் போன்றவற்றால் தரை, சுவர்களில் கிறுக்கும். ஏதாவது செய்யும் போது தவறாகிவிட்டால் தவறிலிருந்து கற்றுக் கொண்டு சரியாகச் செய்ய முயற்சிக்கும். சாப்பிட ஆகாத்தியம் பண்ணும். அறிமுகமில்லாத இடங்கள், ஆட்களைப் பார்த்தால் பயம் ஏற்படும்.

நன்றி: தன்வந்திரி

## அழகுக் குறிப்புகள்



### உடல் பளபளப்பாக இருக்க வேண்டுமா?

தேங்காய் எண்ணெய் தடவிக் கொள்ளலாம். உணவு முறையும் முக்கியம். உணவில் புரதச் சத்து, கீரை, விட்டமின்கள், உள்ள உணவை சாப்பிடுவது நல்லது.

தக்காளி மலிவு விலையில் கிடைக்கும் போது விடவேண்டாம். ஜூஸ் ஆக்கி குடித்துவிட்டு, மீதிச் சக்கையை முகத்தில்போட்டுக் கொள்ளலாம்.

### இமைகளை அழகுபடுத்த

இரவில் தூங்கச் செல்லும் போது விளக்கெண்ணெய் தடவிக் கொள்ளலாம். காலையில் கழுவிவிடலாம்.

### அழகு சாதனப் பயன்பாடு

எந்தவிதமான அழகு சாதனப் பொருட்களையும் மூன்று மாதங்களுக்கு மேல் வைத்திருந்து பயன்படுத்துவது நல்லதல்ல. அது தோலுக்கு கேடு விளைவிக்கும்.

## இது சமையலறைச் சமாச்சாரம்!

★ சமையல் அறையில் குழந்தைகளை விளையாட அனுமதிக்காதீர்கள். அதேபோல் சமையலில் ஈடுபட்டிருக்கும் போது குழந்தைகளோடு கொஞ்சுவதோ, விளையாடுவதோ கூடாது.

★ எளிதில் தீப்பிடிக்க கூடிய மண்ணென்ணெய் போன்ற பொருட்களையும், தீப்பெட்டிகளையும் குழந்தைகள் எடுக்காத வகையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

★ சமைக்கும் போது பருத்தி ஆடைகளையே அணியுங்கள். நைலோன், பொலிஸ்டர் போன்றவை எளிதில் தீப்பிடிக்கும். அத்தோடு உடலோடு ஒட்டிக்கொண்டு ஆழமான காயங்கள் ஏற்பட வழிவகுக்கும்.

★ சமையலுக்கு வேண்டிய சாமான்களை அடுக்கி வைத்திருக்கும் அலமாரியை சிலர் அடுப்புக்கு பின்புறமாக மேலே சுவரில் மாட்டி வைக்கின்றனர். அது மிகவும்தவறு. அவற்றை எட்டி எடுக்கும் போது நம் ஆடைகள் தீப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

★ இரவு சமையலை முடித்த பின் அடுத்த நாள் உபயோகத்திற்கு தயாராக அன்றிரவே அடுப்பை சுத்தப் படுத்தி வைப்பது நல்லது.

★ பம்ப் ஸ்டவ்வை விட, திரி ஸ்டவ்வில் ஆபத்துக் குறைவு. பம்ப் ஸ்டவ்வை பம்ப் செய்யும் போது முகத்தை சிறிது விலகியிருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.

★ அடுப்பு எரிந்து கொண்டிருக்கும் போதே ஸ்டவ்வில் மண்ணெண்ணெய் ஊற்றாதீர்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

ஆக்கித் தருபவர் - அன்ன பூர்ணா

### பலாப்பழப் பாயாசம்

**தேவையானவை:**

பலாப்பழம்-20 சுளைகள்
சர்க்கரை- 1 1/2கிலோ
தேங்காய்-1

**எப்படி செய்வது?**

சுலபம்

நன்றாகப் பழுத்த பலாப்பழச் சுளைகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டி தண்ணீரில் போட்டு வேக வைக்க வேண்டும். அது கெட்டியாகும் சமயத்தில் சர்க்கரையை தண்ணீரில் கரைத்து ஊறவைக்க வேண்டும். இரண்டும் சுண்டி வரும் சமயத்தில் இறக்கிவிட வேண்டும்.

பின்னர் அந்தப் பழச்சாற்றை நெய்யுடன் கலந்து மீண்டும் கொதிக்க வைக்க வேண்டும். அந்தக் கலவை கொதித்துவரும் போது, பாதித்தேங்காயில் இருந்து பால் எடுத்து, அதில் ஊற்ற வேண்டும். ஒரு பக்குவமான நிலைக்கு வந்ததும், மீதியுள்ள பாதி அளவுத் தேங்காயை சிறு-சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டால் ரெடி. பால்பாயாசம் ரெடி.

### மாங்காய் ஊறுகாய்

**தேவையானவை:**

பெரிய மாங்காய்கள்-ஐந்து
பச்சை மிளகாய்- நான்கு அல்லது ஆறு.
பெருங்காயம்-சுண்டைக்காயளவு
கடுகு- ஒரு தேக்கரண்டி
எண்ணெய்- நான்கு தேக்கரண்டி.

**செய்யும் முறை:**

மாவடு ஊறுகாய் போடும் போது பெரிதாகவுள்ள மாங்காய்களை தனியாக எடுத்து பொடியாக நறுக்கி, பச்சை மிளகாயையும், நறுக்கிப் போட்டுப் பெருங்காயத்தை கரைத்துவிட்டு, உப்பைப்போட்டுக் கலந்து விடலாம். கடுகை எண்ணெயில் தாளித்துக் கலந்து கொள்ளலாம். மாங்காய் ஊறுகாய் ரெடி. இது இரண்டு நாளுக்குத்தான் இருக்கும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மருத்துவப் பக்கம்

## புற்றுநோயைத் தடுக்கும் தோடம்பழச்சாறு!



ஒவ்வொரு நாள் பொழுதையும் ஒரு கிளாஸ் தோடம்பழச் சாற்றைப் பருகி ஆரம்பித்தால் புற்று நோய் வராமல் தடுக்கமுடியும்.

கழுத்துப்பகுதிகளில் புற்று நோய் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்த ஆய்வாளர்களுக்கு இப்புதிய கண்டுபிடிப்பு வியப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. தோடம் பழச்சாற்றிலுள்ள விட்டமின் 'பி'சத்தே இதற்குக் காரணமாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அலபாமா பல்கலைக்கழக மருத்துவபீடம் இந்த ஆராய்ச்சியினை மேற்கொண்டது. இந்த ஆய்வுக்கு உணவு நிபுணர் சாள்ஸ் பட்டர் வேத் தலைமை தாங்கியிருக்கிறார். காய்கறி மற்றும் பழவகைகள் உணவுடன் சேர்க்கப்படுவது பொதுவாக புற்று நோயைத் தடுக்கவல்லன.

## தாய்மாரே! தாய்ப்பால் கொடுங்கள்!



தாய்மாருக்கு முக்கியமானதொரு செய்தி! குழந்தைகள் நீரிழிவு நோயாளிகளாக ஆவதைத் தாய்ப்பால் தடுக்கிறது. பசுவின் பாலும் குழந்தைகளுக்கு நல்லது தான். ஆனால் சுலபமாக நோய்த் தன்மையைப் பெறக்கூடிய- நோயைத் தடுக்கும் ஆற்றல் குறைந்த குழந்தைகளுக்கு தாய்ப்பாலே சிறந்தது. இளமைப் பருவத்தில் நீரிழிவு ஏற்படுவதை தடுக்கவல்லது தாய்ப்பாலே என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். தாய்ப்பால் அருந்தி வளரும் குழந்தைகளுக்கு இளமைக்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படாது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

நீரிழிவு நோய் கண்ட 400 குழந்தைகளை டாக்டர் ஹான்ஸ் மிக்கேல் டோஸ்ச் ஆராய்ந்துள்ளார். தாய்ப்பாலை எவ்வளவுக்கெவ்வளவு ஒரு குழந்தை உட்கொண்டு வளருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அக்குழந்தை நீரிழிவு போன்ற நோய்களிலிருந்து தப்பிக் கொள்ளுகிறது என்கிறார் அவர்.

## உங்கள் குழந்தை ஆரோக்கியமாக பிறக்க வேண்டுமா? நீங்கள் கொஞ்சம் இதைப் படியுங்கள்



முயல்களைப் பாருங்கள் முயல்களை!

எவளவு வேகம்! எவளவு வேகம்!

அது உண்ணும் உணவில்தான் இருக்கிறது ஊட்டச்சத்து. மருத்துவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமோ?

நீங்கள் முயல்போல எதிலும் ஒரு வேகத்துடன் செயல்பட விட்டமின் 'சி' சத்து மிக மிக அவசியமாம்.

இறைச்சி உணவுகளை உட்கொள்வோரை விட, முயல் போல காரட் மற்றும் காய்கறி வகைகளை உண்ணும் பழக்கமுடையவர்கள் ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்க முடியுமாம்.

விட்டமின் 'சி 'சத்துக் குறைந்தும், காய்கறிகளை ஒதுக்கியும் விட்டு புகைத்தல் பழக்கமும் கொண்ட வர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பல நோய்களுக்கு உள்ளா கக்கூடிய சாத்தியங்கள் உண்டாம்.

விட்டமின் 'சி' உணவில் குறைந்தவர்களின் விந்துவில் காணப்படும் ஜீவ அணுக்கள் பழுதடைந்தவையாக இருக்கும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

## இதயத்துக்கு தேவையானவை

ஒரு குறிப்பிட்ட அளவு விட்டமின் ஈ சத்து உட்கொண்டு வந்தால் இருதய நோய் ஏற்படுவதிலிருந்து தடுக்க முடியும். எட்டு ஆண்டுகள் பல்லாயிரக்கணக்கானவர்களை வைத்து பரீட்சித்துப் பார்த்த அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இந்த முடிவினை எட்டியுள்ளனர். அவர்களுக்காக நிர்ணயித்த அளவு விட்டமின் ஈ சத்தை இரண்டு வருடங்கள் தொடர்ந்து உட்கொண்டு வந்தவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவது 40 சதவிகிதம் குறைவு என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கொழுப்புச்சத்து' அதிகரிப்பதை இது தடுக்கிறது. இரத்த நாளங்களை கொழுப்புச்சத்து அடைத்து விடுவதனாலேயே இருதய நோய் உண்டாகிறது.

## குனியும் போது ஒரு பிடிப்பு!

சிலருக்கு திடீர் என்று குனிந்து ஒரு பொருளை எடுக்கும் பொழுது முதுகுப் பிடிப்பு ஏற்படுகிறது. பலருக்குக் காரணம் தெரியாமலேயே கூட முதுகுப் பிடிப்பு ஏற்படுகிறது. முதுகுப்பிடிப்பு ஏற்பட்டவர்கள் சில நாட்கள் ஓய்வு எடுத்தால் முதுகுப் பிடிப்பு சரியாகி விடும். அவர்கள் படுக்கும் போது கடினமான தரையின் மீது படுக்க வேண்டும். தலையணையை வைக்கக்கூடாது.

முதுகுவலி சரியாகி விடும் என்று அதை உதாசீனம் செய்து விடக்கூடாது. முதுகுப்பிடிப்பு அதிகமா்கி விடும்.

சிலருக்கு முதுகுவலி, இடுப்பு, தொண்டை, கால், பாதம் வரை தொடர்ந்து வலி ஏற்படுத்தும். இதற்குக் காரணம் என்னவென்றால் முதுகுத் தண்டு வடத்திலிருந்து புறப்படும் ஒரு நரம்பு மேலும், கீழும் உள்ள முதுகெலும்பினூடே துருத்திக் கொண்டு அழுத்துகிறது. இம்மாதிரியான வலிக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படும். உடல் பருமன் உடையோர் உடல் எடையைக் குறைப்பது நல்லது.

## இன்னொரு குழந்தை எப்போது?

ஒரு குழந்தைக்கும், இன்னொரு குழந்தைக்கும் இடையில் இரண்டு வருட இடைவெளி தேவை. அப்பொழுதுதான் தாயின் உடல்நிலை அடுத்த குழந்தையை ஏற்கும் சரியான நிலையை அடையும். இருப்பினும் நான்கு வயது இடைவெளிக்குப் பின் குழந்தை பெறுவது நலம். ஏனென்றால் நான்கு வயதிற்கு மேல் உள்ள இடைவெளியினால் பெரிய குழந்தை சிறிய குழந்தையைப் பார்த்துக் கொள்ளும். ஆகவே சிறு பருவத்திலேயே ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்துக் கொஞ்சி விளையாடும் குழந்தைகளாக உருவாகும் சூழல் ஏற்படுகின்றது. பெரிய குழந்தைகள் அந்த வயது குழந்தைகளுடன் நட்புக் கொள்ளும்.

## சொக்கலேட் பிரியர்களுக்கு

இனிப்பாகத்தான் இருக்கிறது. சொக்கலேட்டை தேடிச் சாப்பிடலாம். அதனால் கொழுப்புச் சத்து கூடப்போவதில்லை.

"ஒருவரது சுகத்துக்காக உணவுக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தாலும் அந்த உணவுடன் சொக்கலேட் சேர்த்துக்கொண்டால் தீமை ஏதும் ஏற்படாது. அதற்காக வருந்த வேண்டியதுமில்லை" என்று கூறுகிறார் பெனிசில்வேனிய பல்கலைக்கழக உணவு நிபுணரான பென்னி கிறீஸ்- எட்வேர்டன்.

நடுத்தர வயதுடைய 40 பேரை ஒரு மாதகால, கொழுப்புக் குறைந்த கட்டுப்பாட்டு உணவுடன் 9 துண்டு சொக்கலேட்டையும் சேர்த்து உண்ணுவதற்கு எவேர்டன் ஏற்பாடு செய்திருந்தார். ஒரு மாதத்தின் பின்னர் இவர்களுடைய கொழுப்பின் அளவு பரிசோதனையிடப்பட்ட போது வழமையான அளவிலேயே கொழுப்பு இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

"ஒரு வாரத்தில் 3 சொக்கலேட் துண்டுகளை உண்டாலே நடுத்தர வயதினருக்கு அபாயகரமான நிலை ஏற்படும் என்ற கூற்று இப்பொழுது பொய்ப்பிக்கப்பட்டு விட்டது. என்னிடம் பரீட்சைக்காக வந்தவர்கள் நாளொன்றுக்கு 9 துண்டு சொக்கலேட்டுகளை உட்கொண்டனர்" என்று எவேட்டன் என்ற விஞ்ஞானி பூரிப்புடன் கூறுகிறார்.

இனிப்பான செய்திதான்!

## அறிந்து கொள்ளுங்கள்

### இருதய நோய் இறப்பைத் தடுக்க ஒரு சிறப்பான கண்டுபிடிப்பு?



ஒரு புதிய ஆய்வு வியப்பூட்டும் தகவலைத் தந்துள்ளது. இருதய நோயினால் ஏற்படும் மரணவிகிதத்தை சரி அரைவாசியாகக் குறைக்கவல்ல மருந்து ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் விலையுயர்ந்ததொன்றல்ல. சாதாரண மக்னீசியமே அதுவாகும்.

இருதய நோய் கண்டு மருத்துவமனைக்கு நோயாளி கொண்டு வரப்பட்டதும் மக்னீசியம் கொடுக்கப்பட்டால் நோயின் இருதயத் தசைகளில் ஏற்பட்டுள்ள அழுத்தத்தை உடனடியாக நீக்குவதுடன் ஒழுங்கற்ற இருதயத் துடிப்பினைச் சீர்செய்கிறது. லண்டன் இருதய சிகிச்சை நிபுணரான டாக்டர் எஸ்.எம். ஹோணர் 930 இருதய நோயாளிகளை வைத்து மேற்கொண்ட ஆய்வின்படி இம் முடிவு எட்டப்பட்டுள்ளது. இருதய நோயாளிகள் இறப்பதை 54 சத விகிதமாக இம்மருத்துவ முறை குறைதிருப்பதாக டாக்டர் ஹோணர் தெரிவிக்கிறார்.

### கர்ப்பிணிகளுக்கு கட்டாயம் தேவை கல்சியம்!

மனிதனுடைய எலும்புகள் மற்றும் பற்கள் ஆகியவற்றை உறுதியாக்குவது சுண்ணாம்புச் சத்து. கர்ப்பிணிகளின் இரத்த அழுத்தத்தைச் சீராக்குவதற்கும் கண்பார்வை கெடாமலிருப்பதற்கும் இச்சத்து இன்றியமையாதது. உடலில் சுண்ணாம்புச்சத்துக் குறைவதால் தசைப்பிடிப்புகள் ஏற்படும். எலும்புகள் சக்தியை இழக்கக் கூடும்.

பெரும்பாலான உணவுகளில் சுண்ணாம்புச் சத்து இருக்கிறது. எனினும் பாலுணவுகளிலும் காய்கறிகளிலும் அதிகமாகக் கிடைக்கிறது. நாளொன்றுக்கு 3 கோப்பை பால் உட்கொண்டால் உடலுக்குத் தேவையான 800 மில்லி கிராம் சுண்ணாம்புச்சத்தைப் பெறலாம். சோயா பால், சோயா தயிர், விதைகள், இலைக்கறிவகை, டப்பாக்களில் பதப்படுத்தப்பட்ட மீன் ஆகியவற்றிலும் சுண்ணாம்புச் சத்துப் பெறலாம். இவைதவிர கல்சியம் மாத்திரைகளை உட்கொள்ளுவதன் மூலமும் சுண்ணாம்புச் சத்தைப் பெறலாம்.

ஆனாலும், அளவுக்கு மீறிய சுண்ணாம்பு சத்தும் கூடாது. அதனால் சிறு நீரகத்தில் கல்லு விளையும் வாய்ப்புண்டு. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சுதானே.

### பாரிசவாதம் வந்தால் பயமின்றிச் சிரியுங்கள்!



இரத்த அழுத்தம் காரணமாக பாரிச வாதம் ஏற்பட்டு செயலிழந்து துன்பப்படுபவர்களுக்கு ஒரு மருந்து. இம்முறையை அனுசரித்தால் நீங்கள் மீண்டும் நடமாடமுடியும். இவ்வாறு அறிவுரை கூறுபவர் இடது பக்கம் செயலிழந்து பல வருடங்கள் துன்பப்பட்டு இன்று எழுந்து நடமாடும் 79 வயதான நகைச்சுவை நடிகர் மின்னி பேள் என்பவர்.

இவருடைய இடது பாகம் பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. இன்று குணமாகி மேடைகளில் பழைய படி நகைச்சுவை -மற்றும் இசை விருந்தளித்து வருகிறார்.

இவர் கூறும் மருத்துவ முறை இதுதான் - வாதம் வந்து முடக்கிவிட்டதே என்ற கவலையை முதலில் ஒதுக்கி விடவேண்டும். தினசரி குறிப்பிட்ட அளவு தேகப்பயிற்சி கொடுக்க வேண்டும். பர்திக்கப்பட்ட பகுதிக்குத்தான் பிரதானமான பயிற்சி தேவை. இவையெல்லாவற்றையும் விட சிரிப்புத்தான் மிக முக்கியமானது. நன்றாகச் சிரியுங்கள். சிரிப்பின் மூலம் பாரிசவாதம் பறக்கடிக்கப்படலாம். நாமும் சிரிப்பதுடன் நம்மைச் சுற்றி யிருப்பவர்களையும் சிரிக்கும்படி செய்ய வேண்டும். இதனால் நோய் திடீரெனக் குணமடையப் போவதில்லை. மெதுவாகக் குணமடையலாம் என்பது மட்டும் உண்மை என்கிறார் மின்னி பேள்.

### உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு டேபிள் ஸ்பூன் வெண்ணெய்யை விட ஒரு டேபிள் ஸ்பூன் தேங்காய் எண்ணெயில் அதிக அளவு கொலஸ்டிரோல் இருக்கிறது.
- எல்லாரும் பயப்படுவது போல் அதிக அளவு உப்பு சேர்ப்பது ரத்த அழுத்தத்தை உண்டாக்குவதில்லை. உப்பு சேர்க்காவிட்டாலும் கூட ரத்த அழுத்தம் வர வாய்ப்பு உண்டு.
- மனிதனை மனிதன் கடிப்பதால் ரேபிஸ் என்று அழைக்கப்படும் வலிப்பு நோய் வருவதில்லை. ஆனால், மனிதனின் வாயில் இருக்கும் எண்ணற்ற நோய்க்கிருமிகளால் கடிபட்ட இடம் அழுகி, அவை ரத்தத்தில் ஊடுருவி, சில சமயங்களில் விபரீத விளைவுகள் கூட ஏற்படலாம்.
- புகை பிடிப்பவர்களுக்கு அதிக அளவு மாரடைப்பு, புற்றுநோய், பக்கவாதம் போன்றவை ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.
- அமெரிக்காவில் தற்போது நீடித்து வரும் புகைப்பிடிக்கும் வழக்கம் தொடர்ந்தால் 1995-ல் இரண்டரை கோடி மக்களுக்கும் அதிகமான பேர் நுரையீரல் புற்றுநோயால் மரணமடைய நேரிடலாம்.
- ஒரு சராசரி மனிதர், ஒவ்வொரு நாளும் 2 முதல் 3 பைன்ட் அளவு உமிழ்நீரைச் சுரக்கிறார். ஒரு சராசரி வாழ்க்கைக் காலத்தில் அது எட்டாயிரம் கலன் அளவை அநேகமாய் எட்டி விடுகிறது.
- ஒரு பெண்ணின் இதயம் ஆண்களை விட வேகமாகத் துடிக்கும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## ...குழந்தையும் கையும்

...நடிகை ராதிகா புதிய ...தன்றல் படத்தில் ...டித்து வருகிறார். படப் ...பிடிப்புக்கு வரும் போது ...ன் குழந்தையையும் ...ச்சிவருகிறார். தூங் ...ம் நேரம் தவிர குழந் ...தையை விட்டுப் பிரிந் ...ருப்பதேயில்லையாம்.

## ...சம்பளக் குறைப்பு

...சான்ஸ் இல்லாமல் கஷ்டப்பட்ட ...பாண்டியராஜன் தன் சம்பளத்தை ஒரு இலட்சமாகக் ...குறைத்தார். வந்தது சான்ஸ். கைவசம் மூன்று படங்கள்.

## ...ஜ்கிரணின் ராஜமனம்

...ஆரண்மனைக்கிளி வெற்றியினால் ...ட்டத்தில் ராஜ்கிரணுக்கு பெரும் ...சி. இப்போது இளையராஜாவின் ...ணன் மகன் பாவலர் மைந்தன் இயக்கத்தில் ஒரு படத்தில் ...க்கப்போகிறார். அது தவிர கிராம நாயகன் ராமராஜனை ...நாயகனாகவும், இயக்குநராகவும் ...ட்டு 'பெத்தவ மனசு' படத்தை தயாரிக்கவிருக்கிறார். ...ார்க்கெட் உள்ள போதே மற்றொரு ...ருக்கு வாய்ப்புக் கொடுப்பது ...தாரண விஷயமல்ல. ...

...ளை மணிரத்னம் அசோக ...ளனாக அறிமுகமாகி ...களில் ஒரு இரவு ...மைக்காட்சிகு தொடா ...ம் இலங்கை ரசிகர்கள் மருத்தினும் ...மையாகவிருக்கும் அஜய் ...த்தினம் ஒரு சபதம் ...ய திருமணிறார். சிறந்த ...ஷனுக்கான விருதை ...ரளிவே திருவேண் ...ண்ணுறார்.

...ிமேனன்கள் எல்லாம் ...நாயகர்களாக மாறி ...ரும். இந்த நேரத்தில் ...வில்லன் பஞ்சம் ...டாகுருக்கிறது. அஜய் ...ணைம் முயற்சி செய்தால் ...இருதை வாங்கலாம். அதற்கு முன்னர் ...திரராகாக்கட்டு நிறைய ...ங்கிக் கட்ட வேண்டி இருக்கும்.



## வனவிலங்குச் சட்டம் நடிகர் மீது பாய்ந்தது!

நாட்டுக்கொரு நல்லவன் படத்தை இயக்கி இரண்டாவது கதாநாயகனாக நடித்தவர் ரவிச்சந்திரன். இவர் ஒரு தமிழர் எனினும் கன்னடப்படவுலகில் ஒரு முன்னணிக் கதாநாயகன்.

அண்மையில் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

நடந்தது இதுதான். கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்தில் உள்ள ஒரு ஆற்றுப் பகுதியில் சினிமா சூட்டிங் நடத்தினார் ரவிச்சந்திரன். சூட்டிங்கின் போது யானைக் கூட்டத்தை ஆற்றில் இறக்கி ஓடச் செய்யும் சமயம் ஆற்றில் இருந்த ஏராளமான மீன்கள் இறந்தன.

இது குறித்து வனவிலங்கு பாதுகாப்பில் நாட்டமுடைய ஒருவர் பொலிசில் புகார் கொடுத்ததை அடுத்தே அவரும் அவரது உதவியாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## மினி சினி

★ பாரதிராஜாவின் இயக்கத்தில் உருவாக இருக்கும் கிழக்குச் சீமையிலே படத்தில் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ராதிகா, பாண்டியன், நெப்போலியன் போன்றவர்கள் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்கள்.

★ பிரபு முதன் முதலாக மலையாளப் படமொன்றில் நடிக்கிறார். படத்தின் பெயர் கஸ்டம்ஸ் டைரி.

★ மம்முட்டி, ரோஜா ஜோடியாக நடிக்க செல்வமணி இயக்கும் படத்தில் மம்முட்டி அரசியல்வாதியாக நடிக்கிறார்.

★ 'தைமாசம் பூவாசம்', 'இது நம்ம பூமி' படங்களைத் தயாரித்த நடிகர் ராதாரவி, இப்போது அண்ணாமலை படத்தின் வசனகர்த்தா சண்முகசுந்தரம் இயக்க ஒரு படத்தை தயாரிக்கிறார்.

★ இரு முறை சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற அர்ச்சனா தற்போது பட வாய்ப்புகள் எதுவுமின்றி நடனப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்.

★ கேரளத்திலிருந்து வந்த பாடகிகள் வரிசையில் சித்ரா, மின்மினியைத் தொடர்ந்து சங்கீதா என்பவர் இணைந்துள்ளார். மதுமதி படத்தில் இடம் பெற்ற ஓ மதிவாணா ......என்னும் பாடலைப் பாடியவர் இவரே.

★ அருண் பாண்டியன் நடிக்கும் ஊழியன் படத்திற்கு ஊமை விழிகள் படத்தை இயக்கிய இயக்குநர் அரவிந்தராஜ் பாடல்களை எழுதி உள்ளார்.

★ நடிகர் ராமராஜன் தற்போது ராஜ்கிரண் தயாரிக்கும் பெத்தவமனசு என்னும் படத்தை இயக்கி நடிக்கிறார்.

★ தற்போது வெள்ளித்திரைக்கும் புதிய முகம் திரைப்படத்தின் கதாநாயகன் சுரேஷ் மேனனுக்கு ரோஜா நாயகன் அரவிந்த் சுவாமியும், வினீத்திற்கு மீரா நாயகன் விக்ரமும் குரல் கொடுத்துள்ளனர்.



## நட்சத்திரங்கள் பிறந்தநாள்

| | |
|---|---|
| சரத்குமார் | |
| கௌதமி | ஜூலை 14 |
| ஸ்ரீதேவி | ஜூலை 2 |
| விஜயகாந்த் | ஆகஸ்ட் 13 |
| கார்த்திக் | ஆகஸ்ட் 25 |
| சிவாஜிகணேசன் | செப்டெம்பர் 13 |
| சத்யராஜ் | அக்டோபர் 1 |
| கமலஹாசன் | அக்டோபர் 3 |
| ரஜினிகாந்த் | நவம்பர் 7 |
| பிரபு | டிசம்பர் 12 |
| | டிசம்பர் 31 |

## சின்னத் திரையில் மின்னும் தாரகை



ஜோன் கொலின்ஸ்- ஹொலிவூட்டின் சின்னத்திரையில் கவர்ச்சித் தாரகை.

வழக்கமாக நடிகைகள் தமது வயதைக் கூறுவதில்லை. கூறினாலும் பதினாறுக்கு மேலே சொல்லுவதில்லை.

ஜோன் கொலின்ஸும் அப்படித்தான். ஆனால் இப்போது உண்மையான வயதைச் சொல்லி எல்லோரையும் வாய்பிளக்கச் செய்துவிட்டார்.

ஆம், 60 வயது. படத்தைப் பாருங்கள். இப்போதைய தோற்றம்தான் அது. நம்பமுடியலை. முடியாதல்லவா. ஜோன் கொலின்ஸை சந்தித்தால் முதலில் கேட்க வேண்டிய கேள்வி,

உங்கள் இளமைக்கு என்ன காரணம்? வழக்கமான இக் கேள்விதான் ஆனால் கொலின்ஸ் விடயத்தில் இன் வைக்கும் கேள்வியல்லவே



## ரோஜாவின் மறுப்பு!

குறுகிய காலத்திலேயே புகழ் பெற்ற ரோஜா தமிழ், தெலுங்கு, மலையாள டாப் ஸ்டார்களுடன் நடித்துள்ளார். தற்போது இவர் படங்களை குறைத்துக் கொண்டு வருகிறார்.

தெலுங்கில் இரண்டு படம், தமிழில் உழைப்பாளி, அதிரடிப்படை. அவரது கைவசம் உள்ளவை அவ்வளவுதான்.

தற்போது புதுப்படங்களில் நடிக்க வரும் அழைப்புகளையும் மறுத்து விடுகிறார். தமிழ் திரையுலக முன்னணி கதாநாயகர்கள் விஜயகாந்த், சத்யராஜ், பிரபு படங்களிலும் நடிக்க மறுத்துவிட்டார்.

அண்மையில் புவி ...ம் பட நிறுவனத்தின் தயாரிப்பில், பி. வாசு இயக்க விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்க ரோஜாவை அணுகிய போது நோ சொல்லி விட்டார்.



## மீனாவின் யோகம்!

எஜமான் படவெற்றிக்குப் பின்னர் மீனா மூன்று தமிழ்ப் படங்களில் நடிக்க இருக்கிறார்.

பாக்கியராஜ் இயக்கத்தில் 'ஒரே ஒரு ராஜகுமாரி' யிலும் பிரபு நடிக்க மனோபாலா இயக்கும் சத்யஜோதி பிலிம்ஸின் ஒரு படத்திலும், ஏவிஎம்மின் படமொன்றில் விஜயகாந்திற்கு ஜோடியாகவும் நடிக்கவுள்ளார்.





## சரவணனின் யாகம்!

வைதேகி வந்தாச்சு படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகியவர் சரவணன். விஜயகாந்தைப் போன்ற தோற்றமுடைய இவரின் முதல் படம் படு தோல்வி அடைந்தது. எனினும், இவரது சமீபத்திய படங்களான பொண்டாட்டி ராஜ்யம், அபிராமி, மாமியார் வீடு, சூரியன் சந்திரன் வெற்றிப்படங்களாக அமைந்தன. அதன் மூலம் கைவசம் பல படங்கள்.

சத்திய ஜோதி தியாகராஜன், கங்கை அமரன் போன்ற வெற்றிப்பட இயக்குனர்களின் இயக்கத்திலும் நடிக்கவுள்ளார்.

தற்போது மிகப் பிரம்மாண்டமாகத் தயாரிக்கப்பட்டு வரும் யாகம் திரைப்படத்தில் வித்தியாசமானதொரு கெட் அப்பில் நடித்து வருகிறார். ரோஜா புகழ் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கும் இப்படத்திற்கு கதை, திரைக்கதை வசனம் எழுதி இயக்குபவர் [illegible]



## ரூபினியின் ராசி

தமிழ்த் திரையுலகில் தற்போது காணாமல் போய் விட்ட ரூபினிக்கு ரஜினி ராசி. அவர் ரஜினியோடு நடித்த மனிதன் பெரிய திருப்பத்தைக் கொடுத்தது. தற்போது மார்க்கெட் டல்லாகிப் போன நிலையில் ரஜினியின் உழைப்பாளி படத்தில் சான்ஸ் கிடைத்திருக்கிறது. நாயகியாக அல்ல, நடனக்காரியாக.

'புதியதென்றல்' படத்தில் சிவரஞ்சனி, ரமேஷ்அரவிந்த்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள்! பிரித்தெடுக்க மருத்துவர்கள் நடத்திய போராட்டம்!!

மேரி-லியாம் தம்பதியினருக்கு மூன்று குழந்தைகள்.

நான்காவது குழந்தை(கள்) ஒட்டியே பிறக்கும் என்று மருத்துவர்கள் முன் அறிந்து கூறிவிட்டனர்.

எனவே முதல் மூன்று பெண் குழந்தைகளையும் அழைத்து மேரி-லியாம் தம்பதியினர் நிலமையை விளக்கி விட்டனர்.

நான்காவது குழந்தை(கள்) பிறந்த போது தலைகள், கழுத்துக்கள், நுரையீரல் ஆகியவை தனித்தனியாக இருந்தன. ஆனால் தோளிலிருந்து கீழே இடைவரை இருவரும் ஒருடல் போல ஒட்டியே பிறந்தனர்.

பிரசவமான போது தாயிடம் உடனடியாக குழந்தைகளைக் காட்ட மருத்துவர்கள் விரும்பவில்லை.

ஏற்கனவே தாய்க்கு விபரம் தெரியும் என்றாலும் அதிர்ச்சி ஏற்படக்கூடும் என்று கருதினார்கள்.

குழந்தைகளை முதலில் பார்த்த தந்தை லியாம் திகைப் படைந்தாலும் சமாளித்துக் கொண்டார்.

இரு குழந்தைகளும் பின்னர் தாயாரிடம் சேர்க்கப்பட்டனர்.

இரு குழந்தைகளும் ஒன்றாக இணைந்திருந்தமையினால் வளர்ப்பு கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது.

அழுவது- சிரிப்பது-சண்டை போடுவது அனைத்தும் சாதாரண குழந்தைகளிடம் காணப்படுவதைப் போலவே இருவரிடமும் காணப்பட்டன.

மூன்று வயது பூர்த்தியாகி பிறந்த நாள் கொண்டாடும் வரை நிலமை ஓரளவு பிரச்சனை இல்லாமல் இருந்தது.

இருவரையும் தனித்தனியே பிரித்து விடுவதே நல்லதென்று பலர் ஆலோசனை சொன்னார்கள்.

முதலில் மேரி-லியாம் தம்பதியினர் விரும்பவில்லை. பின்னர் ஒருவாறு சம்மதம் தெரிவித்தனர்.

பிரிக்காமல் இருந்து இரு குழந்தைகளும் ஒன்றாக இறப்பதை விட பிரிப்பதே மேல் என்று மனதைத் தேற்றிக் கொண்டனர்.

இலண்டனில் உள்ள தனியார் மருத்துவ மனை யொன்றில் 25 மருத்துவ நிபுணர்கள் சத்திர சிகிச் சையை மேற் கொண்டனர்.

இரு குழந்தைகளையும் வெட்டிப் பிரிக்க 15 மணி நேரம் மருத்துவர்கள் போராடினார்கள்.

அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக முடிவுற்றது. மேரி -லியாம் தம்பதியினர் மகிழ்ச்சியில் குதித்தனர்.

அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. இருதயம் பலம் குன்றி இருந்த ஒரு குழந்தை காட்டே சிகிச்சை முடிந்த நாலாவது நாள் இறந்து விட்டாள்.

தாங்க முடியவில்லை கவலை.

என்றாலும் ஒரு ஆறுதல். ஒட்டியிருக்கும் போது காட்டே இறந்திருந்தால் மற்றக் குழந்தையும் இறந்திருக்கும்.

காட்டே இல்லாவிட்டால் என்ன? அவளிடம் காணப்பட்ட அத்தனை அம்சங்களும் மற்றக் குழந்தையான எலிஸ் இடம் நிறைந்திருக்கின்றன.

காட்டே தன்னோடு இல்லாத வெறுமையை மற்றக் குழந்தையான எலிஸ் சில நேரங்களில் உணர்கிறாள். தூக்கத்தில் விழித்து காட்டே தன்னோடு ஒட்டியிருந்த இடத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறாள்.



## தகவல் பெட்டி

உலக வரலாற்றில் நாடுகளுக்கிடையே நடக்கும் போரில் இலட்சக் கணக்காணோர் கொள்ளப்படுகின்றனர்.

ஆதிகாலத்தில் யுத்தம் நடக்கும் போது படைவீரர்கள் மட்டும் தான் கொல்லப்பட்டனர்.

### யுத்தத்தால் இறந்தவர்கள்

நவீன ஆயுதங்கள் பாவிக் கப்படும் இக்காலத்தில் போர் வீரர்கள் மட்டுமல்ல அப்பாவிகளும் மாண்டு போகின்றனர்.

*இதோ சில தகவல்கள்:*

*1851 முதல் 1964 வரை சீனாவில் நடைபெற்ற 13 வருட கால சண்டையில் 2 கோடிப் பேர் மாண்டனர்.*

*1916ம் ஆண்டு நடைபெற்ற முதல் உலகப் போரில் 90 இலட்சத்து 70 ஆயிரம் பேர் மாண்டனர்.*

*இரண்டாவது உலகப் போரில் மாண்டவர் தொகை 5 1/2 கோடிப் பேராகும். இதில் மிகவும் துயரமானது 4 கோடிப் பேர் அப்பாவி மக்களாவர்.*

*கொரியாவில் 1950 முதல் நடைபெற்ற மூன்று வருட யுத்தத்தில் 50 இலட்சம் பேர் மாண்டு போயினர்.*

*வியட்நாமில் 1965 முதல் 1975 வரை நடைபெற்ற யுத்தத்தில் 10 லட்சம் பேர் வரை கொல்லப் பட்டனர்.*



## ஓவியப் புன்னகையும் ஒளிந்து கிடந்த மர்மமும்!

அழகான பெண்களின் புன்னகையை மோனலிசாவின் புன்னகை என்று வர்ணிப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

மோனலிசா என்பது புகழ் பெற்ற ஓவியம்.

லியனடோ டாவின்சி என்ற உலகப் புகழ் பெற்ற ஓவியர் அதனை வரைந்தார். அந்த ஓவியம் இன்று இலங்கை உட்பட உலகெங்கும் காணப்படுகிறது.

அந்த ஓவியத்தை வரைய யார் மொடலாக இருந்திருப்பார்கள் என்று அன்று முதல் இன்று வரை மர்மமாகவே இருந்தது.

இது கொம்பியூட்டர் யுகம் அல்லவா? எனவே கொம்பியூட்டர் உதவியோடு யார் அந்த மொடல் என்று இப்போது ஆராய்ந்துள்ளார்கள்.

முடிவு அதிர்ச்சி தருகிறது. சற்று ஏமாற்றமும் தருகிறது. கூடவே கொஞ்சம் ஆச்சரியம்!

ஆம் -அந்த புகழ்வாய்ந்த புன்னகை எந்தப் பேரழகியும் வழங்கிய கொடை அல்ல.

அந்த ஓவியத்தை வரைந்த லியனடோ டாவின்சியே அதற்கு மொடலாகவும் இருந்துள்ளார். டாவின்சி பெண் அல்ல - ஆண்.

உயர் தொழில்நுட்ப கொம்பியூட்டர், ஓவியரின் படத்தையும் மோனலிசா ஓவியத்தையும் அலசி ஆராய்ந்தது.

ஓவியரின் படத்தையும் ஓவியத்தையும் மூக்கினை மையமாக வைத்து இரு கூறாகப் பிளந்து கொம்பியூட்டர் ஆராய்ந்தது. தலை முடி வரி அமைப்பு, கன்புருவ வரி அமைப்பு, கண்களின் அமைப்பு, நாடி போன்றவை ஒன்றாகவே தென்பட்டன. உதடுகளின் விழிம்புகளில் எந்த வித்தியாசமும் காணப்படவில்லை. உதட்டின் அமைப்பை மட்டும் சற்று மாற்றி அமைத்துள்ளார். புன்னகையையும் இளமையையும் கொண்டு வருவதற்காக வாயின் அமைப்பை மேல் நோக்கித் திருப்பியுள்ளார்.

இப்போது மோனலிசா ஓவியப் புன்னகையின் பின்னால் மறைந்து கிடந்த மர்மம் வெளியே வந்துவிட்டது. தனது ஓவியத்திற்கு தானே மாதிரியாக (மொடலாக) இருந்து டாவின்சி எங்கும் தன் புன்னகையை விநியோகித்து விட்டார்.



## தேன் கிண்ணம்

**ஏக்கப் புழுக்கம்**

இளமையே உனது
ஜன்னலை திறந்து விடு.
இல்லையேல் ஏக்க
புழுக்கத்தில் இறந்து போவேன்.

கனவில் தானே-நீ
முத்தம் தருகிறாய்
நனவில் மட்டும்
யுத்தம் செய்கிறாய்.

ஸ்ரீராம்
கொழும்பு 11.

**சீதனம்**

மனைவி-
அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்!

கணவன்-
அமைவதெல்லாம்
மனைவி கொடுத்த பணம்!

கிண்ணியா அமீரலி.

**காதல்...**

அன்பே!
நீ
துயரப்படவில்லையென்றால்
அது உண்மையில்
பொய்-
ஏனெனில்
நான்
துயரப்படுகிறேனே!

தங்கவிஜி
வத்தளை.



**"மெழுகு வத்தி"**

பிறருக்காக
தன்னலம் கருதாது
தன்னைத் தானே
உருக்கிக் கொள்ளும்
ஓர்.....
உத்தம தியாகி

செல்வி- பிரமிளா குமார்
கொலன்னாவ.

**வயிறு!**

விபச்சாரத்தில்
ஈடுபட்டால்
முக்கியம் வயிறு
விபச்சாரத்தில் ஈடுபட
முக்கியம் வயிறு.

திதக்ஷலா-திருமலை.

**சூரியனே நில்!**

மனிதத்தன்மையுள்ள
ஒரு மனிதன்
ஆயுதமில்லா
உலகம்
பயங்கரவாதமில்லா
இலங்கை
மதத்தால்
சிதைந்து போகாத
இந்தியா
வறுமையில்லாத
சோமாலியா
நிற ஒதுக்கலில்லாத
தென்னாபிரிக்கா
கற்பழிப்பில்லாத
பொஸ்னியா
இத்தனையும்
நிகழும் வரைக்கும்
சூரியனே
உதிக்க வேண்டாம்
விடியல்களே
விடிய வேண்டாம்.

நகுமான்.ஏ.ஜெமீல்
203 ஏ/1 ஹிஜ்றா வீதி
மருதமுனை-03
கல்முனை.

**நீ அறிவாயோ?**

மனதின் கவலைகள்
மங்கை நீ அறிவாயோ?
இரவு தோறும் இரவல் கேட்டு
அழும் என் இளைய
நெஞ்சத்தை இளையவளே
நீ அறிவாயோ?

வசந்தம் வந்ததென்று
வாழ்க்கையை வளமாக்கினேன்
வனிதையே அதுவே
எனக்கு வறட்சியாகும்
என்பதை நீ அறிவாயோ?

உன் பிரிவுத் துயரால்
பூ இதயம் பூகம்பமாய்
வெடித்து சிதறுவதை
சின்னவளே
நீ அறிவாயோ?

எம் சிராஜ் ஆப்டீன்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அரைப்பக்கக் கதை

# சொல்ல நினைத்தது

-பாலா. சங்குப்பிள்ளை-



மேனகா ஆகாயத்தில் மிதந்தாள்.

அவளால் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை. பல நாட்களாக எதிர்பார்த்திருந்தது எதிர்பாராத சமயத்தில் கையில் கிடைத்ததில் அவளுக்கு உள்ள மெங்கும் உவகை துள்ளியது.

மேனகா ஆடைத்தொழிற்சாலை யொன்றில் வேலை செய்கிறாள். தினமும் எட்டுமணிக்கெல்லாம் வேலைக்குப் புறப்பட்டுவிடுவாள். அவளுடன் அவளுடைய நெருங்கிய தோழி மைதிலியும் அதே தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்வது வழக்கம்.

அவன் பெயர் பாலமுரளி. அவன் ஒரு பள்ளி ஆசிரியன். வளர்ந்து வரும் ஒரு எழுத்தாளன். அவனுடைய கதை, கட்டுரைகள் அடிக்கடி பத்திரிகையில் வெளி வரும். அவனுக்கு ஏராளமான ரசிகைகள். அவர்களில் மேனகா வும் ஒருத்தி. ஆரம்பத்தில் ரசிகை யாக இருந்தவள் அவளையறியா மலேயே மெல்ல, மெல்ல அவனை காதலிக்கத் தொடங்கினாள். ஆனால் அதை வெளியிடவில்லை. மனதுக்குள்ளேயே காதல் மலர்கள் பூத்துக் குலுங்கின. மேனகா பேரழகி இல்லைதான். ஆனால் அவள் முகத்தில் ஆரவாரமில்லாத ஒரு அழகு இருந்தது. நடையில் நளினம் இருந்தது. பாலமுரளியின் சிரித்தமுகம். கம்பீரமான நடை. எடுப்பான தோற்றம். இவை மேனகாவை காதலில் கட்டிப் போட்டன.

பாலமுரளியும் மேனகா பயணம் செய்யும் அதே பஸ்ஸில் தான் தினந்தோறும் பயணம் செய்தான்.

பாலமுரளி கூச்ச சுபாவ முள்ளவன். பெண்களைக் கண் டால் காததூரம் ஓடி விடுவான். அப்படிப்பட்டவன் மேனகாவைக் கண்டு புன்னகைக்கத் தொடங் கினான். சாதாரண புன்னகையுடன் ஆரம்பமான அவர்களின் நட்பா னது, பல தரப்பட்ட விஷயங் களை விவாதிக்குமளவுக்கு வளர்ந்தது. அவர்கள் இன்றைய இலக்கியத்தைப் பற்றி பேசி னார்கள்.

சினிமாவைப் பற்றி பேசி னார்கள்.

பேசினார்கள்..... பேசினார்கள் ...பேசினார்கள்.

எந்த சமயத்திலும் அவர்களின் பேச்சுக்களோ நடவடிக்கைகளோ எல்லை மீறியதில்லை.

நாட்கள் ஓடின.

மாதங்கள் மறைந்தன.

மேனகா– பலமுறை முயன்றும் தன் காதலை அவனிடம் சொல் லாமலே நாட்களை ஓட்டினாள். பலமுறை முயன்றும் கடைசியில் நாணம் இடம் கொடுக்கவில்லை. இப்படியிருக்கையில் தான் பால முரளி தயக்கத்துடன் அந்த கடிதத்தை அவளிடம் கொடுத் தான். அப்போது அவன் கைகள் நடுங்கின. முகம் அதிகமாக வியர்த்தது. கடிதத்தைக் கொடுத்து விட்டு விறுவிறுவென போய் விட்டான்.

மேனகாவுக்கும் ஒரு புறம் பயமா கவும், மறுபுறம் கடிதத்தில் என்ன எழுதியிருக்குமோ என்ற ஆவலும் ஒன்றுசேர்ந்து கொண்டன.

தனியாக ஒரு இடத்துக்கு ஓடினாள்.

நடுங்கும் கரங்களினால் இதயம் படபடக்க கடிதத்தைப் பிரித்தாள்.

"..... மேனகா! எப்படித் தொடங்குவது? என்ன எழுதுவது என்று தெரியவில்லை. உன்னைச் சந்தித்த நாள் முதலாக என் நெஞ்சில் பதிந்துவிட்ட அந்த எண்ணத்தை எப்படி சொல்வது என தடுமாறுகிறேன். நேரில் சொல்வதற்கு முன்னால் இந்தக் கடிதம் மூலமாக உன்னை சற்று ஆசுவாசப்படுத்த விரும்புகிறேன். என் உள்ளத்துக் கனவுகளை நீ தான் நனவாக்க வேண்டும். என்மேல் உனக்கு நம்பிக்கையிருக்கு மானால் நாளை வேலை முடிந்து ஐந்து மணியளவில் பூங்காவனத்தில் எனக்காகக் காத்திருக்க வேண்டும். அங்கே என் இதயத்தை உன்னிடம் திறந்து காட்ட எண்ணி யுள்ளேன்......"

மேனகா கடிதத்தை பலமுறை வாசித்தாள். ஒவ்வொரு முறையும் அக்கடிதத்தை படிக்கும் போதும் முதல் முறை படிப்பதைப் போன்ற ஓர் இன்பம் ஏற்பட்டது. அன்று இரவு அவளுக்கு உறக்கம் வரவில்லை. வர்ணக் கனவுகள் வந்து தூக்கத்தை தூக்கிப் போயின.

மறுநாள் காலை–

நன்றாக அலங்காரம் செய்து கொண்டாள்.

வேலைக்குப் போனாள். வேலை ஓடவில்லை. நேரமும் ஓடவில்லை.

மாலை நேரத்துக்காக சோலைக் குயிலைப் போலக் காத்திருந்தாள்.

எதிர்பார்த்த மாலையும் வந்தது. கனவுகளுடன் மெதுவாக காலை வைத்து நடந்தாள். நடையில் ஒரு துள்ளல் இருந்தது. பார்வையில் கனவு இருந்தது.

பூங்காவனம் வந்தது.

அங்கே–

பாலமுரளி அவளுக்காக காத்திருந்தான்.

அவள் தயங்கியவாறு அனருகில் சென்றாள்.

மனம் படபடத்தது.

அவன்– அவளை ஏறிட்டான்.

எங்கும் அமைதி–

ஒருவரும் பேசவில்லை.

அவள் உதடுகள் துடித்தன. ஆனால் பேசவில்லை.

அவன் கண்கள் அவளை ஊடுருவின– ஆனால் பேச வில்லை.

யார் முதலில் பேசுவது?

அவனே மௌனத்தைக் கலைத்தான்.

"மேனகா?"

"ம்"

"என்னோட கடிதத்தை படிச்சியா?

"ம்"

"இந்த விஷயத்துல உன்னோட பூரண ஒத்துழைப்பு எனக்கு தேவை." அவள் பேசவில்லை. ஆனால் மனதுக்குள் சொன்னாள். "இதுல ஒத்துழைப்பு மட்டு மல்ல....என் பூரண சம்மதமும் இருக்கு"

அவள் முகம் அந்திவானம் போல சிவப்பாகியது.

மறுபடியும் அங்கே அமைதி குடிக்கொண்டது...

பாலமுரளி மனதுக்குள் ஒத்திகைப் பார்த்துக் கொண்டான். பிறகு பேசினான்.

"மேனகா.........வந்து ...... வந்து......வந்து....நான் உன் தோழி மைதிலியை மனதார விரும்பு கிறேன்....இந்த விஷயத்த எப்படி அவகிட்ட சொல்றதுன்னு தெரியாம தவிச்சிக்கிட்டிருந்தேன். நீயும் அவளும் ரொம்ப நெருக்கம்னு தெரியும். அது தான் உன்னோட உதவியை நாட நினைச்சேன். எனக்காக நீ தூது போவியா மேனகா......? சொல்.....மேனகா....! எனக்கு உதவி செய்வியா?

அவ்வளவுதான்.

அவள் தலைக்குள் பட்டாசு வெடித்தது.

இதயத்தில் பூத்துக் குலுங்கிய காதல் மலர் வாடி வதங்கியது.

இதயம் நொருங்கியது.

நிற்கவும் முடியவில்லை. கண்கள் கலங்கின.

கண்ணீரை மறைத்துக் கொண்டு, விம்மலைக் கட்டுப் படுத்தி,

சோகத்துடன் ஆனால் வேகத் துடன் விடுவிடுவென அந்த இடத்தை விட்டு ஓட–

பாலமுரளியோ எதுவுமே புரியாமல்

திகைத்து நின்றிருந்தான்–

(யாவும் கற்பனை)

## இந்த வாரம் உங்கள் பலன்

(4.07.93 முதல் 10.7.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### கிரக சஞ்சாரம்

மிதுனம்– சூரியன், புதன்
சிங்கம்– செவ்வாய்
கன்னி– வியாழன்
விருச்சிகம்– இராகு
மகரம்– சனி
இடபம்– வெள்ளி, கேது

தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சந்திரன் சஞ்சாரம் செய்வார்.

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நன்மை, பண வரவு | காலை 11 மணி |
| திங்கள்- | தேக சுகம், சுக காரிய மகிழ்ச்சி | காலை 9 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கடன் பயம். | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பிரயாணம். | காலை 8 மணி |
| வியாழன்- | தெய்வ அனுகூலம், பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | எதிர்பாரா பிரச்சனை, வீண் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | விருந்தினர் வருகை, பணத் தட்டுப்பாடு. | பி.ப. 13 மணி |

### இடபம்:

(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் பேறு, பெரியோர் அனுகூலம். | காலை 8 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், பண நெருக்கடி. | காலை 1 மணி |
| செவ்வாய்- | தந்தை வழி நன்மை, தார சுகம். | பகல் 12 மணி |
| புதன்- | இனசனச் சேர்க்கை, பொருள் வரவு. | காலை 9 மணி |
| வியாழன்- | கடன் தொல்லை, வெளியூர் பிரயாணம். | காலை 11 மணி |
| வெள்ளி- | தூரதேச நன்மை, துயர்பல நீங்கல். | காலை 8 மணி |
| சனி- | அதிகாரச் சித்தி, சிலருக்கு திடீர் சுகயீனம். | காலை 10 மணி |

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தேக சுகம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| திங்கள்- | குடும்ப நன்மை, பிள்ளைகளால் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணப் புழக்கம், பதவி உயர்வு. | காலை 10 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, மன சஞ்சலம். | பகல் 1 மணி |
| வியாழன்- | பண வரவு, கௌரவளம். | காலை 9 மணி |
| வெள்ளி- | உறவினரால் நன்மை, உயர்வு. | காலை 7 மணி |
| சனி- | காரிய தாமதம், நடைக் கஷ்டம். | காலை 11 மணி |

### கர்க்கடகம்:

(புனர்பூசம் நான்காம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, தெய்வ தரிசனம். | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, கல்விப் பேறு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை அகலும், காரியசித்தி. | காலை 9 மணி |
| புதன்- | எதிர்பாரா நட்பு, சுப காரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | காதல் வெற்றி, வெளியூர் பிரயாணம். | காலை 8 மணி |
| வெள்ளி- | எண்ணங்கள் ஈடேறல், துயர் நீங்கல். | காலை 6 மணி |
| சனி- | தொழிலில் சிரத்தை, செலவு மிகுதி. | காலை 10 மணி |

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | ஏமாற்றம், துயர் அதிகரிப்பு. | காலை 8 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, கடின உழைப்பு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | கல்வி மேன்மை, வாக்கு வசீகரம். | காலை 11 மணி |
| வியாழன்- | தொழில் மேன்மை, விருந்துபசாரம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, பெரியோர் நட்பு. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, உயர்வு. | காலை 6 மணி |

### சிம்மம்:

(மகம், பூசம், உத்தரம் முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உல்லாச வாழ்வு, உறவினர் சேர்க்கை. | காலை 7 மணி |
| திங்கள்- | குடும்ப சுகம், புகழ், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணவரவில் தடை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | அந்நியரால் உதவி, மறைமுக எதிர்ப்பு. | காலை 11 மணி |
| வியாழன்- | தூர இடப் பிரயாணம், எடுத்த கருமம் வெற்றி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, புதிய தொழில் முயற்சி. | காலை 8 மணி |
| சனி- | மங்கள தரிசனம், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, துயர்நீங்கல், | காலை 11 மணி |
| திங்கள்- | கடின உழைப்பு, கடன் தொல்லை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பண வருவாய், வாக்குக் கலகம். | காலை 8 மணி |
| புதன்- | பொருள் சேர்க்கை, புண்ணியப் பேறு. | காலை 6 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், பெரியோர் நட்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | புகழ், கௌரவம், பணவரவு. | காலை 11 மணி |
| சனி- | அதிகார விருத்தி, அந்நியரால் நன்மை. | பகல் 12 மணி |

### கன்னி:

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பாராட்டு, பிரயாணம். | காலை 10 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், தொழில் சித்தி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பணவரவு, பெரியோரின் நட்பு. | காலை 10 மணி |
| புதன்- | காரியத் தடை, அலைச்சல் மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | குடும்பத்தில் சோகம், குருவினால் உதவி. | காலை 8 மணி |
| வெள்ளி- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | துயர் நிங்கும், பிள்ளைகளால் மகிழ்வு. | காலை 9 மணி |

### மகரம்:

(உத்தராட பின் முக்கால், திருவோணம் ஆவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தேக சுகம் விருத்தி, இனசனக் கொண்டாட்டம். | காலை 10 மணி |
| திங்கள்- | பெண்களினால் சுகம், காரியானுகூலம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவில் மந்தம், வீண்அலைச்சல். | காலை 7 மணி |
| புதன்- | காரியசித்தி, கடன் பயம் நீங்கல். | காலை 11 மணி |
| வியாழன்- | தானதரும சிந்தை, பெரியோர் நட்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, எண்ணங்கள் நிறைவேறல். | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் உதவி, இறைபக்தி. | காலை 8 மணி |

### தனு:

(மூலம், பூராடம், உத்தராம் முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் வாக்குவாதம், மனச் சஞ்சலம். | காலை 8 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், மன மகிழச்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | வாக்குவசீகரம், தானதரும சிந்தை. | காலை 11 மணி |
| புதன்- | அந்நியரால் உதவி, அருள் கடாட்சம். | காலை 10 மணி |
| வியாழன்- | தூய சிந்தை, பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், பொருள் விரயம். | காலை 6 மணி |
| சனி- | பொருள் பேறு, தார சுகம். | காலை 9 மணி |

### விருச்சிகம்:

(விசாகத்து நாலாம் பாதம், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பூமியால் நன்மை, புதியோர் நட்பு சகவாசம். | காலை 7 மணி |
| திங்கள்- | சௌக்கிய சுகம், அந்நியரால் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணத் தட்டுப்பாடு, புதிய முயற்சி. | காலை 10 மணி |
| புதன்- | பணவரவு, தொழில் நிலை உயர்வு. | காலை 8 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், தெய்வ தரிசனம். | காலை 9 மணி |
| வெள்ளி- | உயர்ந்தோர் நட்பு, மறைமுக எதிர்ப்பு. | காலை 11 மணி |
| சனி- | புதிய நட்பு, அதிக செலவு. | காலை 6 மணி |

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | இல்லச்சிறப்பு, எடுத்த காரியம் வெற்றி. | பி.ப. 13 மணி |
| திங்கள்- | தனலாபம், தொழிற் சித்தி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | சுப கருமம் நன்மை, அந்நியர் உதவி. | காலை 8 மணி |
| புதன்- | கவலை நீங்கும், பணவருவாய் உண்டு. | காலை 9 மணி |
| வியாழன்- | கல்வியால் நன்மை, கஷ்டம் நீங்கும். | காலை 10 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், கடவுள் வழிபாடு. | காலை 11 மணி |
| சனி- | திடீர் செலவினம், உறவினரால் தொல்லை. | பகல் 12 மணி |

## ஐக்கூ கவிதைகள்

ஐக்கூ கவிதைகள் என்றால் மூன்று வரிகள். மூன்றாம் வரியில் ஆ...அட..என வைக்கும் திருப்பம்.

தமிழகக் கவிஞர் அமுத பாரதியின் ஐக்கூ கவிதைகளில் இதோ சில:

விலகினர்
வறுமை
சுடுகாடு

பயிர் வளர்த்தவன்
பாடுபட்டான்
வளைகள் முழுவதும் நெல்

முளையிலேயே கிள்ள நினைத்தேன்
முடியவில்லை தவிக்கிறேன்
வட்டிக்கு வாங்கிய கடன்.

இரத்தச் சிவப்பாய் மாலை வானம்
அட்டைக் கருப்பாய் இரவு வானம்
ஆனால் அதுவோ நீலவான்.

எப்படி? நீங்களும்
முயற்சித்துப் பார்க்கலாமே.

**தேவை**

கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு கணக்குத்துறையில் அனுபவம் வாய்ந்த எழுதுவினைஞர் தேவை. தகமைகளுடன் விண்ணப்பிக்கவும்.

மே/பா தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை,
கொழும்பு 5.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# குதிரை சாகவில்லை

## பாப்பா முரசு



ஒரு அரசன் மிகுந்த குதிரைப் பிரியர். விதம் விதமான குதிரைகளை எங்கு பார்த்தாலும் வாங்கி வந்து லாயத்தில் கட்டி விடுவார். அவைகளைப் போருக்குப் பயன்படுத்த மாட்டார். சவாலுக்கும் பயன்படுத்தமாட்டார். காலையில் கண்விழித்ததும் லாயத்திற்கு வந்து குதிரைகளைப் பார்த்து அவற்றைத் தடவிக்கொடுத்த பிறகுதான் ஆகாரமே உட்கொள்வார்.

ஒவ்வொரு குதிரைக்கும் பெயரைச் சூட்டிக் கூப்பிட்டு மகிழ்வார்.

குதிரை உள்ள லாயத்திற்கு அவருடைய அனுமதியின்றி யாரையும் நுழைய விடமாட்டார். தினசரி அதன் ஆகார வகைகளில் அல்வா,பால்கோவா, ஜாங்கிரி போன்ற இனிப்பு வகைகள் இடம் பெற்றிருக்கும். ஒரு குதிரை சாப்பிட மறுத்தால் அன்று ராஜாவும் பட்டினி கிடப்பார்.

அப்படிப் பேணிவளர்த்த குதிரைகளுள் ஒன்றிற்கு திடீரென நோய் கண்டது. உடனே நாட்டில் உள்ள வைத்தியர்களை எல்லாம் வரவழைத்து "என் குதிரையைக் காப்பாற்றுபவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் அளிக்கிறேன்", என்று அறிவித்திருந்தார்.

அதே சமயம் குதிரையின் வியாதியை குணப்படுத்த இயலாத வைத்தியருக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

சில வைத்தியர்கள்அரசரின் ஆணையை மீற முடியாமல் சிகிச்சை செய்ய வந்து சிறைத் தண்டனை அனுபவித்தார்கள்.

உள்நாட்டு வைத்தியர்களால் குதிரையின் வியாதியைக் குணப்படுத்த முடியாததால் தூதர்களை அனுப்பி வெளிநாட்டு வைத்தியர்களையும் வரவழைத்தார்.

ஒரே ஒரு வைத்தியர் அரசரிடம் தானாகவே வந்து "உங்கள் குதிரையை என்னிடம் ஒப்படையுங்கள்", என்றார்.

"ஒப்படைத்தால் குணப்படுத்தி விடுவாயா?" என்றார் ராஜா.

"கொடுத்துப் பாருங்கள்" என்றார் வைத்தியர்.

"குதிரை இறந்து விட்டது என்று வந்து சொன்னால் உன் தலையைக் கொய்து விடுவேன். தெரியுமா?" என்றார் ராஜா.

"நான் அப்படிச் சொல்லமாட்டேன் அரசே."

"அப்படியென்றால் குதிரையை அழைத்துப் போ. எத்தனை நாள் அவகாசம் வேண்டும் உனக்கு", கேட்டார் அரசர்.

"முப்பது நாட்கள் போதும் அரசே", என்றார் வைத்தியர்.

அரசர் குதிரையை அவரிடம் ஒப்படைத்து விட்டு "சரியாக முப்பத்தி ஒன்றாவது நாள் இங்கே குதிரையுடன் வா" என்று சொல்லி வைத்தியச் செலவிற்குப் பணமும் கொடுத்தனுப்பினார் அரசர்.

சரியாக முப்பத்தி ஒன்றாம் நாள் வைத்தியர் மட்டும் அரசனைப் பார்க்க வந்தார்.

"வைத்தியரே குதிரை எங்கே?"

"வெளியே இருக்கிறது அரசே."

"என்ன செய்கிறது?"

"புல் தின்னவில்லை அரசே."

"பரவாயில்லை சொல்."

"தண்ணீர் குடிக்க மறுக்கிறது அரசே"

"தாகம் எடுத்திருக்காது சொல்."

"கைகால்களை அசைக்க மறுக்கிறது" அரசே.

"அதை விடு..எப்படி இருக்கிறது, அதைச் சொல்"

"மூச்சுவிட மறுக்கிறது அரசே"

திடீரென அரசர் கேட்டார், "அப்படியானால் குதிரை இறந்து விட்டது என்றா சொல்கிறாய்?"

"அரசே நான் அப்படிச் சொல்லக்கூடாது. தங்கள் ஆணையை மீறுவேனா? நான் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் தான் சொன்னீர்கள். நீங்கள் சொன்னது தான் உண்மை."

சொல்லி விட்டு வெளியேறிய வைத்தியரை அரசரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சமார்த்தியமாகத் தன் உயிரை தக்க வைத்துக் கொண்ட வைத்தியரை அரசரால் பாராட்டாமல் இருக்கவும் முடியவில்லை.

## விடுகதைகளும் விடைகளும்

1. வீதிக்குத் துணைவருவான். வீட்டுக்குள் வரமாட்டான்.
2. தச்சன் செய்யாத பெட்டி, தானாகத் திறந்து மூடுது
3. ஆற்றுநடுவிலே ஒற்றைத் தடி. அதிலே காயுது, வெள்ளைத் துணி.
4. அடிக்காமல் அழவைப்பாள், அங்காடியில் அமர்ந்திருப்பாள்.
5. ஊசி மூக்கன் சந்தைக்குப் போவான்.
6. நின்றால் நீர்குடிக்கும், நடந்தால் புகைபிடிக்கும்.
7. கூனல் கிழவனுக்கு குதிக்கால் வரை பற்கள்.
8. நல்லவன் தொட்டால் கெட்டவன்.
9. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள்,பேத்தி மணப்பாள்.
10. சொல்லாமல் வரும், நில்லாமல் போகும்.

விடைகள்:

1. செருப்பு
2. கண
3. கொக்கு
4. வெங்காயம்
5. இறால்
6. ரயில் வண்டி
7. கருக்கரிவாள்
8. மின்சாரம்
9. பால்-தயிர்-நெய்
10. நூல்

சி. மேனகா
இல.7 மெயின் வீதி
கேகாலை.

## செய்து பாருங்கள்



இலைகளைக் கொண்டு அழகிய மீன் செய்யலாம். தடிப்பான தாளில் மீன் படம் ஒன்றை முதலில் வரையுங்கள். அதனை வெட்டி அதன் மீது சிறுசிறு இலைகளை ஒட்டுங்கள். இலைகள் ஒன்றன்மீது ஒன்றாக இருக்கும்படி அமைத்தால் அவை மீன் செதில்கள் போன்ற தோற்றம் தரும். மீன் உருவம் முழுவதையும் அவ்வாறு இலைகளால் ஒட்டுங்கள். சிவப்பு தாளை வட்டமாக வெட்டி கண்போல வரைந்து இலைமீது ஒட்டிவிடுங்கள். இப்போது அழகான மீன் தயார்

## முயல் பறந்தால்

எதிரி விலங்கை நேருக்கு நேர் சிறு முயல் சந்தித்தால் திரு-திருவென்று முழிக்கும். செய்வதறியாது நடுங்கியபடி நின்று அழுவது போல குரல் கொடுக்கும். இதனால் பல சிறு முயல்கள் எதிரிகளிடமிருந்து தப்புவதே இல்லை. ஆனால் பெரிய முயல்கள் அப்படி இருக்காது. தனது பெரிய பின்னங்கால்களை உதைத்து வேகமாக ஓட ஆரம்பிக்கும். எதிரி நெருங்கிவிட்டால் பின்னங்கால்களை வைத்து எதிரியை உதைத்து விட்டு தப்பிவிடும்.

எஸ்.அனுஜா
சிலாபம்.

# சாதிகள் வேறில்லை

-மட்டுநகர் விஜி-

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் விடுமுறையின் முத்திரையாக வீதியெங்கும் சிறுவர்கள் சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து தம்மை ஒவ்வொரு விளையாட்டுக்களுள் புகுத்தி, தம்மை மறந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறான ஒரு சிறு கூட்டம் பாலாவின் வீட்டு முன்றலில் வீதியோரமாக "கிளித்தட்டு" விளையாடிக் கொண்டு நின்றார்கள். ஆனால் பாலனோ அவனது வீட்டுத் திண்ணையிலே அமர்ந்திருந்து தனது தந்தை சலவைக்கென வைத்திருந்த உடுப்பு மூட்டையில் சாய்ந்தபடி தம்மை மறந்து விளையாடும் சிறுவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பாலனுக்கும் அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆசைதான். ஆனால் அத்தனை சிறுவர்களுள் ஒருவனாவது அவனுடன் விளையாட வருவதில்லை. மாறாக அவர்கள் அனைவரும், அவனை "தாழ்ந்தசாதி" "வண்ணார்சாதி" என்றும் பல்வேறு கோணங்களில் தம்மை உயர்ந்த சாதி என்றும் கூறிக் கொண்டு, அவனைச் சித்திரவதை செய்தார்கள். அவ்வேளையில் பாலன் தன்விதியை நொந்து அழுதாலும், கடவுளே இச்சிறுவர்கள் நல்லபடியாகத் திருந்த நீதானப்பா அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்திப்பான்.

அன்றும் அவ்வாறே அச்சிறுவர்களுடன் விளையாட பாலனுக்கு ஆவல் பிறந்தது. அதனை நடைமுறைப்படுத்தவென அச்சிறுவர் கூட்டத்தை நெருங்கி, "டேய் ரமேஸ் எனக்கும் நன்றாக கிளித்தட்டு விளையாடத் தெரியும். என்னையும் சேருங்களேன் என்றான். ஆனால் ரமேஸ் அவனை நெருங்கி, "பாலன் நீ உடுப்பு துவைக்கிறசாதி. எங்களோட சேர்ந்துவிளையாட கூடாது. போய் உங்கப்பாவுக்கு உடுப்புத்துவைக்க உதவி பண்ணு" என்று அவனது ஆசைகளை நிராசைகளாக்கி கேலிபண்ணினர்.

"டேய் ரமேஸ் உன் உடம்பில ஓடுற இரத்தமும், என் உடம்பில ஓடுற இரத்தமும் சிவப்பாதான் இருக்குது. அப்படி இருக்கும் போது நீ மட்டும் என்ன வேறு சாதி. நாங்கள் அனைவரும் மனிதசாதி தானே" என்றான் பாலன். பாலனின் பேச்சைக் கேட்டு அச்சிறுவர்கள் பலமாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள். பின்பு அருகிலுள்ள ராஜாவை ரமேஸ் அழைத்து, "டேய் ராஜா பாலன்ட கதையைக் கேட்டாயா? இவனுடைய கதைப்படி மிருகங்களிட உடம்புகளிலும் சிவப்பு இரத்தம் தானே ஓடுது. அதுக்காக அதுகளையும் மனிதன் என்றா அழைக்கிறோம். உன் முறைபடி அதுவும் மனித இனமென்றா உன் அப்பாட உடுப்பு மூட்டை சுமக்கும் கழுதையுடன் விளையாடு" என்று ரமேஸ் பாலனை கேலிசெய்ய மற்றைய சிறுவர்களும் அதனை ஆமோதிப்பது போல் சிரித்தார்கள். பாலன் தனது கண்களில் வரும் கண்ணீரை முந்திக்கொண்டு அவமானத்துடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

பாலனுக்கு நேராகவீடு செல்ல மனம் விரும்பவில்லை. ஆதலால் நேராக ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். பாலனின் ஊர்மக்கள் தமது பெரும்பாலான தேவைகளுக்காக அவ்வாற்றைப் பயன்படுத்தினார்கள். சிறிது நேரத்தின் பின்பு ரமேஸ், ராஜா, கிருபா, மதன் ஆகியோர் அவ்வாற்றை வந்து அடைந்தார்கள் . தமது விளையாட்டுக் களைப்பை மாற்ற ஆற்றில் குளிக்க வேண்டுமென தீர்மானித்தார்கள். நால்வரும் ஆற்றில் இறங்கி நீச்சல் அடித்து விளையாடிக் கொண்டிருக்கும் போது தான் ஒரு பயங்கர விபத்து நடந்தது.

"ரமேஸ் தவறுதலாக ஒரு கல்லின் மேல் கால்வைக்க, அவன் கால்கள் வழுக்கி, எதிர்பாராத விதமாய் ஆற்றில் விழுந்து விட்டான். ஆற்றின் நீரோட்டத்துடன் அடித்துச் செல்லப் பட்டுக் கொண்டிருக்கும் போது, அவனது நண்பர்கள் போட்ட கூச்சலுக்கு பாலன் அவ்விடத்தை விரைந்தான். நிலமை அறிந்து, ஆற்றில் பாய்ந்து தனது நீச்சல் திறமையால், ரமேஸைக் கரைமீட்டான். அவனது முதுகினை அமர்த்தி உட் சென்ற நீரினை வெளியேற்றினான். சிறிது நேரம் சென்றதும், அவன் சுயநினைவு பெற்றான்.

ரமேசுக்கும் அவனது நண்பர்களுக்கும் பாலனின் முகத்தைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. ஆனால் ரமேஸ் தனது வெட்கத்தை மறந்து பாலனை நெருங்கி, "பாலன் என்னை' மன்னித்து விடு. நாங்கள் அனைவரும் உன்னை கீழ்சாதி என்று அவமானப்படுத்தி உன் மனதைப் புண்படுத்தி விட்டதற்கு கடவுள் தந்த தண்டனை தான் எனக்கு இன்று வந்த ஆபத்து. எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தும் ஒருவனாவது என்னை காப்பாற்ற முன்வரவில்லை. ஆனால் நீதான் என்னை உன் உயிரை அடகு வைத்து காப்பாற்றி விட்டாய். அதோட எனக்கு இப்போது தான் ஆபத்தில் உதவுபவன் தான் உண்மை நண்பன் என்ற பழமொழியும் விளங்குகிறது. இனி நீதான் என்னுடைய உயிர் நண்பன்." என்று கட்டித் தழுவினான் ரமேஸ்.

இருவரது கண்களிலும் கண்ணீர்வடிந்தது. கண்ணீர் இதுவரை அவர்களை தடுத்து வைத்திருந்த சாதி என்னும் வேறுபாட்டை அடித்துச் சென்றதுடன், இரு நண்பர்களின் நட்புக்காய், இரு சாதிகளின் சங்கமத்துக்காய், ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## புதிய தொடர்

# கண்ணே மதுமிதா

### -ரசிகன் எழுதுவது-

கொழும்பு- இரவு மணி 12.45.

நல்ல தூக்கத்தில் இருக்க, மதுமிதா மட்டும் விழித்துக் கொண்டிருந்தாள். நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள். மதுமிதா நைற்றியில் இருந்தாள். எதிரே எவராவது இருந்திருந்தால் அவர்கள் மயக்கத்தில் வீழ்ந்திருப்பார்கள். இந்த இடத்தில் மதுமிதாவின் அழகு எப்படியிருந்திருக்கும் என்று உங்கள் ஊகத்திற்கு தந்துவிட்டு அடுத்த பந்திக்கு செல்லலாம்.

மௌன விரதம் கலைந்து தொலைபேசி அழைத்தது.

அந்த அழைப்புக்காகத்தான் மதுமிதா தூக்கத்தை தொலைத்துவிட்டு நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

பட்டுக்கரத்தால் ஒலிவாங்கியை எடுத்து காதுக்குக் கொடுத்தாள். விரல்களுக்கு நகப் பொலிஸ் போட்டிருந்தாள்.

"ஹலோ டியர் தூங்கியிருக்க மாட்டியே கண்ணு. மன்னித்துக் கொள் மது"

மறுமுனை கிண்டல் கலந்து பேச-மதுமிதா கோபமானாள்.

"எதுக்கு மன்னிப்பு"

"உன் சுடர் விழிகளை தூங்காமல் இருக்க வைத்ததற்கு"

மறுபடியும் கிண்டல்.

"முட்டாள்-எங்கே அந்த போட்டோக்கள்"

"ஆ..மரியாதை ஃபிளீஸ் மரியாதை. ஒரு முட்டாளுக்காகவா நீ இவ்வளவு நேரமாய் விழித்திருக்கிறாய்"

இவனோடு முரண்டு பிடித்தால் பயன் இல்லை. காரியம் ஆகும் வரை கடுமை கூடாது.

"ஓகே. அந்தப் போட்டோக்கள் எங்கே..நீ..சொறி நீங்கள் என்ன.. என்ன வேண்டும் உன..........உங்களுக்கு"

"நீ......யெஸ் அழகான, அளவுகள் சரியாகவுள்ள நீ வேண்டும் என்று கேட்டால் தருவாயா? வருவாயா?"

சொல்லிவிட்டுச் சிரித்தது மறுமுனை.

மதுமிதாவுக்கு உள்ளே எரிந்தது.

"மிஸ்டர் விளையாடுகிறா..றீர்களா?"

"போனிலா. நோ.நோ நோ"

இப்போது மேலும் உரத்துச் சிரித்தது.......... சிரித்தான்.

"டியர் கோபிக்காதே.

எனக்குத் தேவையானது ஒரு சிறு தொகை. உன்னால் முடியும். உன்னிடம் இருக்கிறது."

"எவ்வளவு"

"சொன்னால் ஆச்சரியப்படமாட்டாய். உன் ஒருநாள் அலங்காரத்திற்கு ஆகும் செலவு கூட வராது மது"

"சுற்றி வளைக்க வேண்டாம் எவளவு"

"ஆகக் குறைந்த தொகையான 50 இலட்சம் ஒன்லி ஃபிப்ரிலாக்ஸ்"

மதுமிதாவுக்கு மூச்சு நின்றுவிடும் போல் இருந்தது.

"என்னடா இவளவு குறைவாகக் கேட்கிறானே என்று திகைத்துப் போனாயா மது."

"என்னோடு நீ விளையாட நினைக்கிறாய்"

"ஆசைதான். இப்போது வேண்டாம்"

சிரித்தான்.

மதுமிதாவின் மூளைக்குள் அந்தச் சிரிப்பில் இருந்த பலவீனம் பதிவு செய்யப்பட, மின்னலாய் அந்த யோசனை பிறந்தது.

"உன்னை நேரில் சந்திக்க
விரும்புகிறேன். நேரில் என்றால்
விரிவாய் பேசலாமே"

"மீண்டும் ஒருமையில் அழைக்கிறாய். ஓ.கே நெருக்கமாய் வருகிறாய். அப்படி அழைப்பதிலும் ஒரு கிறக்கம் இருக்கத்தான் செய்கிறது."

இவன் பலவீனம் பெண். மதுமிதா உறுதி செய்து கொண்டாள்.

"நாம் எங்கே சந்திக்கலாம்"

"அங்கேயே...உன் தனி அறையில்"

"வேண்டாம் ..இங்கே வேண்டாம். நீ எங்கே தங்கியிருக்கிறாயோ அங்கே"

"மது ஒன்றை மறந்துவிடாதே ஆசை காட்டி உன் அழகுகளைக் காட்டி கரண்சிகளை தராமல் விடலாம் என்று மட்டும் நினைத்து விடாதே"

"50 அதிகம்தான். ஆனாலும் நாம் நேரில் பேசுவோம். உன்னை என்ன பெயர் சொல்லி அழைப்பது"

"திவாகர். ஜே.வி. திவாகர்"

குரலில் ஒரு கிறக்கத்தை தடவி..

"ஓகே. திவா எங்கே எப்போது..எபபடி...திவா என்ற கம்பீர ஆண்மகனைச் சந்திப்பது"

"என்ன சொன்னாய்"

"கம்பீர ஆண்மகனை..ஏன் உன்னிடம் கம்பீரம் இல்லையா திவா"

"இருக்கிறது. நிறைய இருக்கிறது.

நேரில் பார்க்கத்தானே போகிறாய். நேரில் பார்க்காமல் எப்படிச் சொல்கிறாய் ஐஸ் வைக்கிறாயா?"

"நோ.. உன் குரலில் உன் கம்பீரம் வழிகிறது.. என்ன பெயர் சொன்னாய்.. ஆ..திவா"

மறுமுனையில் சிறு மௌனம்.

"ரைட் மது, நாளை காலை மணி பத்து. ஹோட்டல் ராக்கியில் ரூம் நம்பர் பை திறீ செவன் குளிர் அறையில் நாம் சந்திக்கலாம். முடிந்தால் ...உன்னை.."

சொல்லிவிட்டு சிரித்தான்.

"குட்நைட்" என்று சொல்லி போனை வைத்தான். ■

ஹோட்டல் ராக்கி நகரில் சிகரெட் பெட்டிமாதிரியான தோற்றத்தில் இருந்தது. பணக்காரர்கள் மட்டுமே வரலாம் என்று நெற்றியில் எழுதாத குறையாக பிரமாண்டம் காட்டியது.

மதுமிதா தானே கார் ஓட்டி வந்தாள்.



வெள்ளை பியட்.

இது மதுமிதாவுக்காக அவள் தந்தை கோடீஸ்வரர் வைத்திலிங்கம் அவளது 19வது பிறந்த நாளுக்கு சென்ற மாதம் அன்பளிப்பு செய்தது.

கார்க் கதவு திறந்துவிட வந்த பார்க்கிங் வாட்ச்மேன், மதுமிதாவின் அழகில் ஒரு நொடி அதிர்ந்து, பின் சுதாகரித்து பணிவுகலந்து புன்னகைத்தான்.

"குட் மோனிங் மேடம்"

ராக்கியின் பள பள மொழு மொழு தரையில் நளினமாய் நடந்து, லிப்டில் உயர்ந்து, பை திறீ செவன் முன் நின்று கதவை மெல்ல தட்ட.......

உள்ளே மௌனம்.

மறுமுறையும் தட்ட

மீண்டும் மௌனம்.

என்ன செய்கிறான். இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறானோ என்று மதுமிதா நினைத்துக் கொண்டிருக்கும் போதே ..

திடீரென்று கதவு திறக்க, ஒரு கரம் நீண்டு மதுமிதாவை உள்ளே இழுத்தது.

நிலைகுலைந்த மதுமிதா சுதாகரிக்க முன்னரே கதவு சாத்தப்பட்டது.

மதுமிதா கத்த முடியாமல் அவள் உதட்டை இரும்புக்கரம் இறுகப் பொத்தியது.

விபரீதம் உணர்ந்து மதுமிதா திணறினாள். விழிகளை சுழலவிட்டபோது அங்கே கண்ட காட்சியால் மயங்கிச் சரிந்தாள்.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி .இல-05

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | |
| | 4 | | 5 | | ■ | |
| | 6 | | | | | 7 |
| | | | ■ | 8 | ■ | ■ |
| ■ | 9 | | | | ■ | 10 |
| | ■ | ■ | 11 | | | |
| 12 | | | | | ■ | |

### இடமிருந்து வலம்

1. "அழைத்து வரவில்லை தந்தையே இழுத்து வந்திருக்கிறார்கள்" என்கின்ற பிரபல வசனம் இதிலே தான் இடம் பெற்றது.
3. இராமன் வளைத்தது.
4. பக்கத்து நாட்டில் பட்டாசுத் தொழிலில் பிரபலமான இடம்
6. சில பொருட்களுக்கு இது இருக்கிறது.
9. சந்தோசத்தின் அடையாளங்களில் ஒன்று.
11. உழவுத் தொழிலுக்கு இதுவும் ஒரு துணை. (கடைசி எழுத்திலிருந்து தொடங்குகிறது)
12 விசேச பண்டிகைகளின் போது குற்றவாளிகளுக்கும் இது கிடைப்ப துண்டு.

### மேலிருந்து கீழ்

1. அரசாங்கத்தில் இவரும் ஒரு அங்கம்.
2. தன்மானமுள்ள விலங்கு.
4. நிறங்களில் ஒன்று.
5. நோயைப் பரப்புபவர்களை இப்படியும் சொல்லலாம்.
7. சோலைகளில் வாழும் பறவை. (கீழிலிருந்து மேல் நோக்கி)
8. அதிர்ச்சி ஏற்படும் போது வருவது
10. அகத்தின் அழகைக் காட்டும்.
12. மலையின் எதிர்மறை. (கீழிருந்து மேல் நோக்கி)

இதற்கான சரியான விடையை கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 10.07.93 ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

சரியான விடையை எழுதி அனுப்பும் 10 அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 03ற்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வி | ள | ம் | 2 ப | ர | ம் | ■ |
| டு | ■ | 3 ப | ல | கா | ர | 4 ம் |
| 5 க | ண் | டி | ப் | பு | ■ | ர |
| தை | ■ | ■ | 6 ப | ல் | சு | வை |
| ■ | 7 நா | 8 க | ரீ | க | ம் | ■ |
| 9 வி | ன் | னி | ட் | ■ | ■ | 10 மு |
| டை | 11 கு | ■ | 12 சை | க் | கி | ள் |

## குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 03ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

1. ஆர். பாலகிருஷ்ணன் மாத்தளை.
2. எம்.ஐ. பர்ஹான் சீகிரியா.
3. எச்.எம்.பைரூஸ் நுரைச்சோலை
4. திருமதி.செ.சிவச்செல்வி சிலாபம்.
5. கே.தர்மராஜ் கொழும்பு-13.
6. செல்வி.எஸ்.பரமேஸ்வரி ஹப்புத்தளை.
7. எஸ்.தர்மலிங்கம் இரத்தமலானை.
8. எச்.எம்.சுகைப் புத்தளம்.
9. திருமதி.சாந்தி ரஞ்சன் கொழும்பு-4.
10. என்.வை.சந்துரு மொறட்டுவை.
11. எம்.சலீம் மக்கோனா.
12. ஏ.பி.சதாசிவம் கொழும்பு-2.
13. யு.எல்.எம்.நஸீர் ராஜகிரிய.
14. எஸ்.ஹனூன் கொழும்பு-10.
15. திருமதி.ஸாகிரா அரூஸ் திஹாரிய.
16. திருமதி.மணிமேகலை வரதராஜன் கல்குடா.
17. அ.சேரன் தெஹிவளை.
18. எம்.எவ்.எம்.வஸீன் திருமலை.
19. செ.செந்தமிழ்ச் செல்வன் சிலாபம்.
20. செல்வன்.ப.ஜனார்த்தனன் கொழும்பு-13.
21. கே.பத்மநாதன் கந்தேகெதற.
22. செல்வி.ஏ.எஸ்.ஸீனத்தில் முனவ்வரா பேருவளை.
23. கே.ராமகிருஷ்ணன் நீர்கொழும்பு.
24. ஷஹிர்ஷா தாஸிம் தர்கா நகர்.
25. கு.திவாகரன் கொழும்பு-13.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப் பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

சிந்தியா, உங்களிடம் கேட்கக்கூடிய கேள்வி எது? கேட்கக் கூடாத கேள்வி எது?

செல்வன் சுப்பையா அந்தனி
பூண்டுலோயா.

கேட்கக் கூடிய கேள்விகள். கேட்கக் கூடாத கேள்விகள். ■

கடிதம் எழுதுவதென்றால் சோம்பலா யிருக்கிறது. இதை நீக்க என்ன செய்யலாம்?

ஷர்மிளா இஸ்மாயில்,
கண்டி.

கடிதம் எழுதாமல் இருக்கலாம். ஹி.ஹி.. ஹி.. ■

அன்றைய காலத்து நடிகைகள் நடித்த நடிப்பை போன்று இன்றைய காலத்து நடிகைகள் நடிப்பதில்லையே?

பரீனா, பஸ்லியா, பசானா,ரிசானா,அஸ்மியா
புத்தளம்.

அந்தக் காலத்தில் நடிப்பை குளோசப்பில் காட்டினார்கள். இந்தக் காலத்தில் மடிப்பை யல்லவா குளோசப்பில் காட்டுகிறார்கள். மடிப்பு அம்சாவுக்கு என்ன மரியாதை தெரியுமா? ■

டியர் சிந்தியா, மலேசியா வாசுதேவனின் புதிய பாடல்கள் வானொலியில் ஒலிப் பதில்லையே! காரணம் என்ன?

எம். ராமகிருஷ்ணன்
பண்டாரவளை.

அவரும் இப்போது அதிகம் பாடுவதில்லை. எஸ்.பிக்கு அடுத்தது இன்று மனோதான். என்றாலும் ராமகிருஷ்ணன். இது வேறு முகவரிக்குரிய கேள்வி. ■

ஜாக்கி சானின் சீடர்பில்லி வொங்குடன்
இலங்கையின் [illegible] சை மது நாம்லி.
படம் [illegible] ஃபுறொம பேங்கொக்



வெற்றியின் விலை என்ன?

சர்ஜியா பானு
ஏத்தாளை.

உண்மை, உழைப்பு, உற்சாகம். ■

மரணம் உறுதியாக இருக்கையில் மனிதன் உறுமுவதேன்?

வே.ராஜன்
கலஹா.

மரணத்தைக் கண்டு அஞ்சும் மனிதன் அந்த மரணமும் தன்னைக் கண்டு அஞ்சட்டும் என்று நினைக்கிறானோ! ■

அரசியல்வாதிகளுக்கு விரோதிகள் அதிகமா? நண்பர்கள் அதிகமா?

ஏ.எஸ்.எம்.ரிஸ்வி
மதவாச்சி.

இன்றைய உலகில் நல்லவர்களுக்குதான் விரோதிகள் அதிகம். அரசியல்வதிகள் எல்லோரும் நல்லவர்களுமல்ல. எல்லோரும் கெட்டவர்களுமல்ல. ■

நடிகர் ரஜனிகாந்த் தனது சொந்தக் குரலிலா பேசுகிறார்?

ப×புவனேஸ்வரன்
தலவாக்கொல.

அதில் என்ன சந்தேகம். ஆனால் அவர் பிறமொழிகளில் நடித்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்படும் படங்களில். அவர் குரல் கொடுப்பதில்லை. ■

ஒரு பெண்ணை காதலித்துக் கொண்டே மற்றொரு பெண்ணையும் காதலிக்கும் ஆண்களைப் பற்றி?

எஸ். செல்வராணி
வரக்காப்பொலை.

மலருக்கு மலர்தாவும் வண்டு மனம் கொண்டவர்கள். ■

ஹலோ சிந்தியா! காதலை காசால் வாங்க முடியுமா?

ஏ.எம். இப்திகார்
புத்தளம்.

காதல் என்ன கத்தரிக்காயா இப்திகார்? ■

என் காதலி விபரம் தெரியாதவளாக இருக்கிறாள்?

ப. கவியுவன்
கொழும்பு-13.

உமக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும். ■

பெண்ணைக் கவர என்ன செய்ய வேண்டும்?

வீ.வாசீகன்
நுவரெலியா.

பொன்னான அவள் மனதைக் கவர வேண்டும்.

சுத்த விவரம் கெட்ட ஆணய்யா நீர். ■

முத்தமிட ஆசை பலிக்குமா?

எம். துஷ்யந்தன்
நீர்கொழும்பு.

வலிக்கும். ■

அன்பான மனைவி என்பவள் எப்படி இருக்க வேண்டும்?

ச.ராமஜெயம்
எட்டியாந்தோட்டை.

மந்திரியாக, மாணவியாக, ஆசிரியையாக, எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வதில் சரிபாதியானவளாக. ■



ஒரு தாய் காட்டும் அன்பு. ஒரு காதலி காட்டும் அன்பு இரண்டிலும் எது சிறந்தது?

எஸ். சதீஸ்குமார்
மட்டக்களப்பு.

இரண்டுமே சிறந்தது. செலுத்தப்படும் முறை மட்டுமே மாறுபடும். ■

பெண்ணுக்கு எது அழகு?

ஆர். மயூரன்
வவுனியா.

எதுவெல்லாம் அழகாக இருக்க வேண்டுமோ, அதுவெல்லாம். ■

டியர் சிந்தயா, என் அபிமான நடிகர் பிரசாந் நடித்து வெளியான முதல் திரைப்படம் எது?

எஸ்.பி. சந்திரகுமார்
அம்பலாங்கொட.

வைகாசி பிறந்தாச்சு.

இனக்கலவரங்கள்! ஒழிக்க என்ன செய்ய வேண்டும்?

ம. நிசாந்தன்
இங்கிரிய.

இனவாதத்தை ஒழிக்க வேண்டும். ■

டியர் சிந்தியா! ஒருவரை அவருக்கு முன்னால் புகழும் நபரை நம்பலாமா?

ஜீ.மோகன்
கொழும்பு-11.

புகழப்படவேண்டி இருக்கும் போது புகழ்வதில் தப்பில்லை மோகன். ஆனால் முகஸ்துதி செய்வதை மட்டுமே தொழிலாகக் கொண்டவர்களை நம்புவது வம்பு. ■

சட்டங்களும்-சம்பிரதாயங்களும் ஆணினத்திற்கு சார்பாகவே இயற்றப்பட்டவை என்ற



பெண்ணினத்தின் கூற்றுப்பற்றி?

ஏ.பி.எம். ஜிப்ரி
பேருவளை.

உண்மை இல்லாமல் இல்லை. ■

அண்மையில் தற்கொலை செய்து கொண்ட நடிகை திவ்யபாரதியின் மரணம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அரூஸியா
பாணந்துறை.

நானும் அது ஒரு தற்கொலை என்றுதான் நினைக்கிறேன். உமக்கென்ன டவுட்டோ? ■

குடும்பப் பொறுப்பு கணவரிடம் இருப்பது நல்லதா? மனைவியிடம் இருப்பது நல்லதா?

ரம்லா
கொபம்பு-5.

தனி ஆதிக்கம் இல்லாமல் சரிபாதியாக இருப்பது நல்லது. ■

என்னைப் போல் ஆண் துணையின்றி குடும்பப் பாரத்தை ஓட்டிச் செல்லும் பெண்களுக்கு நீங்கள் கூறுவது என்ன?

எஸ். மெஹர்பான் ஹசன்
புத்தளம்.

பெண்கள் நினைத்தால் மண்ணில் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. நம்புங்கள். அது வெறும் புகழ்ச்சியில்லை. ■

மனிதனின் ஆயுள் ஆயிரம் வருடங்கள் என்று ஆண்டவன் மாற்றியமைத்தால்?

ஏ.எல்.கரீபா
நவகம்புர.

தாங்காது கரீபா பூமி. ■

இலங்கைக்கு கடன் உதவி 84 கோடி கிடைத்துள்ளதே?

எஸ்.என்.சாகீம்
நீர்கொழும்பு.

கடன் வாங்குவதில் களிப்படைய முடியுமா? ■

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்புத்தான் தீர்வா?

பி. கணேந்திரன்
சிலாபம்.

வாக்கெடுப்பைவிட, தீர்வுக்கு தடையாக உள்ளனவற்றை களையெடுப்பதே முக்கியம். அதனால்தான் ஏற்படும் ஐக்கியம். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## நிமிடக் கதை

# நெருக்கடி நிலை



-இராஜ குமாரன்

இந்தக் காலத்தில் வயோதிபர்கள்மீது வாலிபர்களோ (வாலிபிகளோ) மதிப்பு மரியாதை வைப்பதில்லை என்றுதான் நான் எண்ணியிருந்தேன். சும்மா சொல்லப்படாது. அத்தி பூத்தாற் போல் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அதனால் தான் கொழும்பில் நல்ல மழை பெய்திருக்குமோ!

இந்தச் சிந்தனைதான் நேற்று அந்த பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த எனக்கு ஏற்பட்டது. நுகேகொடையில் மகள் வீட்டில் நடந்த பேத்தியின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு கொட்டாஞ்சேனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த எனக்கு ஏற்பட்டது. நான் பஸ் தரிப்பு நிலையம் செல்வதற்கு முன்னரே வண்டி நிரம்பி வழிந்தது. அடுத்த வண்டியில் ஏறி இடம்பிடித்து ஒரு ஆசனத்தில் இருந்து ஆறுதலாகப் போகலாம் என்றால் என்னை வழியனுப்ப வந்த எனது மகளின் மூத்த மகனுக்கு- என் பேரனுக்கு- பொறுமையில்லை. "அது புறப்பட இன்னும் அரைமணி நேரமாகும் தாத்தா- பொழுது பட்டுப் போகுது- அங்க பாட்டியும் மாமாவும் உங்கள இன்னும் காணலியே என்று தவிப்பார்கள்" என்று சொல்லி கூட்டத்தோடு கூட்டமாக என்னை பஸ்ஸுள் திணித்து விட்டு நடையைக் கட்டினான். தங்கச்சியின் பிறந்த நாள் விழாவுக்கு ஓடி ஆடிக் களைத்துப் போன அவனுக்கு இன்று தியேட்டரில் படம் பார்க்க அனுமதி - அதுதான் அவனுடைய அவசரம்! தட்டுத் தடுமாறி உள்ளே புகுந்து மேலே உள்ள பாரந்தாங்கிக் கம்பியை எட்டிப் பிடித்தபடி 'கத்திப் பாட்'டில் நின்றேன். "அத்துளட யண்ட" என்று அதட்டும் குரலுக் குப் பயந்து பின்வாங்கி யோருடன் சேர்ந்து நானும் பின் வாங்கினேன்.

'என்னுடைய பரிதாபத்தைப் பார்த்த எவராவது எனக்கு உட்கார ஓரிடம் தரமாட் டார்களா' என்று ஏங்கியது தான் தாமதம்- ஒரு பரோபகாரி எழுந்து தனது இருக்கயை எனக்குத் தந்தார். முப்பத்தி ரண்டு பல்லையும் காட்டி நன்றி சொல்ல முடியவில்லை. ஆறு பல் எண்ணிக்கையில் குறைந்து விட்டது. இடம் தந்தவர் ஒரு வாலிபன். (எமது கணக்குப்படி ஒரு பெடியன்!). இவருக் காகத்தான் இடி மின்னலுடன் தொடர்ந்து மழை!

குலுக்காத குலுக்கம் குலுக்கி பேருந்து பறந்தது. இருக்கையில் இருக்கும் போதே இத்தனை ஆட்டமென்றால் நானும் நின்று பயணம் செய்தால் எவ்வாறு இருந்திருக்கும்! வாழ்க அந்த வாலிபன்!

இறங்குவோரும் ஏறுவோரும் மாறி மாறி ஏறி இறங்கினர். இறுதியில் நகரமண்டபம் நிறுத்தத்தில் பெரும்பாலான கூட்டம் கலைந்து காற்று உட்புகக் கூடிய அளவு இடைவெளியுடன் வண்டி கிளம்பியது. கொம்பனித் தெருவை அண்மிக்கொண்டிருந்தது. 'பளார்' என்றொரு சப்தம்-பேருந்தில் குபீர்ச்சிரிப்பு அலை. கனவு கலைந்து நிமிர்ந்து பார்த்தேன். நவநாகரீக நாரிமணி ஒருவரின் கையில் ஒரு செருப்பு. நிலமை நொடியில் புரிந்து விட்டது. எனது வாழ்த்துக்கு உரித்தாக இருந்த அந்த வாலிபனின் ஒரு கன்னம் பழைய செருப்பின் கருணையினால் கொஞ்சம் பளபளத்தது.

பயணிகள் பலரும் பலவித அபிப்பிராயங்களை உகுத்தனர். கூட்டிக்கழித்துப் பார்த்ததில் அந்தப் பரோபகாரி எனது முதுமைக்கு உதவுவதற்காக அவருடைய இருக்கையை எனக்குத் தியாகம் செய்யவில்லை. அந்தப் பேருந்துக்குள் நிலவிய நெருக்கடி நிலமையை நங்கையருடன் பகிர்ந்து கொள்ளுவதற்காகவே இருக்கையை விட்டெழுந்து நெருக்கடியில் இணைந் தார் என்ற உண்மையை உணர நேரம் அதிகம் தேவைப்படவில்லை.

(கற்பனை அல்ல)

## விவாத மேடை

## மாணவர்களுக்கு அரசியல் தேவையா?

மாணவ சமுதாயம் என்பது ஓர் நாட்டின் இன்றியமையாத செல்வமாகும். இவர்களால் ஒரு நாட்டை சீரமைக்கவும் முடியும், சின்னாபின்னமாக்கி சீரழிக்கவும் முடியும். ஒரு நாட்டினது அரசியலமைப்பிலும், சமூக நலன்களிலும் செல்வாக்கு மிக்கவர்கள், சக்தி பெற்றவர்கள் இந்த மாணவ சமுதாயம் என்றால் அதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. இத்தகைய மாணவ சக்தியை கொண்டு எத்தகைய வல்லமை படைத்த சர்வதிகாரியையும் ஆட்டிப்படைக்கவும் முடியும், அழித்தொழிக்கவும் முடியும் என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

ஆக இத்தகைய தீட்சண்ய மிக்கவர்களுக்கு அரசியல் தேவையா? என "ஏககாலமாக" கேட்ட காலம் கடந்து விட்டது. ஆம்! அவர்களுக்கும் அரசியல் தேவை. அதிலும் அராஜகம் தலை விரித்தாடும் இன்றைய காலகட்டத்தில் (சில நாடுகளில்) பசுமையான புரட்சிகள் மூலம் மாணவ சமுதாயம் சிறந்த பங்களிப்புகளை செய்து வருவதை காணக்கூடியதாக இருப்பது நல்லதோர் உதாரணமாகும்.

என்றாலும் மாணவ சமுதாயம் அதன் கட்டுக்கோப்பை விட்டு விலகி அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்வதை எவரும் வரவேற்பதில்லை என்பது உண்மை தான். எனினும்சில சமயங்களில் அதிரடி நடவடிக்கை மூலம் அதிர்ச்சி வைத்தியம் செய்யலாம். கடிவாள மற்ற குதிரை போல் ஆட்சி நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில் அதற்கு "மூக்கணாங்கயிறு" இட்டு அடக்கிவைக்க முற்பட்டால் அது ஜனநாயக அத்துமீறல் அல்லவே. எனவே மாணவர்கள் அரசியலைப் பற்றி அதன் நெளிவு சுழிவுகளைப்பற்றி அறிந்து கொள்ளுதல், வாதப்பிரதிவாதங்கள் மூலம் அதன் தாக்கங்கள், எதிர்விளைவுகள் போன்றவற்றை அலசி ஆராய்ந்து தெளிவான நுணுக்கங்களை அறிந்து கொள்வதன் மூலமும் அவர்கள் ஓர் ஆரோக்கியமான நிலைக்கு உயர்ந்து விடுவர் என்பதும் உறுதி!

மேலும் இந்த 20ம் நூற்றாண்டின் சிறந்த மாற்றங்களுக்கு மாணவ சமுதாயத்தின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்து வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. எனவே மாணவர்களுக்கு எதுவும் விதிவிலக்கல்ல. அவர்கள் எதையும் கையாளும் திறன் படைத்தவர்கள். தமக்குள், கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்திக்கொள்ளாதவிடத்தில் மாணவ சமுதாயம் என்றும் மகத்தான சமுதாயமே! எதிர்காலத்தில் நாட்டை ஆழக்கூடிய இன்றைய கல்வியறிவுமிக்க மாணவர்களுக்கு அரசியல் தேவையில்லையென்றால் இதனை யார்தான் ஏற்பார்கள்? இது ஜனநாயக மரபாகுமா? அரசியலுக்குஅறிவோ அன்றி மதிநுட்பமோ தேவையில்லை என்ற தான்தோன்றித்தனத்தில் அதனை ஓர் சாக்கடையாக மாற்றிவரும் இன்றைய காலகட்டத்தில் கல்வியறிவு கொண்ட எம்மாணவ சமுதாயத்திற்கு மட்டும் அரசியல் தேவையா? என கேட்பது என்ன மடத்தனமான கேள்வி?

ஆக்கம்:
ஏ.பீ.எம்.ஜிப்ரி
இல-100, பழையவீதி
பேருவளை.

## லவ் லெட்டர்



### என்னில் இருக்கிற உனக்கு......

படுக்கை சுடுகிறது.
விழிகள் உறங்க அடம்பிடிக்கின்றன
நினைவுகள் 'அப்பி'க் கொள்கின்றன
கழட்ட முடியாதபடி ராணி நீ
பல வடிவம் காட்டுகிறாய்.
உன்னை உன்னிடம் சொல்லாமல்
நேசித்து நினைக்கத் தொடங்கி
நான்கு வருடங்களாகிவிட்டன.
இடையில் மறந்ததாய் எந்த ஞாபகமும் இல்லை.
இனியும் மறப்பதாயும் இல்லை.
மறப்பதாய் இருந்தால்
கனவுகள், நினைவுகள் கற்பனைகள் வராத
ஓர் உறக்கத்தில் நான் இருக்க வேண்டும்.

நீயும் கூட சொல்லிக்கொள்ளாமல்
அல்லது சொல்ல முடியாமல்
என்னை நேசித்துக் கொண்டிருப்பதாய்
உன்னைப் பற்றிய என் விசாரணைகளிலிருந்து
தெரியவந்தன.
எதையும் ஏற்று நம்பி விடுகின்ற நான்
அதையும் விட்டு வைக்கவில்லை
இப்போது
நம்பிக்கையுடன் கூடிய நினைவுகள்
எதிர்க்காலம் என் கையிலும்
நீ என் அருகிலும் இருப்பதாய்த் தெரிகிறது.

இன்றைய பொழுதுகளிலும், ஏன் முன்னைய
பொழுதுகளிலும்
உன்னை நினைத்து நினைத்து
எல்லா வழிகளிலும் என்னை நான்
இழந்து போனேன், போகிறேன்.
கற்பனைகளில் நனைந்து நடுங்குகிறேன்.

பாடங்களுக்குள் பத்திரப்படாமல்
பாடல்களுக்கும்,
உன்னை நினைந்து எழுதுவதற்கும்
'எக்கச்சக்கமாய்' நழுவிப் போகின்றன
என் நேரங்கள்,
நினைவுகளால் அமுக்கப்பட்டு
என் உடம்பு கூட மெலிதாய்ப் போவதாய்
ஊரார் கூறுகிறார்கள்.
உண்மைதான்.......உன்னைப் படித்துப் படித்து
மெலிந்தே போய்விட்டேன்.
எத்தனையோ அனுதாபப் பார்வைகள்
என் மேல் வந்து குவிந்தாலும்
என் ஆசைப்பார்வை உன் மேல்தான்.

ராணி....
உன் பெயரை யார் உச்சரித்தாலும்
என்னை மறந்து விடுகிறேன்.
நின்று கொண்டே....விழித்துக் கொண்டே
கனவு காணத் தொடங்கிவிடுகின்றேன்.

நேற்றும் கூட உன் பெயரை....
உன் பெயரில் ஒருத்தி எழுதிய கவிதைகளைக்
கேட்டேன்.
காதல் யாசகக் கவிதைகள்
நீயே என்னை நினைத்து எழுதுவதாய்ப்பட்டது!
அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்
பேய்தானே..!
என் நிலையைச் சொல்லவா வேண்டும்!

என் பெயருக்கு இருக்கின்ற
பாரசீக மொழிக் கருத்தைப் போல
இளகிய மனமுடையவனாகவே இருக்கிறேன்
அதுவே என் பலவீனமுமாகிவிட்டது.
இப்படி.....எப்படி எப்படியெல்லாமோ
என்னை இழந்து கொண்டிருக்கிறவேளை
உன்னை இழக்காமலிருக்க
எதையாவது செய்வோமென்று நினைத்து
அந்த நினைப்பளவிலேயே கோழையாகி விடுகிறேன்.
அன்று.....உன்னை
எதிர்பாராமல் எதிரே சந்தித்து(ம்)
எதுவும் பேசாமல்...வெறும் புன்னகையுடன்
பிரிந்துவிட்டேன்.
நீயும் அப்படித்தான் செய்தாய்.
நானாக வந்து கதைப்பதை எதிர்ப்பார்த்திருப்பாய்
என்ன செய்ய...! நான் பாடத்தெரியாத ஊமை!

அதற்கு
அடுத்தநாள் அவசரமாய் வந்து
நமக்குள்
சொல்லிக் கொள்ளாத
காதல் வேண்டாம்
புரிந்து கொண்ட
பார்வைகள் போதும்- என்று கவிதை எழுதினேன்.
எவ்வளவு கோழைத்தனமான வரிகள்!!
இப்போது எழுதுகிறேன்.

**நமக்குள்**
**சொல்லிக்கொண்ட**
**காதலும் வேண்டும்.**
**புரிந்து கொண்ட**
**பார்வைகளும்**
**வேண்டும்**
**எனக்கு**
**நீயும் வேண்டும்.**

எப்படித்தான் எங்கிருந்தோ வந்த துணிச்சலில் இவ்வளவு
எழுதினாலும்
இவையெல்லாம்..என்னளவில்...
என் 'டயரி' அளவில் நின்றுவிடப் போகின்றவை தானே!
இருந்தாலும்..எப்போதாவது இதை நீ படிப்பாய்
அப்போது ஏதாவது நடக்கும்.
அதுவரை என்னுடனேயே இருக்கட்டும்.

*இப்படிக்கு*
*உன்னவன்.*

## பாடசாலைகளில் செக்ஸ் கல்வி அவசியமா?

ஆம் நிச்சயமாக. இன்றைய மாணவர்களே நாளைய குடும்பஸ்தர்கள். குடும்பம் என்ற வண்டியை ஓட்டப் போகின்றவர்கள். இந்த வாழ்க்கையில் ஒரு பகுதியே செக்ஸ். செக்ஸ் என்றால் என்ன? ஆபாசமா? குடும்பஸ்தர்கள் மாத்திரம் தெரிந்து கொள்ளவேண்டிய இரகசியமா? மனித வாழ்வின் உச்சக்கட்டமா? அல்லது வாழ்க்கையே அதுதானா? எமது நாட்டைப் போன்ற வளர்முகநாடுகளில் செக்ஸைப்பற்றிய தெளிவில்லாத ஒரு நிலை இருப்பதாலேயே அது இரும்புத்திரையிடப்பட்ட இயல்பிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக கருதப்படுகிறது. இன்று பாலியல் ரீதியாக எத்தனையோ, பாதகமான, கொடுமையான கற்பழிப்பு போன்ற செயல்கள் சமுதாயத்தில் நடப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதற்கு காரணம் என்ன? சமுதாயத்தில் செக்ஸ் என்பதைப்பற்றி பூரணமான ஒரு அறிவு இல்லாமையே. இன்று மாணவர்களாக காணப்படும் இளைஞர்களே பாதகமான செயல்களையும், கீழ்த்தரமான கெட்ட வழிகளையும் கையாளுக்கின்றனர். அவற்றுள் மிகவும் மோசமானது இளைஞர்கள் விலைமாதர்களைத் தேடிச்செல்வது. ஒரு சொற்ப நேர சுகத்திற்காக தனது வாழ்க்கையே வீணாகும்படி செய்வது எத்தனைபேர். இதற்கு காரணம் என்ன? செக்ஸ் என்பது ஆபாசமாகவும் வெறித்தனமாகவும் காணப்படுவதே. செக்ஸ் பற்றி ஒரு தெளிவான கருத்தை உணரும் எந்த மாணவர்களும் அதை மறைமுகமாக சமுதாய இயல்பிற்கு மாறாக அனுபவிக்கவோ, அடையவோ முயலமாட்டார்கள். செக்ஸ் பற்றிய விளக்கமில்லாத நிலையில்தான் அதை குறுக்குவழிகளிலும், கீழ்த்தரமானசெயல்களின் மூலமும் அறிய முற்படுதலின் பலனே ஆபாச படங்கள் பார்ப்பதும் தவறான புத்தகங்கள், சஞ்சிகைகள் படிப்பதும் போன்றவையாகும். இப்படியான படங்களையும், புத்தகங்களையும் மாணவர்கள் மறைமுகமாக பார்க்கும் போது நிச்சயமாக அவர்களுக்கு பூரண அறிவு கிடைக்காது. மாறாக உடலும், மனமும் கிளர்ச்சியடையவே செய்யும். இதனால் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்படுவதனால் சமுதாயத்தில் புறக்கணிப்பிற்கு உள்ளாகும் அவல நிலையை அவதானிக்க முடிகிறது. இன்று உலக நாட்டையே பயமுறுத்தும் ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் வரக்காரணம் என்ன தகாத உறவுமுறைகள், முறைகேடான பழக்க வழக்கங்கள், என்பன யாவரும் அறிந்ததே! இப்படியான செயல்களில் ஈடுபட முக்கிய காரணம் பாலியல் ரீதியில் பூரண அறிவு இல்லாமையே. இவ்வறிவை இலகுவாகவும் தெளிவாகவும் புகட்ட சிறந்தவொரு இடம் பாடசாலையே. மாணவ பருவமே பிந்திய வாழ்விற்கு ஒரு பூரணத்துவத்தை தரக்கூடியது. வாழ்க்கை என்ற வட்டத்தில் செக்ஸ் என்ற ஒரு தெளிவான அறிவை மாணவ பருவத்தில் கற்றுக் கொடுப்பதை தவறாக கருத இடமில்லை. பால் உணர்வுதான் ஞான உணர்விற்கு முதற்படி. அதை ஒழுங்காக மனிதன் உணர்ந்து கொண்டுவிட்டால், மறுகட்டத்தில் ஆன்மீக படிக்கட்டில் மளமளவென்று ஏறிவிடுகின்றான். இளம் வயதில் பால் உணர்வை மறைக்கவோ, கண்டிக்கவோ தொடங்கினால் ஆயுள்வரை அது வளர்ந்து கொண்டே இருக்கும். "அனுபவி" என்று கதவை திறந்து விட்டால் "போதும்" என்று அவன் வெளியே வந்துவிடுவான். பாலியல் ரீதியாக சமுதாயம் சீர்கெட்டு பிற்பட்ட நிலையை அடையவிடாமல் தடுக்க பல பாரிய அனர்த்தங்களை தடுக்க செக்ஸ் அறிவை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதே சிறந்ததாகும். இங்கு ஏனையவற்றுடன் செக்ஸையும் புகட்டும் போது பூரணமான அறிவு கிடைக்குமிடத்து அதைப்பற்றி தனியாக சிந்திக்கும் வாய்ப்பு குறைகின்றது. இதனால் அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாவதுடன், சமுதாயம் பாதுகாக்கப்படுகிறது. அதேவேளை நாடும் அபிவிருத்திப்பாதையை நோக்கி வீர நடை போடுகிறது.

செல்வன்: பூபாலரட்ணம் கணேஸ்
இல.86, மன்னார் வீதி,
புத்தளம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

**பத்திரிகையாளனின் அன்றாட வாழ்வின் சிலபக்கங்களை சுவையோடு சொல்லும் கதை இது. தமிழ்நாட்டில் வளர்ந்துவரும் எழுத்தாளர் சூர்ய குமாரன் எழுதியது.**

# தாகம்

-சூர்யகுமாரன்-

முதலிரவு என்றால் ரசிப்பதற்கும், பரிச்சயமாவதற்கும், போதையாவதற்கும் எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன! ஆனால்...

நான் விடியற்காலை மூன்று மணிவரை என் எழுத்தின் வலு பற்றியும், நான் ஏன் சொந்தப் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறேன் என்பது பற்றியும் நித்யாவிடம் பேசிக் கொண்டேயிருந்தேன்.

முதலிரவு தள்ளிப் போகிறதே என்ற அவஸ்தையாலோ அல்லது பத்திரிகை என்பது பெட்டிக்கடை மாதிரி காலையில் முதல் போட்டால் இரவில் லாபத்துடன் திரும்ப எடுத்துவிடக்கூடிய தொழில் என்று நினைத்தாளோ என்னவோ உடனே நகைகளை கழற்றிக் கையில் கொடுத்து விட்டாள்.

முதலிரவிலேயே மனைவியின் நகைகளை உருவின முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்.

இதைப் பெருமைக்காக சொல்லவில்லை.

எவ்வளவு கஷ்டப்பட்டிருந்தால்; எவ்வளவு அவமானப்பட்டிருந்தால்; எவ்வளவு நம்பிக்கை இருந்தால்.. நான், என் மனைவியின் நகைகளை வாங்கியிருப்பேன்? அதுவும் முதலிரவில்?

அதற்காகத்தான் சொன்னேன்.

எந்தப் பத்திரிகையிலும் நிரந்தரமாக இருக்காமல் வருடத்திற்கு ஒரு பத்திரிகையாக தாவிக் கொண்டிருந்ததால்..திருமணம் என்பது அவ்வளவு முக்கியமில்லாமல் போய் இனி தள்ளிப் போடவே முடியாத முப்பத்தாறு வயதின் இளமை கொஞ்சம் நீக்கப்பட்ட நிலையில்தான்..நித்யாவைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதித்தேன்.

நித்யாவிற்கு வயது முப்பது. 'ஜாதக தோஷம்' என்று என்னமோ சொல்லி,"அதனால் தள்ளிப் போய் விட்டது." என்கிறார்கள். நான் அவளைப் பார்த்ததுமே பிடித்துப் போய், கல்யாணத்திற்குத் தலையாட்டிவிட்டு...

திருமணத்திற்கு முதல் வாரம் வேலையை விட்டுவிட்டேன்.

சோகமாக இல்லை....?

சோகம்தானய்யா, சோகம்தான். இது பத்திரிகையாளனுக்கே உரிய தலையெழுத்து அல்லது சாபம்.

நான் எழுத்தாளனாக மட்டும் இருந்திருக்கலாம். விதி யாரை விட்டது? புரூஃப் ரீடிங், ரிப்போர்டிங், லே..அவுட் என்று தொழில் ரீதியான பத்திரிகையாளனாகவும் மாறியதன் விளைவு..

என்னைச் சுற்றிலும் நானே பிரச்சனைகளை விதைத்துக் கொண்டேன்.

'திரைவலம்' ரெகுலராகப் படிப்பவர்கள்.. அந்த சினிமா வார இதழின் கடைசிப்பக்க இம்ப்ரிண்டின், கடைசி மூலையில் டென் பாயிண்டில் பொறுப்பாசிரியர் என்று என் பெயர் போட்டிருப்பதைப் பார்த்திருக்க முடியும்.

பெயர் தான் பொ.ஆசிரியன், வேலையென்னவோ, கதவைத் திறப்பதில் ஆரம்பித்து, லெட்ஜர் எழுதி, ஏஜெண்டுகள் கட்டும் பணத்திற்கு ரசீது போட்டு, சர்க்குலேஷன் சிக்கல்களையும் கவனித்துவிட்டு, முடிந்தால் மூன்று மணிக்கு பிடிசோறு சாப்பிட நேரம் கிடைக்கும்.

அப்புறம் எடிட்டோரியல் வேலைகள் இரவு பனிரெண்டு வரை. இவ்வளவிற்கும் சினிமா பத்திரிகைதான், கிசுகிசு எழுதும் வழக்கமான பத்திரிகை.

சம்பளம் எவ்வளவு?

ஆயிரத்து ஐநூறு என்று மூக்கு முன் கேரட் போல் காட்டி சேர்க்கப்பட்டாலும், கடைசிவரை ஆயிரமா, அயிரத்து சொச்சமா என்று தெரியவில்லை. அவ்வப்போது சுரண்டி சுரண்டி மாசம் முழுக்கப் பணம் எடுத்தாலும், ஏழாம் தேதி சம்பள வவுச்சர் போட்டுக் கொள்ளும் போது எழுநூறுவரை எடுக்க முடிந்திருக்கும்.

ஆனால் நான் வேலையை விட பணம் காரணமல்ல.

எடிட்டர் ஊருக்குப் போன ஒரு வாரத்தில், கிசுகிசுக்களும், அபத்தமான பெட்டிகளும் இல்லாமல் எழுத்திலும், அமைப்பிலும் கொஞ்சம், கொஞ்சூண்டு இலக்கியம் கலந்து எழுதி, அந்த வார இஷ்யுவிற்கான பக்கங்களை அமைத்து விட்டேன்.

ஊர் திரும்பிய ஆசிரியர் ஊழிக் கூத்தாடித் தீர்த்துவிட்டார்.

"யோவ், காசு போட்டுப் பத்திரிகை நடத்தறவன் நானு... நட்டப்பட்டா லோல்படப் போறவன் நானு... உனக்குத்தான் பர்மிஷன் கொடுத்திருக்கேனே.. நீ இலக்கியம் பண்ணனும்னா, மத்த பத்திரிகைகள்ல பண்ணிக்கோன்னு. பின்னே ஏன்யா இதிலே.?

நிறுத்தி 'விய்க், விய்க்' என்று மூச்சு வாங்கிக் கொண்டார். பிளட் பிரஷர் உண்டு.

"இத பாரு..நீ இங்க சேரும் போதே, இது சினிமா பத்திரிகைன்னு தெரிஞ்சுதானே சேர்ந்தே? நான் சம்பளம் கொடுக்கறது நீ இலக்கியம் எழுத இல்ல; ரெண்டு ஃபாரம் டிலே ஆகாம ரொப்பி பிரிண்டுக்கு அனுப்பத்தான். உனக்கு லாஸ்ட் வார்னிங் இது...கிசு கிசுக்கு மேல யோசிக்கிற ஜோலி வேணாம்; விட்ரு. நான் ஏதோ பத்தாயிரம் சர்க்குலேஷன்ல அல்லாடிக்கிட்டு இருக்கேன்; கவுத்துடாத."

நான், அவர் பேசி முடிக்கக் காத்திருந்து, "சார் நான் எழுதியிருந்ததும் சினிமா மேட்டர்தானே? கொஞ்சம், வார்த்தைகள் அமைப்பிலே அந்தக் கட்டுரையை உயர்தரமா அமைக்க முயற்சித்திருந்தேன்.." என்று ஆரம்பிக்க...

மீண்டும் அதட்டினார்.

"வேணாங்கறேன்...வெங்காயம். அதுயாரைத் திருப்திப்படுத்தும்? நீ ஞாயித்துக்கெழமை, பீச்ல சுண்டல் சாப்பிட்டுட்டு இலக்கியம் பேசப்போற பாரு, அந்தக் கூட்டத்தையா? எம் பத்திரிகைய காசு கொடுத்து வாங்குற ரீடருக்கு உன் இலக்கியம் வேணாம்யா. அவங்க, அதை எதிர் பார்த்தா இந்த சினிமா பத்திரிகை வாங்கறாங்க...?

"ரீடர் முட்டாள்னு நாமா முட்டாள்தனமா நினைச்சுக்..." நான் நிறுத்தி,அவர் கண்கள் சிவப்பதை பார்த்ததும் உணர்ந்தேன்.

அந்த வார்த்தையை நான் உபயோகித்திருக்கக் கூடாது. வழக்கமான என் கோபம்; நளினமில்லாமல் வந்து விட்ட வார்த்தைகள்.

விளைவாய் பெருங்குரலில் கூச்சலிட ஆரம்பித்தார். பதிலுக்கு நான்.

அடுத்தவாரம் எனக்குக் கலயாணம். மறந்துவிட்டேன். ஏதோ ஒரு வேகம். அதிகம் அடைத்து வைக்கப்பட்டதால் கிளர்ந்து வெடித்தது.

ராஜினாமா செய்துவிட்டு வந்து விட்டேன். இரவு முழுக்கத் தூங்கவில்லை. நிதானமாக யோசிக்க முடியவில்லை.

'நடிகை பாத்ரூம் போறதைத் தவிர, மீதி விஷயங்களை எழுதவா நான் பேனா பிடித்தேன்' என்று குமுறினேன்

மறுநாள் காலை வரை தூங்காமல் யோசித்துவிட்டு, தனியே சொந்தமாகப் பத்திரிகை தொடங்குவது ஒன்றுதான் சரியான தீர்வு என முடிவு செய்தேன். மேஜை டிராயர், சட்டைப் பாக்கெட் , சூட்கேஸ் எல்லாம் தேடிப் பொறுக்கி மூன்று ரூபாய் நாற்பது காசு சில்லறை சேகரித்து ..டீயும், சிகரெட்டும் குடித்து விட்டுப் பகல் பொழுதில் தூங்கிவிட்டேன்.

கல்யாணம் வரை..அக்கம் பக்கத்தில், "என்னப்பா வேலைக்குப் போகலையா?" என்று விசாரித்தவர்களிடம், "போடா பேமானி..." என்று திட்டாமல், "இப்ப ஃப்ரீலான்ஸ் பண்றேன். ஒரு பத்திரிகையா இருக்கறதைவிட, நாலைஞ்சுக்கு எழுதினா கொஞ்சம் பணம் புரட்டலாம்" என்று சமாளித்தேன்.

ஃப்ரீலான்ஸ் என்பது; இரண்டு கக்கத்திலும் நண்டு வைத்துக் கட்டியதைப் போன்ற நமைச்சல் சமாச்சாரம்.

இப்படியே ஒருவாரம் கடத்தி விட்டு.. நித்தியாவிற்குத் தாலிகட்டி, இலைச்சாப்பாடு சாப்பிட்டு, இடையில் பாதி லட்டை அவளுக்கு ஊட்டி வெட்கப்பட வைத்து, முதலிரவில் கட்டிலோரம் தனியாக மடக்கி, "இத பாரு நித்யா..இப்பநீ என் மனைவியாயிட்ட....உங்கிட்ட பொய் சொல்ல விரும்பலை. நான் வேலையை விட்டுட்டேன்" என்றேன்.

"ஹயோ அப்புறம் என்ன செய்யப் போறீங்க?" என்றாள்.

"பயப்படாதே நித்.. நானே சொந்தமா பத்திரிகை ஆரம்பிக்கப் போறேன்." என்று நீட்டி முழக்கி, இரவு மூன்று மணி வரை.. 'என் இலக்கியதாக அவஸ்தையை எழுதித் தீர்க்க சொந்தப் பத்திரிகைதான் தோதுப்படும்' என்பதற்கான பதினெட்டுக் காரணங்களை விளக்கி சொல்லி..

இருபது பவுன் மொத்தம், கழற்றி வாங்கி விட்டேன்.

கண்ணுக்குள் கனவுகள் பொங்க- அதிக சந்தோஷத்தில் அவளை ஆழ்த்தி சமாதானம் ஏற்படுத்திக் கொண்டேன்.

மறுநாள், மதியம் பனிரெண்டிற்குள் நகைகளை விற்று, ஐம்பதினாயிரம் ரூபாயைத் தோல்பையில் அடக்கி கக்கத்தில் வைத்துக் கொண்டு, நண்பர்களைப் பார்த்து விஷயம் தெரிவித்தேன்.

அதற்கடுத்த நாளே சுறுசுறுப்பாக ஏஜென்சி ஃபாரம் அடித்து வாங்கி, அத்தனை ஏஜெண்டுகளுக்கும், "அன்புடையீர்.." என்று கடிதம் எழுதி, இணைத்து அனுப்பி விட்டேன்.

என் வீட்டின் முன் அறையையும்..அது அட்மினிஸ்ட்ரேஷனுக்கு.. அதற்கடுத்த அறையையும்.. அது எடிட்டோரியலுக்கு என்று அலுவலகமாக மாற்றிவிட்டேன்.

எடிட்டோரியல் வேலைகள் முழுக்க நான், லே..அவுட் லெட்சு என்ற லெட்சுமிபதி, சர்க்குலேஷன் ரவி என்று வேலைகளைப் பிரித்துக் கொண்டோம்.

விடுமுறை தினங்களில் மட்டும் கூடி இலக்கியம் பேசிய என் நண்பர்களை இணைத்தேன். முதல் இதழிற்கான மேட்டர்களைத் தீர்மானித்தோம். நான் டம்மி போட்டுப் பார்த்தேன். லெட்சுவுடன் பேசியதில் ..லே..அவுட் வசதிக்காக ஆறு பக்கங்களை மாற்றி அமைக்கத் தீர்மானித்தோம்.

மீண்டும் விவாதித்தோம்.

சில விலக்கி, சில சேர்த்து.. "இன்னும் இருபது தினங்களில் அனைத்து மேடர்களும் சேகரித்து விட வேண்டும்" என்று சொல்லிக் கொண்டோம்.

எக்மோர் கோர்ட்டின் பிரஸ் செக்ஷனில் 'புதிய மணிக்கொடி' என்ற டைட்டிலுக்கு அப்பளிகேஷன் கொடுத்து, அது டெல்லி போவதற்குள் நான் முன்னால் போய் டைட்டில் கிளியரன்ஸ் வாங்கி...

மறுவாரம் கோர்ட்டில் டிக்ளரேஷன் கிடைத்ததும், பூஜை போட்டு வேலைகள் துவக்கினோம்.

புதிதாக ஏஜென்சி ஆரம்பித்த, சின்னச்சின்ன ஊர்களின் ஏஜெண்டுகள் மட்டும் ஐம்பதுக்கும், நூறுக்கும் டிமாண்ட் டிராப்ட் எடுத்து அனுப்பியிருந்தார்கள்.

என் பத்திரிகைக்கான முதல் கட்டுரையைக் கிருஷ்ணன் கொடுத்தான். புதுமைப்பித்தனைப் பற்றிய மிக அற்புதமான கட்டுரை; தலை நரைப்பதற்கு முன் செத்துப் போன அந்த எழுத்தாளனை, அவன் எழுத்தை, அது இன்னும் முழுமையாக எல்லா தமிழ் வாசகனையும் போய்ச் சேராத சோகத்தை எழுதியிருந்தான்.

படிக்கும் போதே தீர்மானித்து விட்டேன். இது வாசகர்களிடையே மிக ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்று.

ரங்கராஜைக் கூப்பிட்டு, "முதல் இஷ்யு ரேப்பர்ல புதுமைப்பித்தனையே போட்றலாம்னு இருக்கேன். அசத்தலா லைன்ல போட்டுக் கொடு" என்றேன். லைன் டிராயிங்கில் போட்டால் இரண்டு பாசிடிவ் போட்டு, ஸ்கேனிங் இல்லாமல் கட்.கலரில் சமாளித்துவிடலாம்.

ரங்கராஜ், நான் எதிர் பார்த்ததற்கும் மேலாக படம் போட்டுக்கொடுத்தான். அந்த ஒடுங்கின முகமும், தெற்றுப் பல்லும், தடித்த மேலுதடும், கனவுகள் மிதக்கும் கண்களும் மிகக் குறைவான ஸ்ட்ரோக்ஸில் ஆரவாரமாய் வந்திருந்தன.

அட்டை லே..அவுட் நடந்து கொண்டிருக்கும் போது கிருஷ்ணன் வந்தான்.

"கிருஷ்ணா..உங்கட்டுரைக்கு மேட்சிங்கா ஒரு தலைப்பு சொல்லுப்பா. அதைத்தான் போல்டா ரேப்பர்லயே போடலாம்னுட்டு இருக்கேன்" என்றேன்.

கிருஷ்ணன் யோசித்துச் சொன்ன ஏழு தலைப்புகளில் 'புதுமைப்பித்தனைக் கொன்ற நாங்கள்' என்ற தலைப்பை ஓகே செய்து, "லெட்சு, இந்தா..இந்தத் தலைப்பை நல்லா போல்டா எழுதி, ரைட்சைடு கட்டிங் ஸ்பேஸ் விட்டு வெச்சிரு" என்று கொடுத்தேன்.

குறுநாவலையும், சிறுகதையையும் இன்னயஃபாரத்தில் வைத்து, லீடர் ஃபாரத்தில் புதுமைப்பித்தன் பற்றின கட்டுரையும், நிச்சயம் பரபரப்பை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்பிய அகல்யன் எழுதிய 'நிர்வாண இந்தியாவின் சில கோவண மனிதர்கள்' என்ற கட்டுரையும் இடம் பெறுமாறு அமைத்துக் கொண்டோம்.

அகல்யன், 'நிர்வாண இந்தியர்கள்' என்று கட்டுரையில் அடிக்கடி குறிப்பிட்டிருக்கும் நபர்கள், படித்ததும் சண்டைக்கு வருவார்கள் என்று தெரிந்தே அந்தக் கட்டுரையை வெளியிட முடிவு செய்தோம்.

இரண்டு ஃபாரம் லே..அவுட்டும் முடிந்தபின் ஒரு முறை பார்த்த போது பத்திரிகை வித்தியாசப்பட்டிருப்பது தெரிந்தது. பாராட்டுப் பெறும் என்பதும் உறுதியானது.

அடுத்த இரண்டு தினங்கள் ஃபாரம் ஓடிக் கொண்டிருக்கும் பிரஸ்ஸிற்கும், ரேப்பர் ஓடும் பிரஸ்ஸிற்குமாக அலைந்து, அலைந்து...

இம்ப்ரஷன் ஈவனாக இருக்க வேண்டும் என்று மெஷின்மேனுக்குத் தனியாக டீயும், டிபனும் வாங்கிக் கொடுத்து..

பழியாகக் கிடந்து, இரவு இரண்டரை மணிக்கு ஃபாரமும், பேப்பரும் கொண்டு போய் பைண்டிங்கில் இறக்கிவிட்டு..அங்கேயே நியூஸ்பிரிண்ட் விரித்துப் படுத்து விட்டேன்.

காலை எட்டு மணிக்கு ஏழெட்டு சின்னப் பெண்கள் வந்து, உட்கார்ந்து, "இது புதுசா...இனி ரெகுலரா நாமதான் பைண்டிங்கா?..என்று அவர்கள் வேலை விஷயம் உறுதி செய்து, ஒரு தாவணி இன்னொரு பாவாடையிடம், "தராசு, நக்கீரன்லாம் வந்தா டீ வாங்கிக் கொடுப் பாங்கடீ..." என்று கிசு கிசுத்து..

நான் சில்லரை தடவி எடுத்து எல்லோருக்கும் டீ சொன்னேன்.

குடித்துவிட்டு, நேற்று டி.வி.யில் பார்த்த நாடகத்தில் வந்த ஒரு பெண் கட்டியிருந்த சேலை பற்றி விவாதித்தபடி ஃபாரம் கம்போஸ் செய்ய ஆரம்பித்தார்கள்.

என் பத்திரிகை கொஞ்சம், கொஞ்சமாக என் கண்ணெதிரே முழுவடிவம் பெறப் பெற....

எனக்குள் தீக்குழம்பு ஓட ஆரம்பித்தது.

பத்து மணியிலிருந்து பத்தரைக்குள்ளாக நல்ல நேரம் என்று, பத்துப் பிரதிகள் மட்டும் பின் அடித்து, கட்டிங் பண்ணி வாங்கிக் கொண்டு அஷ்டலெட்சுமி கோவிலுக்குப் போய் பூஜை செய்துவிட்டு வந்தேன்.

மாலை நான்கு மணிக்கு ஆறாயிரம் பிரதிகளையும் பார்சல் போட்டு.. சென்ட்ரல், எக்மோர் ரயில் நிலையங்களில் புக் செய்து விட்டு... வீட்டிற்கு வந்தேன்.

நித்யாவிடம் பெருமையாக ஒரு பிரதி கொடுத்தேன். வாங்கி தூணோரம் சரிந்து உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தாள்.

நான் குளித்து விட்டு வந்த போது புத்தகம் தூணருகில் இருந்தது. நித்யா சமையல் செய்து கொண்டிருந்தாள்.

தரையில் உட்கார்ந்து மீண்டும் ஒரு முறை என் பத்திரிகையைப் படித்தேன்; புரட்டினேன்; மீண்டும் படித்தேன். அட்டையின் இடது ஓரத்தை விரல்களால் பிடித்து, கையை நீட்டிக் கொண்டு.. கடையில் புத்தகம் இப்படித் தொங்கினால் பளிச்சென்று தெரியுமா என்று பார்த்தேன்.

தெரிந்தது.

இரவு படுக்கும் போதுதான் கவனித்தேன். நித்யா குளித்து விட்டு வாசனையாக, மல்லிகைப் பூ வைத்து, புதுப்புடவையில் 'ஸ்பெஷல்' என்று எழுதி வைத்தது போல் படுத்திருந்தாள்.

அவள் தூங்கவில்லை என்பது, அவளது மெத்தென்ற வெள்ளைப்பாதங்கள் கட்டிலில் மிக அழுத்தமாகப் பதிந்து கிடப்பதில் தெரிந்தது.

கோபமாக இருக்கிறாள் என்று அர்த்தம் போலிருக்கிறது. அவளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கோ, அவள் செய்கைகளுக்கு அர்த்தம் தெரிந்து கொள்வதற்கோ கல்யாணமாகி அதிக நாள் ஆகவில்லையே!

முதலிரவிற்குப் பின் நித்யாவை எப்போது தொட்டேன் என்பதை யோசித்தேன் நினைவிற்கு வரவில்லை. அவள் தோளைத் தொட்டுத் திருப்பினேன்.

அந்த ஒரு செய்கைக்காகக் காத்திருந்தவள் போல் நொடியில் என் மார்பில் முகம் சேர்த்து அழ ஆரம்பித்தாள்.

நான் அவளை, "ஏன் அழுகிறாய்" என்று காரணம் கேட்கவில்லை. அவள் கூந்தலுக்குள் விரல் நுழைத்து அளந்தேன். இந்த அழுகைக்கான காரணம் என்ன உலுக்கினாலும் பெண்ணின் வாயில் வராது.

ஆனால், என்ன செய்வது..என்னைப் போன்ற பத்திரிகையாளனைக் கட்டிக்கொண்டால், இயற்கையாகப் பெற வேண்டிய விஷயங்களைக் கூட ஞாபகப்படுத்தியோ அல்லது இந்த மாதிரி குழந்தையாய் விசும்பியோதான் பெறமுடியும். நான், அவள் அழுது ஓயும் வரை காத்திருந்தேன்.

விடியற்காலை ஐந்து மணிக்கு நித்யாவுடன் மீண்டும் கூடிவிட்டுப் படுத்த போது.. இந்நேரம் பார்சல்கள் ஊர்களில் இறங்கியிருக்குமா என்று யோசித்து விட்டுத் தூங்கிவிட்டேன்.

காலை ஒன்பது மணிக்குக் குளித்துவிட்டு, சாப்பிடாமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு, நகர் முழுக்க என் பத்திரிகை சப்ளை ஆகிறதா என்று நோட்டம் விடப் போனேன்.

முதலில் தியாகராய நகர் பஸ் டெப்போவிற்கு எதிரிலுள்ள கடையில் பார்த்தேன். வரிசையாக, மாலை மாலையாக அத்தனை பத்திரிகைகளும் தொங்கிக் கொண்டிருந்தன.

'புதிய மணிக்கொடி" என்ற, புதுமைப்பித்தன் அட்டை கொண்ட என் பத்திரிகை மட்டும் இல்லை.

"ஏம்ப்பா..பாய் 'புதிய மணிக் கொடி' உனக்கு சப்ளை பண்ணலையா?" என்றேன் கடைக்காரரிடம்.

அவர் சரக், சரக்கென சிகரெட் உருவிக் கொடுத்துக் கொண்டே, என்ன கொடியோ...... எத்தனை பத்திரிகை வருது. "எத்தனையைத்தான் வெளில தொங்க விடுறது?"

என்று சலித்துக் கொண்டார்.

"இது புதுசுப்பா..உங்களை மாதிரி கடைக்காரங்க ஒத்துழைச்சாதானே பத்திரிகை நல்லா விக்கும்" என்று அவரிடம் நைச்சியமாய்ப் பேசியபின், "நீங்க யாரு, அந்தப் பத்திரிகையா?" என்றபடி உள்ளே சிகரெட் பண்டலுக்கு அடியிலிருந்து ஒரு பிரதியை எடுத்துக் கொடுத்தார்.

முன்னால் தொங்கிக் கொண்டிருந்த 'திரைவலம்' மேல் என் பத்திரிகையைத் தொங்கவிட்டுக் 'கிளிப்' போட்டேன்.

சற்று விலகி நின்று பார்த்தேன்.

தெற்றுப்பல்காரர் சிரிப்பு சந்தோஷமாக இருந்தது.

இன்னொரு கடையில்.குஷ்புவின் படம்போட்ட பத்திரிகைக்கும், ஸ்ரீதேவியின் தொடைகாட்டிய ஏதோ ஒரு பத்திரிகைக்கும் இடையில் அந்தத் தெற்றுப்பல் கொஞ்சம் தெரிந்தது. ஸ்ரீதேவியை ஒதுக்கி, புதிய மணிக்கொடி என்ற எழுத்து நன்றாகத் தெரியும் படி மாட்டினேன்.

கடைக்காரர், "அதையெல்லாம் கலைக்காத சார்..." என்றார்.

அதற்குப் பிறகும், பார்த்த அநேகக் கடைகளிலும் இதே நிலைதான்.

நேராக பாயைத் தேடிப் போய் "என்ன பாய், இப்படிப் பண்ணீட்டிங்க.. நீங்க ஒழுங்கா சப்ளை பண்ணுவீங்கன்னு தானே உங்களுக்கு ஏஜென்சி கொடுத்தேன். ஒரு கடையில கூட புத்தகம் வெளிய தொங்கவிடலை" என்று முறையிட்டேன்.

பாய் தலையை மட்டும் நான் பேசுவதற்கேற்ப ஆட்டியபடி, "முப்பத்தாறு, முப்பத்தேழு.." என்று நூறு ரூபாய்க் கற்றையை எண்ணி முடித்து விட்டு, ரப்பர் பேண்ட் எல்லாம் போட்டு முடித்து, "சாயங்காலம் பேப்பர் போடறப்ப சரி பண்ணச் சொல்லிடலாம்..புது புக் பாருங்க. கடைக்காரங்க கொஞ்சம் அசட்டையாத்தான் இருப்பாங்க.." என்றார்.

மீண்டும் சைக்கிளில் அண்ணா சாலை வந்து, அண்ணா சிலைக்கு இடது எதிர்புறம் உள்ள புத்தகக் கடையில் வந்து, என் பத்திரிகை விற்பனையை நேரில் பார்க்க ஆசை கொண்டு நின்றேன்.

முப்பதடிக்கு சுவர் முழுக்கப் பத்திரிகைகள். எத்தனை நிறங்கள்!

எவ்வளவு நேரம் நின்றிருப்பேன் அப்படியே என்று தெரியவில்லை.

லுங்கிகட்டி, குட்டையாக இருந்த ஒருவர்," அந்த புக் எடுப்பா.." என்று என்பத்திரிகையை நோக்கிக் கைகாட்ட, ஆர்வமாய் அவரையே கவனித்தேன்.

படக், படக்கென்று பக்கங்களைப் புரட்டினார்.

"புத்சாகீது...இன்னாங்கடா இது, உள்ற போட்டோவே காணும்... இன்னா புக்குபா இது" என்றார்.

கடைக்காரர், "விடிஞ்சா ஒரு பத்திரிகை வருது. எவன் பார்த்தான்" என்று வியாபாரம் பார்த்துக் கொண்டே பேசினார்.

லுங்கிக்காரர், "இதாருப்பா அட்டைல..ஈனு இளிச்சுகினுகீறான்"என்றார் வர்ணனையாக .

"யோவ்..நீ புக் வாங்குறியா, ஓசில படிக்கிறியா? வேணாம்னா வெச்சுட்டு நடையக் கட்டு" என்று கடைக்காரர் காலையில் நான்கு மணிக்கு கடை திறந்த களைப்பில் எரிந்து விழ..

"சும்மா கத்தாத நைனா..புத்சாகீதேனு பாத்தேன். ஒரு கட்டுசய்தி கொடு" என்று பத்திரிகையைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, பீடி பற்றவைத்து இழுத்துக் கொண்டு போனான்.

இரவு நெடுநேரம் புரண்டு, புரண்டு படுத்தேன்.

தூக்கம் வரவில்லை.

நித்யா எழுந்து விளக்கு போட்டு "தூங்கலை?" என்றாள்.

அருகில் அமர்ந்து, "அதுதான் நீங்க நினைச்சபடி புக் ரிலீசாயிடுச்சே.. இன்னும் என்ன கவலை?" என்று என்தலையைக் கலைத்து விளையாடினாள்.

புதுப்பெண் மெருகு குலையாமல் இருந்தாள். அவளை அணைத்து, "இது வேற கவலைம்மா" என்றேன்.

"ஹயோ..அடுத்து இன்னொரு புதுக் கவலையா? இனி கழட்றதுக்கு ஒண்ணு மில்லைப்பா" என்று மார்பில் ஓங்கிக் குத்தினாள். நான் அவளை சாய்த்து அருகில் படுக்க வைத்தேன்.

விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. நித்யா என் இடுப்பில் கைபோட்டு, கால்களைக் குறுக்கித் தூங்கிக் கொண்டிருந்தாள்.

நான், "இது, முதல் போட்டவன் கவலை" என்று சொன்னால் அவளுக்குப் புரியுமா என்று விடியும் வரை யோசித்துக் கொண்டிருந்தேன்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இங்கிலாந்து இளவரசரின் சாதகம்

# பார்த்தால் பசு பாய்ந்தால் புலி!

ரம்போ படப்புகழ் சில்வஸ்ரர் ஸ்ராலோனின் தாயார் ஜாக்கி சோதிடம் பார்ப்பதிலே வல்லவர்.

ரஷ்யா ஜனாதிபதி போறிஸ் யெல்ட்சின், பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மாக்கோஸின் மனைவி இமெல்டா மாக்கோஸ் ஆகியோருக்கு சோதிடம் பார்த்தவர்.

இங்கிலாந்தின் இளவரசி பேரழகி டயானாவுக்கும் அவர்தான் சோதிடம் பார்த்துக் கணிப்புக் கூறி வருகிறார்.

இளவரசர் சாள்ஸ்சின் சாதகத்தை பார்வையிட்ட ஜாக்கி அதற்காகப் பெற்றுக் கொண்டது 60 ஆயிரம் அமெரிக்க டொலர்கள்.

சோதிடர்கள் மீதும், மந்திர வாதிகள் மீதும் டயானாவுக்கு எக்கச்சக்கமான நம்பிக்கை என்று ஜாக்கி சொல்லுகிறார்.

இளவரசர் சாள்ஸ்சின் சாதகப்படி அவர் விசித்திரமான செக்ஸ் லீலைகளில் விருப்பம் கொண்டவர்.

அழகான பெண்களைக் கண்டால் மோகம் கொண்டு தாகம் தீர்க்க நினைக்கிற ‘நணம் கொண்டவர்.

வெளித்தோற்றத்தில் பார்க்கும் போது இளவரசர் சாள்ஸ் ஒரு அப்பாவிபோலத்தான் இருப்பார். பள்ளியறைக்குச் சென்றுவிட்டால் அந்தப் பசுத்தோல் அகன்றுவிடும். அங்கே அவர் ஒரு சூரப்புலி என்கிறார் ஜாக்கி.

டயானா பழமையில் நாட்டம் கொண்டவர். யோக்கியமான பெண் என்று ஜாக்கி உத்தரவாதம் செய்கிறார் .

“சாள்ஸ்சும் அவரது காதலி கமீலாவும் விசித்திரமான லீலை களில் விருப்பம் கொண்டவர்கள். அவர்களது காதல் உண்மையான தல்ல. அது ஒரு காமக் களியாட்டம்” என்று ஜாக்கி முகம் சுளிக்கிறார்.

“சாள்ஸ் எத்திசையில் போனா லும் பரவாயில்லை. அவருடன் திருமண பந்தத்தை அறுத்துவிடாதே” என்று டயானாவுக்கு ஜாக்கி ஆலோசனை சொன்னார். ஆனால் டயானாவால் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

“தனது படுக்கையில் வேறு பெண்ணோடு சாள்ஸ் இருப்பதை டயானா சகிக்கமாட்டார். சாள்ஸ் சும், கமீலாவும் அதனை விரும்பக் கூடியவர்கள்.” என்று ஜாக்கி சொல்லுகிறார்.

சாள்ஸ்-கமீலா காதல் உறவு விரைவில் முறியும். கமீலா-சாள்ஸ் தன்னோடு மட்டுமே உறவு கொண்டுள்ளதாக நம்புகிறார். ஆனால் சாள்ஸ்சுக்கு ஏராளமான பெண் நண்பிகள் இருக்கிறார்கள். அது கமீலாவுக்கு தெரியும் போது பல அந்தரங்கங்கள் அம்பல மாகும். அதுவும் ஜாக்கி வெளியிடும் கணிப்புத்தான்.

மகாராணி எலிசபெத்தின் பின்னர் சிம்மாசனம் சாள்ஸ்சிடம் செல்லாது. சாள்ஸ் -டயானா தம்பதி களின் இளைய மகன் ஹாரிஸ் இங்கிலாந்தின் மன்னராக முடி சூட்டிக்கொள்வார்.

மகாராணியின் சாதகத்தையும் டயானாவின் சாதகத்தையும் ஜாக்கி ஒத்துப்பார்த்துள்ளார். மகாராணி டயானாவை விரும்பவில்லை. டயானாவின் மகன் இளவரசர் ஹாரிஸ் அரசராகும் பட்சத்தில் டயானாவின் செல்வாக்கு உயரும்.

அதனால், தான் கொலை செய்யப்படலாம் என்று டயானா அஞ்சுகிறார். தனக்கு யாராவது நஞ்சூட்டி விடுவார்களோ என்று டயானா பயப்படுகிறார்.

டயானாவிடம் ஜாக்கி பின்வரு மாறு சொல்லியிருக்கிறார்:

“காலம் செல்லச் செல்ல நாட்டு மக்களின் அபிமானம் உங்களுக்கு அதிகரிக்கும். நாட்டின் குழந்தைகள், ஊனமற்றோர் ஆகியோரது நலனுக்காக நீங்கள் அளப்பரிய சேவையில் ஈடுபடப் போகிறீர்கள்”



இளவரசர் சார்ள்ஸ், ஜாக்கி ஸ்ராலோன் மற்றும் டயானா, லேடி கமீலா

## தூரத்து

# வண்ணவண்ண ஆசைகள்! வாசகரின் ஆசைகள்!

சின்னச்சின்ன ஆசை சொல்ல ஆசையா என்று கேட்டிருந்தோம். குவிந்தன மடல்கள்! எல்லோருக்குமே எழுதுகோல் வழியே உள்ளத்தில் உள்ளதை கொட்டிவிட ஆசை.

### பாட்டெழுத ஆசை

சின்னச்சின்ன ஆசை.
சிறகடிக்க ஆசை.
தினக்குறிப்பெடுத்து
தினமெழுத ஆசை.

உடல் வளத்தைப் பெருக்க
உடற்பயிற்சி செய்து வரஆசை.
பாரதியாரைப் போல
பாட்டெழுத ஆசை.
தினமுரசு வாங்கி
தினம் படிக்க ஆசை.

க.கு. திவாகரன்
கொழும்பு-13.

### இளவரசி டயானாவை..

கவிஞர் வைரமுத்துவின்
கவிதை வரிகளை-இதயத்துள்
சேர்த்து வைக்க ஆசை.
இள்வரசி டயானாவை
கண்டு பேசிவிட ஆசை.
பறவையாய் மாறி
இலங்கையை சுற்றிவர ஆசை.

செல்வி: ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி.

### அன்னை மடியில்

மீண்டும் ஒரு முறை
அன்னை மடியில்
தலைவைத்து உறங்கிவிட ஆசை.
அன்னை என்னை தொட்டிலில் இட்டு
ஆராரோ பாட
அதை காதாரக் கேட்க ஆசை!

மருதை நெடுஞ்செழியன்
மத்துகம.

நல்ல புளி மாங்காயும், சாம்பலும்
தின்ன வேண்டும் என்று ஆசை

ஜீ. ஜீவராணி
பேலியகொட.

### இமயலை ஏறி...

பள்ளிக்குச் சென்று கல்வி கற்க ஆசை.
கற்றபடி வாழ்வை கடைப்பிடிக்க ஆசை.
இமயமலை ஏறி இறங்கிவர ஆசை.
இறங்கிவந்த பின்னர்
கின்னஸில் தடம் பதிக்க ஆசை.
கண்ணதாசனைப் போல கவிதை எழுத ஆசை.

செல்வன் ஷஹிர்ஷா தாஸிம்
தர்காநகர்.

கிராமம் ஒன்றில்-நானும்
என் காதலியும்
தனித்திருக்க ஆசை.

கே. ஆர் ஞானேந்திரம்
பண்டாரவளை.

மூன்று ஆண்டுகள்
வாடிய - அகதிமலர் நான்
சொந்த ஊர் சென்று
சோலைக்குள்ளே
குடியிருக்க ஆசை.

செ. யேசுநாதன்
கொழும்பு-4

### மீன்பாடும் தேனாட்டில்

ஓடும் மீனும் பாடும் தேனாடாம்
புகழ் மிகு எம் ஊரில்
பௌர்ணமி நாளதில்
தோணி மீது நாமேகி
வீழும் எழில் நிலாவொளியில்
மீள ஓர் முறை மீனோசை கேட்டிட
ஆசை.
‘கன்’பாடும் எம்மூரில்
மீன்பாடும் ஓசை கேட்டிட ஆசை.

வாஹிட் ஏ. குத்தூஸ்
கோட்டை முனை.

முத்து முத்து ஆசை
முத்துக்குளிக்க ஆசை.
வெளிநாடு சென்று
உழைத்து வர ஆசை!

ஜவாத்
புத்தளம்.









# கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

நீலா: கல்யாணம், சீதனம் என்ற பிரச்சனை எல்லாம் இல்லாத சிஸ்டர் யாரு?
மாலா: டிரான்ஸிஸ்டர்தான்.

■

நோயாளி: டாக்டர், எனக்கு முன் கோபம் அதிகமா இருக்கு.
டாக்டர்: எவ்வளவு நாளா இருக்கு?
நோயாளி: எவ்வளவு நாளா இருந்தா உனக் கென்னய்யா. இப்ப வைத்தியம் பார்க்கி றீரா இல்லையா.

■

ரகீம்: ஜோசியருக்குப் பிடித்த உலகத் தலைவர் யார்?
நஜீம்: தெரியேல்லையே
ரகீம்: ‘கிளி’ன்டன்.

■

நீலா: இளையராஜா அமெரிக் காவிலே பிறந்திருந்தா அவர் பெயர் என்ன?
மாலா: யங்கிங்.

■

அவர்: தரகரே, மூக்கும் முழியுமா ஒரு பெண் இருந்தாச் சொல்லுங்கோ?
தரகர்: அப்ப காது, வாய் எல்லாம் வேண்டாமாங்கோ.

■

நீலா: கௌதமிக்கும்- விஜய காந்துக்கும் இடையே என்ன உறவு?
மாலா: நடிகர்கள் என்ற உறவோ?
நிலா: இல்லையடி. விஜயகாந் சின்னக் கவுண்டர். கௌதமி பெரிய கவுண் டர் பொண்ணு. விஜயகாந் சித்தப்பா முறைதானே.

■

பிச்சை: ஏம்மா, அந்தாளுக்கு நூறு ரூபாய் போட் டீங்க. எனக்கு பத்து ரூபாய்தானே போடு றீங்க.
நடிகை: நீயா என்னை ஹீரோ யினாப் போட்டு பட மெடுத்தே.

■

திருடன்: நீங்கள் அடிக்கடி வீட்டை மாத்திறது நல்லா இல்லை.
வீட்டுக்காரர்: ஏனப்பா.
திருடன்: வீடு கண்டுபிடிக்கறதில பெரிய கஸ்டமாய்ப் போவுது.

■

ஆசிரியர்: சின்ன வயதில் நாம் உழைத்தால் தான் பின்னாடி கால் நீட்டிச் சாப்பிடலாம்.
மாணவன்: எப்படித் தான் உழைத்தாலும் பின்னாடி கால்நீட்டி சாப்பிட முடியாது.

■

அவர்: நம்மூர் ரி.வி.யிலே உங்களுக்கு பிடிச்ச அம்சம் என்ன?
மற்றவர்: ஒஃப் சுவிச்.

■

ரகீம்: ஏனடா அவனை கன்னத்திலே அறைஞ்சே?
நஜீம்: பின்ன என்னடா, ‘உய்யலாலா’ வுக்கு அர்த்தம் கேட்கிறான்.

■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வசதியிழந்தபோதும் மகிழ்ச்சி இழக்கவில்லை. விதியை மதிக்கும் முன்னாள் மகாராணி!

ஈரான் அரசி ஃபாராவை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

ஈரான் ஷாவின் ராணியாக மட்டுமல்ல எழிலுக்கே ராணியாக விளங்கியவர்.

ஈரானில் கொமேனி நடத்திய புரட்சி ஷாவை விரட்டியது. அரச குடும்பம் ஆதிக்கத்தை தூக்கி எறிந்தது.

மன்னர் ஷாவும்- குடும்பமும் சாவின் கரங்களில் இருந்து தப்பி அமெரிக்காவுக்கு பறந்தார்கள்.

புற்றுநோயால் ஷா - சாவின் கரத்தில் வீழ்ந்தார்.

எழில் மாடத்தில், ஏவல் பெண்கள் புடைசூழ, பலத்த காவல் புறத்தே இருக்க, காணுமிடம் எங்கும் செல்வம் கொழித்திருக்க வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து எழிலரசி ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பார் என்று நீங்கள் நினைத்தால்-

அந்த நினைப்பை உதறி விடுங்கள். எழுதிச் செல்லும் விதியின் கைமீது முன்னாள் அரசி ஃபாராவுக்கு பழுத்த நம்பிக்கை.

"விதி நம் தலையில் எதைச் சுமத்தினாலும் அதை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்" என்கிறார் ஃபாரா.

ஃபாரா இப்போது பாசமுள்ள பாட்டியாக தன் பேரக் குழந்தையோடு கொஞ்சி மகிழ்கிறார்.

ஈரானின் அரச வம்ச வாரிசு ரேசா. ஒரு குழந்தைக்கு தந்தை. குழந்தையின் பெயர் நூர். ரேசா தன் மனைவியோடு அமெரிக்காவில் வாஷிங்டனில் வசிக்கிறார்.

மகனையும்- மருமகளையும்- பேரக்குழந்தையையும் காணவும், அவர்களோடு இன்பமாகப் பொழுதைக் கழிக்கவும் பாரா அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் இடையே பறந்து திரிகிறார்.

ஃபாரா பிரான்சில் பல மாதங்கள் இருக்கிறார். அதனால் பேரனுடன் நீண்ட நாட்கள் கழிக்க முடிவதில்லை.

ஷா-ஃபாரா தம்பதிகளின் மகன் ரேசா. எளிமையானவர்.





மறைந்த ஷா மன்னரை உரித்து வைத்தது போன்ற தோற்றம் கொண்டவர்.

ரேசாவுக்கு தந்தை என்ற கடமையோடு ஈரானின் அரசியல் சாசன முடி மன்னனாக அயல் நாட்டில் இருப்பதால் அரசியல் கடமைகளும் இருக்கின்றன.

"என்ன பணிகள் இருந்தாலும் குடும்பத்திற்கு நேரம் ஒதுக்குவேன்" என்கிறார்.

மகள் நூருக்கு புட்டிப்பால் கொடுப்பதில் இருந்து சகல குடும்பப் பொறுப்புக்களையும் மனைவி யாஸ்மினுடன் பகிர்ந்து கொள்கிறார்.

பாரிய வீழ்ச்சியின் பின்னரும் மன்னர் ஷாவின் குடும்பம் பட்டமரம் ஆகவில்லை.




# இளம் முகங்களோடு களம் காணவரும் இலங்கையில் இளம்புயல்!

## ஸ்போர்ட்ஸ்

இலங்கைக்கு இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு வரவிருக்கின்றது.

இந்தியக் கிரிக்கெட் அணியில் பல புதுமுகங்கள் இத்தடவை இடம் பெறுகின்றன. இப்புது முகங்கள் வயதில் குறைந்த இளம் முகங்களாகவும் காணப் படுகின்றன.

பந்துவீச்சாளர்களாகவும், துடுப்படி வீரர்களாகவும் இடம் பெறும் இந்த புது இளைய புதுமுகங்களுக்கெல்லாம் மகுடம் வைத்தது போலவே வீரர் சச்சின் டென்டுல்கர் இத்தடவை இந்திய அணியில் இடம் பெறுகிறார்.

இந்திய அணியில் ஒரு பிரமிக்கத்தக்க துடுப்படி வீரராக இருக்கும் சச்சின் டென்டுல்கருக்கு இலங்கை விஜயம், மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே இருக்கும்.

ஏனெனில் இலங்கை வரும் இந்திய கிரிக்கெட் அணியின் உப காப்டனாக சச்சின் டென்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வரலாறு மிகவும் பாரம்பரியமிக்கதொன்றாகும். ஆனால் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை காலமும் இடம் பெற்றிருக்காத வகையிலேயே வயதில் மிகவும் குறைந்த, அதாவது 19 வயதேயான சச்சின் டென்டுல்கர் இந்திய அணியின் உப காப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் ஆட்டத்தினால் கவரப்பட்ட பம்பாய் நகரத்தில் பிறந்தவரே இந்த இளம் வீரர் சச்சின் டென்டுல்கர்.

கிரிக்கெட்டினால் ஆட்டிப் படைக்கப்பட்ட நகரமாக விளங்கும் பம்பாயில் மாடிவீட்டில் வதியும் பணக்காரர்கள் முதல், நடைபாதையில் காலத்தைக் கழிக்கும் ஏழைமக்கள் வரை அனைவருமே கிரிக்கெட் வீரர்களை தமது ஹீரோக்களாக கருதுகின்றனர்.

பம்பாயின் மூலை முடுக்குகளிலெல்லாம் எந்த நேரத்திலும் சிறுவர் கூட்டம் கிரிக்கெட் விளையாட்டில் மூழ்கியிருப்பது அன்றாட நிகழ்ச்சியாகும்.

எனவே, இந்த பம்பாய் நகரில் பிறந்த சச்சின் டென்டுல்கர் சிறுபிராயத்திலேயே பாடசாலை நாட்களில் சிறந்த கிரிக்கெட் வீரராகப் பிரகாசித்து தற்போது இந்திய அணியின் தலைமையை எட்டிப் பிடிக்குமளவுக்கு ஓர் உன்னத வீரராக உயர்ந்துள்ளார்.

இந்திய அணியில் மட்டுமல்லாது உலக கிரிக்கெட் வீரர்கள் வரிசையிலும் டென்டுல்கர் தமக்கென ஒரு சிறப்பிடத்தைப் பிடித்துள்ளார்.

இன்று உலகில் முன்னணியில் விளங்கும் துடுப்படி வீரர்கள் வரிசையில் சச்சின் டென்டுல்கரும் ஒருவராவார்.

சச்சின் டென்டுல்கரின் திறமையை அவதானித்த இங்கிலாந்தின் பிரபல கிரிக்கெட் விளையாட்டுக் கழகமொன்று கடந்த ஆண்டில் சில மாதங்கள் வரை அவரைத் தனது விளையாட்டு வீரராகவும் வைத்திருந்தது. இதற்கென பெருமளவு பணத்தையும் டென்டுல்கருக்கு அந்த விளையாட்டுக்கழகம் வழங்கியிருந்தது.

இந்திய அணி அண்மைக் காலங்களில் வெற்றிகளையும், தோல்விகளையும் சந்தித்த ஓர் அணியாக விளங்கியிருந்தது. ஆனால் இந்த அணியில் இடம் பெற்றிருந்த டென்டுல்கரின் பங்களிப்பு அபாரமானதாகவும், தோல்வியிலும் இந்தியாவின் பெருமையை உயர்த்திப் பிடிப்பதாகவும் அமைந்திருந்தது.

இந்திய கிரிக்கெட் அணியின் உப காப்டன் என்ற உயர்ந்த தரத்துக்கு வந்துள்ள போதிலும் இளவட்டங்களுக்கு இருக்கும் ஆசைகள் சச்சின் டென்டுல்கரையும் விட்டுவைப்பதாக இல்லை.

பொழுதுபோக்கான நேரங்களில் தனது டேப் றெக்கோடரில் ஆங்கிலப் பாடல்களைக் கேட்பது, விதவிதமான ஆடைகளை அணிவது போன்றன டென்டுல்கருக்குரிய ஆசைகள்.

இந்திய அணியின் அபிமானிகள் மற்றும் முன்னாள் கிரிக்கெட்வீரர்கள் ஆகியோரும் டென்டுல்கரை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். பணிவு, திறமை, ஒற்றுமை மனப்பான்மை போன்ற பண்புகள் டென்டுல்கரிடம் வெகுவாகக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக சக விளையாட்டு வீரர்கள் மத்தியிலும் டென்டுல்கர் விசேட இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் காப்டனும், சர்வதேச ரீதியாக இந்தியாவுக்குப் புகழை ஈட்டிக் கொடுத்தவருமான சுனில் கவாஸ்கரும் இந்தியாவின் பம்பாய் நகரத்தையே சேர்ந்தவராவார்.

எனவே தமது நகரத்தைச் சேர்ந்த டென்டுல்கரைத் தமது வாரிசாகவே கவாஸ்கர் கருதி வருகின்றார். கூடவே டென்டுல்கரைத் தட்டிக் கொடுத்து அவ்வப்போது அவருக்கு உற்சாகத்தையும் கவாஸ்கர் வழங்கிவருகின்றார்

சச்சின் டென்டுல்கரும் கவாஸ்கர் மீது அபாரமதிப்பு வைத்துள்ளார். கவாஸ்கரின் கிரிக்கெட் ஆட்டமே தமது கிரிக்கெட் வாழ்க்கைக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்ததென இளம் வீரர் டென்டுல்கர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அடுத்த மாதம் உபகாப்டன் என்ற தரத்தில் வரவிருக்கும் டென்டுல்கரைப் பற்றி இலங்கைக் கிரிக்கெட் வட்டாரத்தில் மும்முரமாகப் பேசப்படுகின்றது. இலங்கையில் அவரது ஆட்டம் கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு விருந்தாகவே இருக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது.





## மாஜிக் ஜோன்சன் ஐஸ்கிறீம் தாசன்

உலகப் புகழ் பெற்ற மாஜிக் ஜோன்சன் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கவே விரும்புகிறார். ஐஃகிரீம் சுவைப்பதென்றால் அவருக்கு அலாதிப்பிரியம்.

பார்சிலோனோ ஒலிம்பிக் போட்டியின்போதும் அவர் ஐஸ்கிரீமும் கையுமாகத்தான் இருந்தார்.

அவருக்கான பரிசோதனைகள் நடைபெறும் போதும் ஐஸ்கிரீமை அவர் பதம் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்.

ஒவ்வொரு சிறந்த வீரனும் தனக்கான ஓய்வை எப்படியோ தேடிக்கொள்கிறான். மாஜிக் ஜோன்சனும் அப்படித்தான்.



www.padippakam.com







## அதிரடி நாயகன்

பொலிஸ் ஸ்ரோரி பாகம் மூன்று கடந்த ஆண்டின் தங்கக் குதிரை விருதை ஜாக்கிசானுக்கு பெற்றுக் கொடுத்தது.

இலங்கை ரசிகர்களையும் ஜாக்கிசான் தன் அதிவேக அதிரடி நடிப்பால் கவர்ந்து கொண்டவர்.

ஜாக்கி சானுக்கு இப்போது 39 வயதாகிறது.

கடந்த ஆண்டில் தைப்போவில் நடந்த திரைப்பட விழாவில் சிறந்த நடிகராக தெரிவான ஜாக்கிசான் நடித்துக் கொண்டிருக்கும் போதே தனக்கு சாவு வரும் என்கிறார்.

பொலிஸ் ஸ்ரோரி பாகம் ஒன்றும் இரண்டும் ஏற்கனவே இலங்கையின் பெரும் வரவேற்பைப் பெற்றன. பாகம் மூன்றும் வரவேற்பும் பெறும்.



## ஃபாசன்



## இவர் அவர் அல்ல

படத்தில் இருப்பது உலகப் பிரபல நகைச்சுவை மன்னர் சார்லி சாப்ளின் என்று நீங்கள் நினைத்தால் அது தப்புக்கணக்கு.

சார்லி சாப்ளின் மறைந்தாலும் அவர் புகழ் மறையவில்லை. தமிழ்ப் படங்களில் எம்.ஜி.ஆர். [illegible] பின்பற்றுவது மாதிரி ஹொலிவூட் திரையுலகில் சார்லி சாப்ளின் [illegible] நகைச்சுவை நடிகர்கள் பின்பற்றுகின்றனர்.

இங்கே படத்தில் இருப்பவர் ரொபேர்ட் டவுனி. சார்லி சாப்ளினைப் போன்ற தோற்றமுடையவர்.

[illegible]



துணைவி டெபி பால்க்னெர்





சாப்ளின் ஆக டவுனி



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் ஏ.டி. எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20, வெல்லவ, நாவலவில் உள்ள சமவல அச்சகத்தில் ஜூலை மாதம் 4ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.